T. 1284

தமிழகராதியின் ஆதாரநூற்றொகுதி—௨

திருச்செந்தூர்

அருமருந்தைய தேசிகர்

இயற்றிய

# அரும்பொருள் விளக்க நிகண்டு.

சென்னைச் சர்வகலாசாலைத்

தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்

**S. வையாபுரிப் பிள்ளை**, B.A., B.L.,

பரிசோதித்தது.

செந்தமிழ்ப் பிரசுரம்—௫௬.

மதுரைத்

தமிழ்ச்சங்க முத்திராசாலை.

1931

# உள்ளுறை.


| | | பக்க எண். |
|---|---|---|
| I | முன்னுரை | 1 – 32 |
| II | அரும்பொருள்விளக்கநிகண்டு | ௧ – ௧௧௭ |
| | 1. பாயிரம் ... ... ... | ௧ – ௨ |
| | 2. ககரவெதுகை ... ... | ௩ – ௧௦ |
| | 3. ஙகரவெதுகை .... ... | ௧௧ – ௧௩ |
| | 4. சகரவெதுகை ... ... | ௧௪ – ௧௮ |
| | 5. ஞகரவெதுகை ... ... | ௧௮ – ௨௦ |
| | 6 டகரவெதுகை ... .... | ௨௦ – ௩௦ |
| | 7 ணகரவெதுகை ... ... | ௩௦ – ௩௮ |
| | 8. தகரவெதுகை ... ... | ௩௮ – ௪௭ |
| | 9. நகரவெதுகை ... ... | ௪௭ – ௫௦ |
| | 10. பகரவெதுகை ... ... | ௫௦ – ௫௩ |
| | 11. மகரவெதுகை ... ... | ௫௩ – ௫௮ |
| | 12. யகரவெதுகை ... ... | ௫௯ – ௬௩ |
| | 13. ரகரவெதுகை ... ... | ௬௪ – ௭௮ |
| | 14. லகரவெதுகை ... ... | ௭௯ – ௮௭ |
| | 15. வகரவெதுகை ... ... | ௮௮ – ௯௩ |
| | 16. ழகரவெதுகை ... ... | ௯௪ – ௯௮ |
| | 17. ளகரவெதுகை ... ... | ௯௯ – ௧௦௪ |
| | 18. றகரவெதுகை ... ... | ௧௦௪ – ௧௧௧ |
| | 19. னகரவெதுகை ... ... | ௧௧௨ – ௧௧௭ |
| III | அநுபந்தம் I ... ... | ௧ – ௮ |
| IV | ஷை II ... ... | ௧ – ௨௯ |
| V | ஷை III ... ... | ௩௦ – ௩௩ |
| IV | பிழைதிருத்தம் ... ... | ௩௪ |

# அரும்பொருள்விளக்கநிகண்டு.

# முன்னுரை.

முற்காலத்தே தமிழ்கற்கப்புகுந்தார் இலக்கணம், நிகண்டு என்ற இருவகைக் கருவிநூல்களைக் கையாண்டுவந்தனர்.

கருவிநூல்கள்: நிகண்டு.

நிகண்டுகளில், ஒருசில ஒவ்வொருபொருளுக்குமுரிய பலபெயர்களையும் நெறிமுறையே கூறிச்செல்வன. அவை ஒருபொருட் பல்பெயர்த்தொகுதி எனப்படும். வேறுசில ஒவ்வொருசொல்லுக்குமுரிய பலபொருள்களையும் விரித்துச் சொல்லுவன. அவை ஒருசொற் பல்பொருட் பெயர்த்தொகுதி எனப்படும். இன்னுஞ் சில 'இருசுடர்' 'முக்குணம்' என்பனபோன்ற தொகைப் பெயர்கள் இன்னின்னபொருள்களை யுணர்த்துகின்றன வென்று முறையே விளக்குவன. அவை பல்பொருட்கூட்டத் தொரு பெயர்த்தொகுதியெனப் பெயர்பெறும். இவற்றுள், ஒருசொற் பல்பொருட் பெயர்த்தொகுதிக்கு மண்டலபுருடரியற்றிய சூடாமணி நிகண்டின் 11-ம் தொகுதி சிறந்ததொரு எடுத்துக்காட்டாக வுள்ளது. இத்தொகுதியை முன்மாதிரியாகக்கொண்டு செய்யப்பட்டதாகும் இப்போது என்னால் வெளியிடப்பெறும் அரும்பொருள்விளக்கநிகண்டு.

தொல்காப்பியம்: உரிச்சொல்லியல்.

இத்தொகுதியின் சரித்திரவாலாறு நன்கு ஆராய்ந்துணர்தற்குரியது. தொல்காப்பியப் பெருநூலின்கண்ணேயே இதற்குரிய தோற்றுவாய் இனிது புலப்படுகின்றது. அந்நூலிலே, சொல்லதிகாரத்தில், உரிச்சொல்லியற் சூத்திரங்களிற் சிலவற்றையும் அவை அமைந்துள்ள முறையையும் நோக்கினால் யான் கூறியதன் உண்மை வெளிப்படும். ஒருதாரணங் காட்டுகின்றேன்:

'செழுமை வளனுங் கொழுப்பு மாகும்
விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்'

இவ்வடிகளில், 'செழுமை' 'விழுமம்' என்ற இரண்டு சொற்களுக்குமுரிய பலபொருள்களும் உணர்த்தப்படுகின்றன. அவ்வாறு உணர்த்துதலோடமையாது எதுகைநயத்தால் இவ்வடிகள் இன்புறுத்துகின்றமையும் நாம் மனங்கொளற்குரியது. இவ்வுரிச்சொல்லடிகளின் பொருளமைதியும் எதுகைநயங்களுமே வரவரப் பலவாறாக விருத்தியடைந்து நிகண்டுநூல்களில் தனியே விளங்குவனவாயின. தொல்காப்பியத்திற்குப் பின்னரே தமிழில் நிகண்டுநூல்கள் தோன்றினவாகும்.

அவ்வாறு தோன்றியவற்றுள் திவாகரம், பிங்கலம் என்ற அரிய நிகண்டுகளிரண்டும் மிக முற்பட்டனவாம். திவாகரத்தில் ஒருசொற் பல்பொருட்பெயர்த்தொகுதியாகிய பதினோராந்தொகுதியொன்றே ஈண்டு ஆராய்தற்குரிய இயைபுடையது. இத்தொகுதியைப் பதிப்பித்துள்ளோர், திவாகரர் அமைத்துவைத்த முறைப்படி சூத்திரங்களை அமைக்காது 'ஆதியிற்பொருள்' 'அந்தத்துப்பொருள்' என்று இருகூறுபடுத்து ஒவ்வொன்றன்கண்ணுமுள்ள சூத்திரங்களை அகராதிக்கிரமத்தில் அமைத்து வெளியிட்டனர். திவாகரம். பொருளை விளக்குதற்கு எடுத்துக்கொண்ட சொல் சூத்திரத்தின் ஆதியில் வருமாயின், அஃது ஆதியிற்பொருள். உதாரணமாக, 'அங்கதந் தோளணியரவு மாகும்' என்ற சூத்திரத்தைக் காண்க. அச்சொல் சூத்திரத்தின் இறுதியில் வருமாயின், அஃது அந்தத்துப்பொருள். உதாரணமாக, 'கடலு நிலனுஞ் சேறு மளக்கர்' என்ற சூத்திரத்தைக் காண்க. இம்முறை பதிப்பித்தோர் தாமாகவே வகுத்துக்கொண்டதென எண்ணுதற்கிடமில்லை. ஏனெனின், இற்றைக்கு 229 வருடங்கட்குமுன்னர் (கொல்லம் 877 (ஆடல்) எழுதப்பெற்ற ஏட்டுப்பிரதியில் இம்முறையே காணப்படுகின்றது. அதற்கு எவ்வளவுகாலத்துக்குமுன் இப்புதியமுறை யேற்பட்டதென வரையறுத்துக் கூறற்குரிய சான்றுகள் இல்லை. ஆனால் திவாகரர் அமைத்த முறை இதுவன்றென்பது திண்ணம். இத்தொகுதியை அகராதிபோற் பயன்படச்செய்யவேண்டுமென்ற கருத்துப் பிறந்த பிற்காலத்தேதான் இம்முறை தோன்றியிருத்தல்கூடும். இம்முறைதானும் பிரதிகடோறும் சிற்சில வேறுபாடுகளுடன் உள்ளது. சில ஏட்டுப்பிரதிகளில் இவ்வகராதிமுறையின்றி ஆசிரியர் வைத்தமுறையென்று நாம் கொள்ளக்கூடிய பிறிதொருமுறை காணப்படுகின்றது.

இவ் விரண்டாவது முறையில் வேறுபாடுகளும் பிரதிகளிற் காணப்படுமா தில்லை. அம்முறையை அடியிற் காண்க:—

280. ஊறே யிடையூறு முற்றறி புலனும்.

281. நூறே பொடியு நூறு மாகும்.

282. ஏணி யுலகு மெல்லையு மாகும்.

283. சேணே யுயர்வு நீளமு மாகும்.

284. ஆலுத லாடலு மொலியு மாகும்.

285. நூலே யெண்ணும் பனுவலு மாகும்.

இவ்வடிகளை நோக்கிய அளவில் இவையும் எதுகைநயம் பெற்று அமைந்துள்ளனவென்பதும் பல்பொருட்சொற்களே எதுகைச்சொற்களாய் வந்துள்ளனவென்பதும் வெளியாம். இத்தொகுதியிலுள்ள சூத்திரங்கள் பெரும்பாலும் இவ்வாறே இயன்றுள்ளன. தொல்காப்பிய வுரிச்சொல்லியலிற் சுருங்கிய அளவிற் காணப்படும் முறை இங்கே விரிந்த அளவிற் காணப்படுவது உணரத்தக்கது.

திவாகரத்திற் பிறதொகுதிகளெல்லாம் அவ்வத் தொகுதிக்குரிய பொருட்பாகுபாட்டினைப் பின்பற்றி யமைந்துள்ளன. 11-ம் தொகுதியில் அவ்வகைப் பாகுபாடு இருத்தற்கிடமில்லை. பல்வேறு பொருள்களையுடைய சொற்களே ஈண்டு ஓதுதற்குரியன. இச் சொற்கள் ஞாபகத்தில் அழுந்தித் தங்கக்கூடிய ஒருமுறையில் அவற்றை அமைப்பதே தக்கதாகின்றது. இக்காரணம்பற்றியே எதுகைநயத்தோடு இத்தொகுதியிலுள்ள சூத்திரங்கள் வகுக்கப்பட்டனவென ஊகித்தல்கூடும். வேண்டுஞ் சொற்களின் பொருள்களை எளிதில் நோக்கி யுணர்ந்துகோடற்கும் இவ்வெதுகைநயம் உதவுகின்றமை வெளிப்படை.

பிங்கலந்தை. பிங்கலந்தையிற் பல்பொருளொருசொல்லைக் கூறுவது 10-வது தொகுதியாம். இதனை அச்சியற்றிய சிவன்பிள்ளையவர்கள் பிங்கலர் கொண்டமுறையைக் கைவிட்டு, அகராதிக்கிரமத்திற் சொற்களை நிறுத்தி அவற்றிற்குரிய சூத்திரங்களை முறைபெறவைத்து வெளியிட்டுள்ளார்கள். எனக்குக் கிடைத்த பிரதிகளில் ஒன்றிலேனும் அகராதி முறை காணப்பெறவில்லை. சூத்திரங்களின் வைப்புமுறையை மாற்றப் பதிப்பாசிரியர்க்கு எவ்வகை ஆதாரம் கிடைத்ததோ

அறியக்கூடவில்லை. யாவரும் எளிதில் நோக்கியறிதற்குரிய அகராதிக் கிரமத்திலிருந்தாலன்றி இத்தொகுதி பயன்படுதலரிதென்று கருதிப் பதிப்பாசிரியர் தாமாகவே ஏட்டுப்பிரதிகளிற் காணப்படும் முறையை மாற்றியிருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. பிங்கலர் வைத்துள்ள முறையும் உணர்ந்துகோடற்கு எளிதன்று. கொல்லம் 981-ம௵ தை மீ 19உ குருவாரத்தன்று எழுதிமுற்றியதும், ஆழ்வார்திருநகரித் திருமேனி இரத்தினகவிராயர்வமிசபரம்பரையினரிடமிருந்து எனது நண்பர் பெரியன் ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள் பேருதவியாற் கிடைத்ததுமாகிய, ஏட்டுப்பிரதியிற் கண்ட முறைப்படி முதன்மூன்று சூத்திரங்கள் தருகின்றேன்.

1. துங்க மலையு நிலையுந் தூணுஞ்
சங்கரன் பெயருந் தாணுவாகும்.

2. இரவியு மெனையா ளீசன் பெயரும்
ஒருநாண் மீனு மொழியுஞ் சோதி.

3. ஆதி பழைமையு மானது நாமமு
முதலுநே ரோட்டமு மொழியப் படுமே.

இங்கே ஒரு நுண்ணியவிஷயம் நன்கு விளங்குகிறது. தாணு, சோதி, ஆதி முதலிய சொற்கள் பிங்கலந்தையிலுள்ள வானவர்தொகுதியிற் சிவனுக்குரிய பெயர்களாக ஓதப்பட்டுள்ளன. இவற்றை நோக்கியவளவில், 10-வது தொகுதிக்குரிய சொற்களைத் தாம் இயற்றியுள்ள முதல் ஒன்பது தொகுதிகளினின்றும் குறித்தவொருமுறைபற்றித் தெரிந்தெடுத்து நிறுத்து, நிறுத்தமுறையில் அவற்றின் பொருள்களைச் சூத்திரித்துப் பிங்கலர் இத்தொகுதியை அமைத்துள்ளாராதல்வேண்டும். நாம் இங்கே குறித்துணரவேண்டுவது பிங்கலந்தையில் 10-வது தொகுதிக்கண்ணுள்ள சூத்திரங்கள் எதுகைநயம்பெற அமைந்துள்ளனவேனும், பொருள்விளக்கப்படவேண்டும் பல்பொருட்சொற்கள் எதுகைநெறியில் அமையவில்லையென்பதேயாம். இதனால், பிங்கலர்முறை பயனுடையதாயில்லை. அவர்முறையைப் பின்பற்றுவோரும் இலராயினர்.

வான்முறையே நூல்முழுதுங்கற்றுணரவேண்டும் ஆவசியகமின்றி, வேண்டும்போது எளிதிலே நோக்கியுணருதற்குரிய வொருகருவியாய் நிகண்டுகளை அமைக்கும் கருத்தே பிற்காலத்திற் பெரிதும் போற்றப்

பட்டுவந்தது. 11-ம் தொகுதியாகிய ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதியே இவ்வகையில் அமைவதற்கு மிக்க தகுதியுடையதாயிருந்தது. முதன்முதலில் *சூடாமணிநிகண்டுடையாரே எளிதில் நோக்கியுணருங் கருவியாயும் எளிதில் ஞாபகத்தில்வைக்கும் கருவியாயும் இத்தொகுதியை யாக்குதற்கு முயன்றவர். அந்நோக்கத்தினை முற்றுவித்தற்கு அவர் கைக்கொண்ட முறை ஊன்றி யுணரத்தக்கது. திவாகரத்திலிருந்து மேலே காட்டிய சூத்திரங்களை ஒரு முறை நோக்குக. அங்கே 280-வது முதல் 285-வது முடிய 6 சூத்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இச்சூத்திரங்களாறனுள், 3 எதுகைகள் காணப்படுகின்றன. இவ்வெதுகைகள் இத்தொகுதியில் வேறு பலவிடங்களிலும் மயங்கிக் கிடக்கின்றன. இங்ஙனமே மற்றை யெதுகைச் சொற்களும் பலவிடத்துஞ் சிதறிக் காணப்படுகின்றன. ஒரே எதுகையிலுள்ள சொற்களனைத்தையும் தொகுத்து ஒரேயிடத்திற் றரவேண்டியது மிக்க அவசியமாயிற்று. இதனை மண்டலபுருடர் தங் கூரிய நுண்மதியாலுணர்ந்து 11-ம் தொகுதி முழுவதையும் ககரவெதுகை முதல் னகரவெதுகையீறாக எதுகைமுறையிற் பாகுபாடு செய்தனர். "நடைபெறு ககர மாதி னகரவீ றெதுகை யாகப், படியிலோர் சொற்பொ ருட்பல் விதத்தொகை பகரலுற்றும்" என்றனர். இசையோடு கற்கக்கூடியதாயும் அதிகச் சொற்க ளடங்குதற்குரிய பாவினத்தாலியன்றதாயும் இத்தொகுதி இருக்குமாயின் ஞாபகத்தில் வைத்தற்குப் பெருந்துணையா யுதவுமென்பது கூறவேண்டா. இதனையுட்கொண்டு தங்காலத்துப் பெருவழக்கிலிருந்த விருத்தயாப்பினால் மண்டலபுருடர் தமது சிறந்த நூலை யியற்றினர்.

நிகண்டு சூடாமணி.

ஆனால் இந்நெறியில் நிகண்டு சூடாமணி முதன்முதற்றோன்றிய நூலாதலின், அதன்கண் ஒருசில குறைபாடுகள் நேர்ந்தன. 11-ம் தொகுதி இன்ன நெறியிற் செல்லவேண்டுமென்று ஆசிரியர் உய்த்துணர்ந்து எதுகைமுறையிற் பாகுபடுத்தினரேனும், ஓரெதுகையிற் பிறவெதுகைச் சொற்கள் விரவுதலின்றிச் செய்யுட்கள் அமையவில்லை. உதாரணமாகக் ககரவெதுகையில் முதற்செய்யுளில் மூன்றாவது அடி பின்வருமாறு உள்ளது:

*மண்டலபுருடர் தமது நூலுக்கு இட்ட பெயர் 'நிகண்டு சூளாமணி'யென்பது அவரது பாயிரச்செய்யுளால் விளங்கும்.

'மகரமே சுறுப்பூந் தாதாம் வசிகூர்மை வசியம் வாளே' இதன் கண், சகரவெதுகைச்சொல்லாகிய 'வசி' என்பதன் பொருளும் விரித்துணர்த்தப்படுகின்றது. பலவிடங்களிலும் இவ்வாறே எதுகை விரவிக்கிடக்கின்றது. விருத்தத்தின் ஒவ்வோரடியினும் பயின்றுவரும் மோனையுறுப்பு எதுகையின் கலப்பிற்கு ஒரு முக்கிய காரணமாயேற்பட்டிருக்கவேண்டும். குறைபாடுகளனைத்தினும் இதுவே நூலின்பயனை முற்றுவித்தற்கண் மிகப்பெரியதோர் இடையூறாக நிற்பது. ஒரு செய்யுளுக்கும் அதனை யடுத்துவருஞ் செய்யுளுக்கும் யாதோ ரியைபுமின்றியிருப்பது பிறிதொருகுறைபென்று சிலர் கருதுதலும் தகும். இதனால் மிக்க நினைவாற்றலுடையார்க்கன்றி ஏனையோர்க்கு எளிதில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதற் கரிதாயுள்ளது. அடைச்சொற் புணர்த்திப் பெயர்களைப் படித்திருப்பது பிறிதொரு குறைபாடாகும். இதனால், பொருளடைகளைப் பிரித்துணர்தற்கண் மயக்கம் உண்டாகின்றது. 310 செய்யுட்களடங்கிய ஒரு சிறுதொகுதியா யிருப்பதனாலே நாநார்த்தபதங்க ளனைத்தும் கூறப்பெறாமை மற்றொரு குறை. நோக்கியுணர் கருவிநூலா யமைந்ததற்கண்ணும் பற்பல குறைபாடுகள் உளவாயின. இக்குறைகள் பிற்காலத்தே பற்பல நிகண்டுநூல்கள் தோன்றுதற்குரிய அவசியத்தைப் பெரிதும் விளக்குகின்றன. நிகண்டு சூடாமணியைச் செப்பஞ்செய்யும் முயற்சியின்கண்ணேயே ஆசிரியர் பலர் முனைந்துநின்றனர்.

முதற்கண், நிகண்டு சூடாமணியிலே 11-ம் தொகுதியைப் பலவாறாகச் செப்பஞ்செய்த முயற்சிகளைக் கவனிப்போம். இத் தொகுதியொன்றே தமிழ்மக்களிடையிற் பெரிதும் பயிலப்பட்டுவந்தது. பாடங் கற்பித்த தமிழாசிரியர்கள் தாம் கற்பிக்கும் பிரதிகளில் தத்தமக்குத் தோற்றிய சிற்சில திருத்தமுறைகளைக் கையாளத்தொடங்கினர். இது உண்மை நிகண்டு சூடாமணியின் ஏட்டுப்பிரதிகளைப் பரிசோதிப்பதனால் விளங்கும். என்னிடமுள்ள ஓரேட்டுப்பிரதியிற் கலப்பெதுகைச் செய்யுட்கள் தனிப்பட்டும், பிற செய்யுட்கள் ஆதியிற்பொருள் அந்தத்திற்பொருள் எனப் பிரிக்கப்பட்டும் உள்ளன; இவ்விருவகைப் பாகுபாட்டிலும் எதுகைமுறை கையாளப்பட்டும் உள்ளது. இங்ஙனமே பல தமிழாசிரியரும் பற்பலமுறையிற் செப்பஞ்செய்தற்கு முயன்றிருப்பர் என்று ஊகித்தல் தவறாகாது.

மேலே குறித்த முயற்சி 11-ம் தொகுதிச் செய்யுட்களின் முறையைப் பற்றியது. அது மிகச் சுருங்கிய நூற்றொகுதியா மென்பது முன்னரே குறிக்கப்பட்டது. அதன்கட் கூறப்படாத ஒருசொற் பல்பொருட்பெயர்களையெல்லாம் தொகுத்து எதுகைமுறைபற்றிச் செய்யுட்கள் இயற்றி அச்செய்யுட்களை அந்நூலின் இடையிடையே கோத்து 11-ம் தொகுதியை நிரம்பியநூலாக அமைத்துவிடுதற்கும் பல ஆசிரியர்கள் முயன்றிருத்தல்வேண்டும். இவ்வகை முயற்சிகளுளொன்று நமது கைக்கு எட்டியிருக்கின்றது. சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கியவரும், சிறந்த வித்வானும், தமிழ்நூல்கள்பலவற்றை அச்சுவாயிலாக வெளியிட்டவரும் ஆகிய களத்தூர் வேதகிரிமுதலியா ரென்பவர் சூடாமணியிற் பதினோராம்நிகண்டினைப் புதுக்கிச் சுமார் 600 செய்யுட்களுள்ள தனி நூலாக அமைத்து உரையும் வகுத்து யாழ்ப்பாணத்துத் தமிழ்ச்சங்கத்தார்வாயிலாக 1842-ல் வெளியிட்டனர்.

வேதகிரியார் சூடாமணி

இனி, சூடாமணியைக்காட்டிலும் சிறந்த நிகண்டு நூல்களை இயற்ற வேண்டுமென்று துணிந்த தமிழாசிரியர்களுடைய முயற்சிகளைக் கவனிப்போம். அவருட் சிலர் 12 தொகுதியும் பூரணமாகவுள்ள நிகண்டுகளை இயற்றி 11-ம் தொகுதியிற் சிற்சில செப்பங்கள் செய்தனர்.

இவ்வகை நிகண்டுகளுள் முதலாவதாக எழுந்தது உரிச்சொல் நிகண்டு; இது வெண்பாவால் இயன்றது. சுன்னாகம் வித்வான் அ. குமாரசாமிப்பிள்ளையவர்கள் விசுவாவசு௵ (1905)-ல் வெளியிட்டபதிப்பில் 12 தொகுதிகள் உள்ளன. இதற்குமுன் வித்துவான் சிவன்பிள்ளையவர்கள் விகுர்தி௵ (1890)-ல் பிரசுரித்த பதிப்பிலும் 12 தொகுதிகளே யுள்ளன. ஆனால் இப்பதிப்பின் முன்னுரையில் ஒலிபற்றிய பெயர்த்தொகுதியும் பல்பொருட்கூட்டத்தொருபெயர்த்தொகுதியும் வழங்காதொழிந்தனவென்று எழுதப்பட்டுள்ளது. சிவன்பிள்ளையவர்கள் வெளியிடுவதற்குமுன்பு கி. பி. 1858-ம் ௵-ல் யாழ்ப்பாணம் ா. ரா. அருணாசலம் சதாசிவம்பிள்ளையின் பதிப்பொன்றும், கி. பி. 1810-௵-ல் புதுவை குவெர்னமா அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிட்ட பதிப்பொன்றும் இருந்தன. இவ்விருபதிப்புக்களிலும் எத்தனைதொகுதிகள் உள்ளன வென்று நிச்சயமாய் அறியக்கூடவில்லை.

உரிச்சொல் நிகண்டு.

இரண்டுதொகுதிகள்மட்டும் வழங்காதொழிந்தமைக்குத் தக்க காரணம் வேண்டும். நிகண்டுநூல்களின் பூர்வரூபத்தைத் திரித்துத் தமிழாசிரியர்கள் வழங்கிவந்துள்ளார்கள் என்பதை நோக்கும்போது இவ்விருதொகுதிகளையும் நூல்நிரம்புதல்வேண்டிப் பிற்காலத்தாசிரியரொருவர் நூதனமாகச் சேர்த்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. மதுரைத்தமிழ்ச்சங்கத்திலிருக்கும் உரிச்சொற்பிரதியில் ஒலிபற்றிய பெயர்த்தொகுதி காணப்படுகின்றது; ஆனால் 12-வது தொகுதி காணப்பெறவில்லை. இது 12-வது தொகுதி மிகப்பிற்படச் சேர்க்கப்பட்டதென்பதை உணர்த்துகின்றதுபோலும். எனக்குக்கிடைத்துள்ள ஏட்டுப்பிரதிகளில் 10 தொகுதிகளேயுள்ளன. இதனானும் ஆழ்வார்திருநகரித் தேவர்பிரான்கவிராயர்பிரதியிற் காணப்படும் 'உத்தம சீலத்துக் காங்கேயன் சொன்ன வுரிச்சொறன்னை, வைத்துமனத்து ................பராக்ரம பாண்டிய தேவன்கண்டீர்—பத்துத் தொகுதியிற் சேர்த்தா னெவரும் படித்திடவே' (நாமதீபநிகண்டு முன்னுரைபார்க்க) என்று வரும் கலித்துறையாலும் உரிச்சொல் 10 தொகுதிகளா லியன்றநூலென்பது வலியுறுகின்றதாகக் கொள்ளலாம்.

இஃதெவ்வாறுயினும் ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி உரிச்சொல்லாசிரியர்தாமே இயற்றியதென்றலில் ஐயமின்று. இத்தொகுதியில் 36 வெண்பாக்கள் உள்ளன; சுமார் 150 சொற்கள் பொருள் விளக்கப்படுகின்றன. எளிதின் மனனஞ்செய்தற்குத்தக்கபடி மிகவும் சுருக்கமாக இத்தொகுதி யமைந்துள்ளது. ஆனால், பல்பொருட்சொற்கள் இடத்திற்குத்தக வெண்பாவிலமையவேண்டும் நியதியொன்றனையே கொண்டன. வேறுயாதொருநியதிபற்றியும் அவை நிறுவப்பெறவில்லை.

இராமேசுரம் என்று வழங்கும் தேவைப்பதியில் இற்றைக்குச் சுமார் 250 வருடங்கட்குமுன் வாழ்ந்தவராகிய 'கேயாதரர்' என்ற அந்தணர் 'கேயாதரம்' என்ற நிகண்டுநூலொன்று இயற்றியுள்ளார். இதனை,

கேயாதரம்.

'களர்ந்தன நீக்கி யுரித்தாய சொல்லைத் தமிழ்ப்படுத்தான்,
கிளர்ந்த பெரும்புகழ்ச் சோமீசன் றேவைக் கேயாதரனே.'

'வடக்குங்கு மக்கொங்கை மங்கைதன் பங்கன் மலரடிக்கீழ்க்
கிடக்குந் தனிநெஞ் சுடையோ னுரிச்சொற் கிளர்பனுவல்

குடக்குங் குணக்கும் வடக்குந்தென் பாலுங் குவலயத்து
நடக்கும் படியாக் கெயாதர* மென்றுபேர் நாட்டினனே.'

என்ற செய்யுட்களால் அறியலாகும். இந்நூலின்கண் 11 தொகுதிகளே யுள்ளன. இது கட்டளைக்கலித்துறையில் அந்தாதியாக அமைந்துள்ளது. 11-ம் தொகுதியும் இங்ஙனமே அமையப் பெற்றிருக்கின்றது. உதாரணமாகக் கீழ்வரும் இரண்டு செய்யுட்களைக் காண்க:

'அரிகடல் மால்பன்றி யாயுதம் பச்சை யளியருக்கன்
எரிபுகை கிண்கிணி பெய்பலம்மை யமன்கிளிகண்
வரிவலி யிந்திரன் மாருத நேமி மடங்கல்மது
பரிபகை செந்நெற் கதிர்தேரை வானரம் பாம்புபொன்னே.'

'பொன்னே யிரும்பு சுரர்குரு மாடை பொலிவுதிரு
வென்னே ரமுதும் முழுப்பெற் றமுமெல் லொளிபகலாங்

* [இதனைக் 'கயாகரம்' என்றும் வழங்குவர். வேதகிரிமுதலியார் வெளியிட்ட இலக்கியக் களஞ்சியத்தில் '**கயாகர நிகண்டு**' என்ற தலைப்பின்கீழ் அடியில்வருஞ் செய்யுள் கொடுக்கப்பட்டுள்ளது.

'பரிதியா தித்த னிமகரன் பதங்கன் பனிப்பகை விண்மணி யென்றாழ்
அருணன்மார்த் தாண்டன் பாற்கரன் கதிரோ னாயிரங் கதிரினன் றபனன்
இருள்வலி சண்டன் சூரியன் மித்திரன் எல்லியம் போருக நண்பன்
தருமொளி வேந்தன் சூரனே சவிதா தரணிகண் சுடரவ னென்பார்'.

கெயாதரம் கலித்துறையாலியன்ற நூலென்பது எனக்குக் கிடைத்துள்ள வெட்டுப்பிரதிகளால் உணரக்கிடக்கின்றது. சென்னைப் பிராசீன கிரந்தசாலையின்கண்ணுள்ள நூல்களின் பட்டிகையொன்றில் ஆசிரியர்பெயரறியப்படாத நிகண்டொன்றினைப்பற்றி வரைந்துள்ள குறிப்பும் இதனையே வற்புறுத்துகின்றது. வேதகிரிமுதலியார் காட்டுஞ் செய்யுள் எதன்கண் உள்ளதோ அறியக்கூடவில்லை. இங்ஙனமே **ஏகபாதநிகண்டெ**ன வொன்றைக் காட்டி அதினின்றும் பின்வருஞ் செய்யுளைக் கொடுத்துள்ளார் :

'அத்திரி யொட்டகம் விண்ணுங் கருணையுமாகு மென்பர்
அத்திரி மாவும் வரையுங் கழுதையு மாகுங் கண்டாய்
அத்திரி திக்கயந் தன்னுடனே மிக்க வஞ்சனமாம்
அத்திரி தானுங் கறுப்புமென் றோதுவ ரான்றவரே'.

இவ்வகைச் செய்யுளடங்கிய நூலை **ஏகபாதநிகண்டெ**னக்கூறுதல் ஏற்புடைத்தன்றெனல் வெளிப்படை. இந்நூலைக் குறித்தும் யாதும் அறியக்கூடவில்லை.]

தென்னே வனப்பு மிசைபா டலுந்தென் றிசையுமென்ப
கொங்னே பெருமை பயனிலி யச்சங் கொளும்பொழுதே.'

இவ்வாறாக அந்தாதித்தொடையில் அமைந்திருப்பது ஞாபகத்தில் வைத்துக்கோடற்குப் பெரியதொரு துணையாகும். இம்முறையாலும் வேறு பல நயங்களாலும் இந்நூல் சூடாமணிநிகண்டினும் சிறந்த தென்றுகொள்ளுவார் மிகப் பலர்.

பாரதி தீபம்.

கெயாதரத்தைப்போலவே கட்டளைக்கலித்துறையில் அமைந்த பிறிதொரு நிகண்டுநூல் 'பாரதிதீபம்'. ஆனால் இது அந்தாதித்தொடையில் அமைந்ததன்று. இதனை யியற்றியவர் தென்கடம்பை நகரினராகிய திருவேங்கடபாரதி யென்பது,

'மீன்றுவு வாவிக் கடம்பையில் வாழ்திரு வேங்கடவன்
ஏன்றுதல் கூறுங் கவிவேந்தன் பாரதி யேற்றமலர்த்
தேன்றாழ் தொடைப்புயன் செப்பிய பாரதி தீபந்தன்னில்
மூன்று வதுவிலங் கின்பேர்த் தொகுதி முடிந்ததுவே'

என்ற செய்யுளா லறியலாகும். ஆசிரியர்காலம் 18-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியாயிருக்கலாமென்று தோன்றுகிறது. இந்நூலிலுள்ள செய்யுட்களின்பெயர்கள் பெரும்பாலும் அடைமொழியின்றிக் காணப் படுகின்றன. உதாரணமாக,

'அரனிறை வன்சிவன் சங்கா னித்த னமலன்கங்கா
தரனுமை பங்கன் மலைவில்லி தற்பரன் றாணுச்சம்பு
புராதக னன்புனி தன்பிறை சூடி புலியதளோன்
பாசுத ரன்கபி லாயன் கபாலி பசுபதியே'

என்ற செய்யுளைக் காண்க. அடைமொழி யின்றிப் பெயர்களை யமைத்தும் பொருட்பெயர்களை மிகுதியாகத் திரட்டியும் செப்பமிக இந்நூல் இயன்றுள்ளது.

அடிமிக்கதொரு பாவினத்தால் பொருட்பெயர்களை மிகுதியாக வுட்கொண்டு, எளியநடையா லியன்று இக்காரணங்களாற் சூடாமணியி

ஆசிரிய நிகண்டு

னுஞ் சிறப்பெய்தி விளங்கும் பிறிதொருநூல் 'ஆசிரிய நிகண்'டாகும். கெயாதரத்தைப்போலவே இதன்கண்ணும் 11 தொகுதிகளே யுள்ளன. இதனையியற்றியவர் தொண்டைநாட்டு ஊற்றங்காலென்னும் ஊரினரும், வளையறுப்போர்

குலத்தினரும், பாவாடைவாத்தியாரின் புத்திரரும், ஞானப்பிரகாசகுருவின் சீடருமாகிய ஆண்டிப்புலவர். நக்கீரரென்பதும் சாதிபற்றியிவர்க்கு வழங்கிய பெயர். இது,

"மன்னுசெஞ் சிச்சீமை சூழ்தொண்டை வளநாட்டில்
வாய்த்த*வூற் றங்காலில்வாழ்
வளையறுப் போர்குலன் பாவாடை வாத்தியார்
மைந்தனும் நற்கீரனே"

"மண்ணுளோ ரறியப் பருத்தனன் கபிலையான்
வடிவெடுத் தைந்தெழுத்தின்
மந்த்ரவுப தேசஞ்செய் ஞானப்ர காசகுரு
வனசமல ரடிசூடுவோன்"

என்று வருவனவற்றால் உணரலாகும். இதன்கண் 11-ம் தொகுதி செவ்வையாக அமைந்துள்ளதென்றே கூறவேண்டும். சொல்லின் பொருள்கள் பெரும்பாலும் எண்களால் வரையறுத் துணர்த்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக,

"கஞ்சமிகு தீபமோர் தகழிவட் டம்படைக்
கலமேறு தாளமுடனே
கட்டிலெட் டும்பாண்டி லென்பர்செல் வம்பெருமை
கருமைமண் டிலம்விலங்கு
சஞ்சரிக மிகவெறுப் பொடுகமலை வரவழைத்
தல்பிண்டி பத்துமாவென்
றாகும்வெறி யாட்டுநாற் றங்கலக் கத்துடன்
சாறுவெம் பேய்வெருவுதல்
எஞ்சல்பெறு வட்டமொடு துருவைபிரு நாலும்வெறி
யெழுமோசை பற்றுநாடூர்
எற்றகா தலநெடும் போதுபுனல் சோலைபல்
லியம்பண்ட மிவைபூர்ணியாம்

*'ஊற் றங்காலெனு, மாநகர்க் கதிபனுயர் பாவாடை வாத்தியார் மைந்தனுண் டிப்புலவனே' என்று மதுரைத்தமிழ்ச்சங்கத்துப்பிரதிகளிற் காணப்படுகிறது.

செஞ்சோலா வணங்கோட ரம்புனற் கரைபாகல்
திகழ்விலங் கின்வால்பசுச்
செய்வரம் பிவைகூல மென்று* முத் தமிழ் முனி
செப்புமிப் பொருளாகுமே"

என்ற செய்யுளைக் காண்க.

மேற்குறித்த நூல்களெல்லாம் நிகண்டுநூ லென்ற ஓரளவில் அமைந்துநின்று சொற்பொருட்பெருக்கத்தாலும் ஞாபகத்திற்குதவும் தொடைநயத்தாலும் அடிமிர்ந்துசெல்லும் பாவினத்தாலும் பலவாறு செப்பமுற்றுவிளங்குவன. நிகண்டுகட்கும் தற்காலத்துவழங்கும் அகராதிகளுக்குமுரிய நெருங்கியதொடர்பினை யுணர்ந்து, அகராதிமுறையே இனிப் பிற்காலத்து வேண்டப்படுவதென்பதனை நன்கு தெளிந்து, அம்முறையில் நூலியற்றிய ஆசிரியர்களுடைய முயற்சிகளைக்குறித்து இனி விசாரிப்போம்.

நிகண்டுநூலை அகராதியாக விரித்து இயற்றமுயன்ற ஆசிரியர்கள் 16-ம் நூற்றாண்டின் இறுதியிலே தோன்றுவாராயினர். இவர்களுள்ளே காலத்தானும் பெருமையானும் முற்பட்டு விளங்குபவர் சிதம்பர ரேவணசித்தர் ஆவர். இவர் உபகரித்த நிகண்டு கி. பி. 1594-ல் இயற்றப்பெற்றதென அதன் பாயிரத்தால் அறியக்கிடக்கின்றது. இந்திய தேசசரித்திரத்தில் 16-ம் நூற்றாண்டினிறுதி மேனாட்டார் வரவுக்காலமாய்ச் சரித்திரகதியையும் நாகரிகப்போக்கினையும் மாற்றிப் பலவகை யுறுதிநலங்களையும் விளைத்தற்குரிய அங்குரார்ப்பணகாலமாய் அமைந்துநின்றதுபோலவே, தமிழ்மொழிச் சரித்திரத்தின்கண்ணும் அஃது அத்துணைச் சிறப்புடையதாயமைந்திருப்பது உய்த்துணரத்தக்கது. இரேவணசித்தர் எழுதிய நிகண்டுநூலின்பெயர் அகராதிநிகண்டென்பது. பெயருக்கேற்ப இந்நிகண்டு அகராதிக்கிரமத்தில் அமைந்திருக்கின்றது. தமிழ்க்கருவிநூல்களுள் இந்நிகண்டுதான் முதன்முதலாக இவ்வாறு அமைந்துள்ளது. எளிதிலே நோக்கியுணர்தற்குற்ற இம்முறை 11-ம் நிகண்

அகராதி நிகண்டு.

* 'முத் தமிழ்வலோர் செப்புமிப் பெயராகுமே,' 'முத் தமிழோர்கள் செப்புமிப் பெயராகுமே' என்று மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பிரதிகளிற் காணப்படுகிறது.

டின் விருத்தியம்சமேயென்பது தெளிவாம். இம் முறையைத் தமிழிற் கொணர்ந்ததுதானும் யாவராலும் போற்றத்தகும் ஓர் அரிய செயலாம். இதன்மேலும் அகராதியென்று தற்காலத்திற் பிரசித்தமாய்வழங்கும் பெயரினை முதன்முதல் ஆக்குவித்து ஆட்சியிற்கொணர்ந்த பெருமையும் இரேவணசித்தர்க்கே உரியது. அகராதி என்ற புதுச்சொல்லினையும் நிகண்டு என்ற பழஞ்சொல்லினையும் ஒன்றாக இயைத்து அருசி தோன்றுவண்ணம் அமைத்த நயமும் பாராட்டத்தக்கது. வடமொழியில் 'அகாராதிநிகண்டு' என்னும் நூலொன்று உளதாகப் பெயர்மாத்திரையிற் கேட்கப்படுகின்றது. இதன் காலம் முதலிய விவரங்களொன்றும் அறிதற்கில்லை. தமிழில் இயன்ற இந்நிகண்டுநூல் முதன்முதல் பல வருடங்கட்குமுன் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்ததாகும். பின்னர் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் 1921-ல் வெளியிடப்பட்டது. இரண்டு பதிப்பிலும் திருத்தமடையாத இடங்கள் பலவுள்ளன.

நூல் இயன்றுள்ள முறையை,

"...............அகர முதலாய்
மதித்தெழு வகார வர்க்க மீறாய்
மொழிமுத லெழுத்து நூற் றொருநா லடைவே
மொழிதரு சூத்திர முதற்பதந் தோறும்
வருபெய ராதிப் பொருளா யெடுத்தே
ஒருபெயர் முதனூற் பத்தா மீறாய்
நிகழ்தா வுரைக்குந் தொகைதனக்கு"

என்று வரும் பாயிரத்தால் அறியலாகும்.

அகராதிமுறை யென்றுகூறியவளவிற் பொருள்விளக்குதற் கெடுத்துக்கொண்ட சொற்கள் யாவும் தற்காலத்துள்ள அகராதியிற் காணும் கிரமத்தை முற்றுங் கைக்கொண்டு நூல் அமைந்துள்ளதென்று எண்ணுதல் தவறு. சொற்களின் முதலெழுத்துக்கள்மாத்திரம் அங்ஙனம் அமைந்தனவேயன்றி இரண்டாமெழுத்து முதலியன அந்நியமத்திற் குட்பட்டுவந்தனவல்ல. அன்றியும், அகரவர்க்கப்பெயர்கள் முதலியன அம்முதலொருபெயர், அம்முதலிருபெயர், அம்முதன்மூப்பெயர்: என்றிங்ஙனமாக வகுக்கப்பெற்று நூல் முடிகின்றது.

நிகண்டுப் பொருள்களைப் பன்னிரு தொகுதிகளாக வகுத்துத் திவாகரரும் மண்டலபுருடரும் பிரசாரத்திற்குக்கொணர்ந்த முறையை விடுத்துப் பிங்கலந்தையிலுள்ள முறையை மேற்கொண்டு சிறந்த கருவி நூலாக விளங்குவது '**கைலாசநிகண்டு சூளாமணி**' யென்பதாம்.

கைலாச நிகண்டு.

இதன் பிரதியொன்று தொன்னூற் கருவூலமென்று சொல்லத்தகும் திருமேனி இரத்தினகவிராயர்பாரம்பரையினர் வீட்டிலிருந்து கிடைத்தது. இதனை இயற்றியோர் வரலாறுங் காலமும் சிறிதும் அறியக்கூடவில்லை. நூற்பெயரை நோக்கும் போது மண்டலபுருடரியற்றிய நிகண்டுசூடாமணிக்குப் பிற்பட்டதாயிருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. 'கைலாச' என்ற அடைமொழியால் இதனை இயற்றியவர் சைவரென்பதும் 'கைலாசம்' என்ற பெயரினரென்பதும் ஊகித்தல்கூடும். ஏட்டுப்பிரதியின் நிலைமையினின்று அதனை எழுதிமுற்றியது சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்பாக இருக்கலாமென்று கொள்ளலாம். சுமார் 300 வருடங்கட்கு முன்னர் இந்நிகண்டு இயற்றப்பட்டிருக்கலாமென்று கொள்ளுதல் உண்மையினின்றும் இழுக்காது.

இது பிங்கலந்தையின் வழிப்பட்டதென்பது விண்ணவர்வகை, விண்ணின்வகை, மண்ணின்வகை யெனத்தொடங்கிச் சென்று ஊர்வன இறுதியாக வரும் 49 பகுப்புக்களாலும், இறுதியில் ஒருசொற்பல் பொருட்பெயர்களை வைத்திருக்கும் முறைமையாலும் அறியப்படும். ஆனால் இறுதிப்பகுதி பிங்கலந்தையின்முறையைத் தழுவியதன்று; ஓரெழுத்தொருமொழி, ஓரெழுத்தொற்றொருமொழி, ஈரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொற்றொருமொழி, மூவெழுத்தொருமொழி, மூவெழுத்தொற்றொருமொழி, நாலெழுத்தொற்றொருமொழி என்ற ஏழு பகுப்புக்களையுடையதாய்க் காணப்படுகின்றது. ஓரெழுத்தொருமொழியிற் றவிரப் பிறபகுப்புக்களில், அகராதி முறை காணப்படவில்லை சூத்திரங்களும் பிங்கலந்தைச்சூத்திரங்களை அடியொற்றியேயுள்ளன. உதாரணமாக, அடியில்வரும் ஓரெழுத்தொற்றொருமொழிச் சூத்திரங்களைக் காண்க:

27. ஓரிடைச் சொல்லு முரைக்குங் காலமும்
பேசில் வறிதும் பெருமையுங் கொன்னே
அச்சமு மாங்கதற் காகு மென்ப.

28. காற்றும் வழியுங் காலும் பொழுதும்
கூற்றும் அளவையும் குவிதே ருருவையும்
காய்புந் தறியுங் கண்ணெ ணுருபும்
வான்கொடிப் படரு மரமும் புதல்வரும்
சரிபுன லோடைத் தாழ்ந்த வதியும்
உரியதோ ரிலக்கமு முரைக்குங் காலே.

29. அருக்கன் முதலா வாய்ந்த வொன்பதும்
வலியுங் கொள்கையும் வல்லிடை யூறும்
ஒகாலையும் பிசினமுங் கோளெனத் தகுமே.

இப்பகுதி யமைந்துள்ள முறை பயன்றருவதன்றெனல் வெளிப்படை.

இந்நூல்தோன்றி ஒருநூற்றுண்டிற்குப்பின்னர், மிகவும் எளிதான முறையொன்றைக்கைப்பற்றிப் பல்பொருட்சூளாமணி யென்றநிகண்டகராதியொன்று இயற்றப்பட்டது. இதன் ஆசிரியர் 'மடசை' என்றவூரினரும், சிதம்பரபாரதி என்றவரின் புத்திருமாகிய ஈசுரபாரதியாவர். 'மடசை' என்பது ஸ்ரீவில்லிபுத்தூரையடுத்துள்ள மடவார்வளாகமென்ற வூராக இருக்கலாமென்றுதோன்றுகிறது. இவர் நூல்செய்தகாலம் கி. பி. 1700. இவ்விவரங்கள்,

பல்பொருட் சூளாமணி நிகண்டு.

"கொல்லமெண்ணூற் றெழுபத்தா றெனக்கணிதப் பாவாணர்
குறித்த வாண்டின்
மல்குபுகழ் விக்கிரம வருடத்தா வணிமூல
வளஞ்சேர் நாளில்
நெல்லைநகர் வடிவுவந்த வேய்முத்தைப் பணிந்துலகி
னெடுநா ணிற்கப்
பல்பொருட்சூ ளாமணியை யீசுரபா ரதிதமிழாற்
பாடி னானே"

"சிதம்பரபா ரதிபாலன் புகழ்மடசை யுடையவளாந் தேவி செம்பொற்
பதம்பணிசெங் கைத்தலத்தா னீசுரபா ரதியெனுநூற் பாவ லோனே"

என்ற பாயிரச்செய்யுட்களால் உணரலாகும். அமரகோசமென்னும் வடநூலைப் பின்பற்றி இவரும் தமது நூலை மூன்றுகாண்டங்களாகப்

பகுத்து முதற்காண்டம் ஒருசொல் லொருபெயர்த்தொகுதியாகவும், இரண்டாங்காண்டம் ஒருசொற் பல்பொருட் டொகுதியாகவும், மூன்றுங் காண்டம் பல்பெயர்க்கூட்டத் தொருபெயர்த்தொகுதியாகவும் அமைத்திருக்கின்றனர். இது,

"தோன்றுகாண் டச்சடையான் றொல்சீர்சேர் நாமநூன்
மூன்றுகாண் டத்தான் மொழிகின்றேன்—ஆன்ற
குமாரசிங்கத் தின்கருணை கொண்டிவட நூல்சேர்
அமரசிங்கத் தின்சிறப்பி னால்."

"நாவுவந்த பல்பொருட்சூ ளாமணியைப் பாரில்
நாட்டியசீர் முதற்காண்ட மென்னும்பேர்தான்
பூவுவந்த வொருபெயரோர் பொருளே யாகும்
போற்றிரண்டாங் காண்டம்பல் பொருளி னோர்சொல்
சேவுவந்த நெல்வேலிப் பெருமா னீன்ற
செவ்வேளின் றிருவருளாற் றேர்ந்து நானசொல்
பாவுவந்த பெயர்மூன்றுங் காண்ட மாகும்
பலபெயர்க்கூட் டத்தொருபேர் பலவுந் தானே."

என்ற செய்யுட்களால் உணரலாகும் முதலிரண்டுகாண்டங்களும் அகராதிமுறையிலேயே அமைந்துள்ளன; மூன்றுங்காண்டமும் அவ்வாறே அமைந்திருத்தல்வேண்டும். உரிமையிற்சிறந்த நண்பர் திருவாளர் எம். பி. எஸ். துரைசாமிமுதலியாரவர்கள் ஆழ்வார்குறிச்சியில் தங்கள்வீட்டிலிருந்த இந்நூற்பிரதியை மிக்க அன்போடு உதவினார்கள். இப்பிரதி இறுதியிற் குறைவுடையதாயிருத்தல் வருந்தத்தக்கது.

இந்நூல் தோன்றி 32 வருடங்கட்குப் பின்னர் மேனாட்டுப் புலவரான வீரமாமுனிவர் சதுரகராதி இயற்றினர். இதன்கண்ணுள்ள முதன்மூன்று அகராதிகளும் பல்பொருட்சூளாமணியின் மூன்றுகாண்டங்களையும் ஒருவாறு ஒத்திருத்தல் நோக்கத்தக்கது. சதுரகராதி இவ்வகராதி, இயற்றப்பெற்ற சிலவருடங்களுக்குள்ளே மிகவும் பிரபலமெய்திற்று. தமிழ்நாட்டில் தமிழ்வித்வான்கள் வீடுகளிலெல்லாம் இதன் ஏட்டுப்பிரதிகள் காணப்படுகின்றன. தமிழகராதியின் சரிதத்தில் இந்நூல் ஒரு முக்கியஸ்தானம்பெற்று விளங்குகின்றதென்றுமட்டுங்கூறி ஈண்டு அமைகின்றேன்.

சதுரகராதி மிக்க உபயோகமுள்ள கருவிநூலாயமைந்தாலும், தமிழறிஞர்கள் அதன்பெருமையை முற்றவுணர்ந்து போற்றிவந்தார்களென்று கூறமுடியவில்லை. தமிழாசிரியர்கள் நிகண்டுகற்றலையே பெரிதும் மேற்கொண்டுவந்தார்கள். ஆதலால் அகராதிமுறையையும் அதில் அடங்கத்தக்குரிய பலபகுதிகளையும் செம்மைசெய்தலில் அவர்களுடைய முயற்சிசெல்லவில்லை. மீண்டும் நிகண்டுகளை அகராதிக்கிரமத்தில் இயற்றுதலிலேயே மனமூன்றிநின்றார்கள். இதற்குச் சான்றாக, சதுரகராதி வெளிவந்து சுமார் 40 அல்லது 50 வருடங்கட்குப்பின்னர்த் தோன்றிய *பொதிகைநிகண்டினைக் கூறலாம். இந்நிகண்டின் பிரதியொன்று நண்பர் திருவாளர் C. R. நமச்சிவாயமுதலியாரவர்கள் அன்புடன் உதவினார்கள். இதனை இயற்றிய ஆசிரியர் கல்லிடைநகரினரான சாமிநாதகவிராயராவர். இவர் 'நாமதீப நிகண்டு' இயற்றிய சிவசுப்பிரமணியக்கவிராயரின் தந்தையாரென்பது,

பொதிகை நிகண்டு.

"எந்தை பொதிகைநிகண் டென்றோர் சொற் பல்பெயரே
தந்தனன் காண்"

[*வேதகிரிமுதலியார் தமது இலக்கியக்களஞ்சியத்துள் 'பொதியநிகண்டு' என வொரு நூலைக்கூறி அதினின்றும் பின்வருஞ்செய்யுளைக் காட்டுவர் :

'தட்டுநீட் டுக்குற றணலின்றி னருகல் தன்னெடை குறைதலில் லாமை
கொட்டு சுடின மின்மையா ணிக்குக் கூறுமாற் றறிவித்தல் சோதி
விட்டுவிட் டொளிர்தல் மிகுபுடத் திருத்தல் வெவ்வழல் வென்றியைக் கொள்ளல்
கட்டிசாய்த் திடுகிற் பள்ளங்கொண் டதிக கனங்கொளல் கனகலக் கணமே.'

பொதிகைநிகண்டு நூற்பாவகவலால் அமைந்திருத்தலின், இந்நிகண்டு பிறிதொருநூலாயிருத்தல்வேண்டும். கனகலக்கண முதலிய பொருள்களும் பொதிகைநிகண்டு கைக்கொண்டுள்ள முறையில் வரத்தக்கனவல்ல. இங்ஙனமே ஔவைநிகண்டு என வொன்றைக்கூறி அதினின்றும் கீழ்வருஞ்செய்யுளைக் காட்டுவர்:—

### பதினாறுவகை வாசப்பொருள்.

"ஏலந்தக் கோலஞ் சூட னிலவங்கஞ் சாம்பி ராணி
காலஞ்செல் லகில்சந் தோங்கு கத்தூரி புழுகு மௌவல்
கோலமார் மருக்கொ ழுந்து (வெட்டி)குங்கும மிலாமிச் சம்வேர்
சாலுஞ்சண் பகஞ்சவ் வாது சாற்றுஞ்சோ டசவா சப்பேர்"]

என்று அந்நூலிற் பயின்றுவரும் பாயிரவடிகளால் அறியலாகும். அகராதிநிகண்டு முதலியவற்றைக்காட்டிலும் ஒருசில அம்சங்களில் இந்நிகண்டு செம்மையெய்தியது. இவ்வகைநூல்களிற் பல்பொருட் சூளாமணியிலுள்ளதுபோல் ஒருசொல்லொருபொருள், பல்பொருளொருசொல் முதலிய பாகுபாடுகளும், அகராதிநிகண்டிலுள்ளதுபோல் அம்முதலொருபெயர், அம்முதலிருபெயர் முதலிய பாகுபாடுகளும் வேண்டாதனவாம். இப்பாகுபாடுகள் இந்நிகண்டில் அறவேயொழிக்கப் பட்டன. அன்றியும் அகராதிநிகண்டு முதலியன மொழிமுதலெழுத்தின்முறையைக் கவனித்தனவேயன்றி இரண்டாவதெழுத்து முதலியவற்றின்முறையைச் சிறிதுங் கவனித்தில. உதாரணமாகப் பின்வருவனவற்றைக் காண்க.

1. அரனென் பதுவே சங்கர னாகும்.
2. அம்பிகை யென்ப துமையவள் பெயரே.
3. அயனே வேத னாமென நுவல்வர்.

இவை அகராதிநிகண்டின் முதல் மூன்று சூத்திரங்களாம். பொதிகைநிகண்டிலே மொழிமுதலெழுத்தின்கிரமம் அனுசரிக்கப் பெற்றிருப்பதோடு, இரண்டாமெழுத்துக்களும் ஒரே மெய் அல்லது உயிர்மெய்யெழுத்தின் சார்பினவாயிருக்கவேண்டுமென்றநியதி கையாளப் பெற்றிருக்கின்றது. உதாரணமாக,

1. அகந்தருவுங் குறையும் வெற்பு மனையும்
அகமு முள்ளு மான்மாவு மகப்பொருளும்
இடமும் பாவமு மல்லவு மாகும்.
2. அகைத்த லறுத்திடலு மொடித்தலு மீர்தலும்
வேதனை யும்மென விளம்பினர் புலவர்.
3. அகப்பா வுண்மதில் மேடையு மதிலும்.

என்று வரும் முதன்மூன்று சூத்திரங்களை நோக்குக. இவ்வாறாக, நிகண்டுநூலினை அகராதியோடு ஒத்தநிலையிற் கொண்டுவருதற்கு வேண்டும் செயற்பாடுகளெல்லாம் கடைபோக முடிந்தன.

அகராதிநிகண்டின்மரபிலே வந்த இந்நூல்கள் அங்ஙங்கே பயிலப் பெற்றுவந்தனவாகத் தெரிகின்றதேயன்றிப் புலவர்குழாத்துட்

பெரிதும் போற்றப்பெற்றனவாகத் தெரியவில்லை. அகராதிநிகண்டின் ஏட்டுப்பிரதிகள் தமிழ்நாட்டிற் சென்னை முதல் நெல்லையீறாகப் பல விடங்களிலும் காணப்படுகின்றன. இதனால் இந்நூல் மிக்க பிரசார மெய்தியிருந்ததென்பது விளங்கும். எனினும் மண்டல

**அரும்பொருள் விளக்கநிகண்டு**

புருடர் ஏற்றிய சூடாமணி யென்னும் வாடாத நிகண்டு விளக்கின்முன் இரேவணசித்தர் முதலியோர் இயற்றிய நூல்கள் ஒளியின்றி மங்கிப்போயினவென்றே கூறவேண்டும். தமிழ் கற்பாரிடையே சூடாமணியிற் பதினோராந்தொகுதியளவு வேறு எவ்வகைநிகண்டும் ஆதரிக்கப்படவில்லையென்பது திண்ணம். தமிழ் மக்கள் தங்கள் முன்னோர்முறையைக் கைவிடுத்து ஆங்கிலமுறையிற் கல்விபயிலத்தொடங்கியகாலம்வரை இந் நிகண்டே ஓதிவரப்பெற்றதாகும். இத்துணையாகப் போற்றப்பெறுதற்கு ஒரு முக்கியகாரணம் அநுகூலியாயிருந்திருக்கலாமென்று தோன்றுகிறது. அகராதிநிகண்டு முதலியன நூற்பாவாலியன்று பரந்துகிடத்தலினாலே மனனம் பண்ணுதற்கு எளியவல்ல. மனனம்பண்ணி ஞாபகத்திற் சேமித்து வைத்தலே நன்றெனக்கொண்ட நம்முன்னோர்க்குச் சூடாமணிநிகண்டு போன்றனவே நல்ல கருவிநூலாகப் புலப்பட்டன. திவாகரம், பிங்கலம் முதலியன புலவர்பெருமக்களாலன்றிச் சாமானியரால் போற்றப்பெறாமைக்கு இதுவும் ஒருகாரணம். ஆகவே அகராதிநிகண்டின் மரபில் நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கும்பொழுதே சூடாமணியிற் பதினோராந்தொகுதியின்மரபிலும் நூல்கள் தோன்றிக்கொண்டிருந்தன. இவ்வகையிலே இயற்றப்பெற்ற நூல்களுள், காலத்தால் மிக முந்தியது அரும்பொருள்விளக்கநிகண்டு. அதன் சிறப்பியல்புகளைக் குறித்துப் பின்னர்க் கூறுவோம்.

இந்நூல் தோன்றிச் சுமார் ஒரு நூற்றாண்டுக்குப்பின், அஃதாவது சுமார் கி. பி. 1850-ல் பதினோராந்தொகுதியின் நெறியையே பின்பற்றி நாநார்த்ததீபிகை என்ற ஓரியநூல் இயற்றப்பெற்றது. இந்நிகண்டு வடமொழிச்சொற்களைப் பெரிதும் மேற்கொண்டுள்ளது. தமிழ்மொழிக்கும் வடமொழிக்கும் உள்ள தொடர்பு அநாதி; இத்தொடர்பு காலகதியை யொட்டிப் பலவகையானும் விரிந்துகொண்டே வந்திருக்கிறது. தமிழிற் புலமைமிக்க பெருமக்களனைவரும் வடமொழியையும்

நன்கு பயின்றிருந்தனர். பாம்பரைத் தமிழ்ப்புலவர்கள் இல்லங்களில் வடமொழி நூற்பிரதிகளும் காணப்படுதல் இதற்குத் தக்கசான்றெனக் கூறலாம். கல்வியறிவு மிக்கில்லாத தமிழ்மக்களும் வடமொழிப்பதங்களை மிகுதியாகக் கையாளத் தொடங்கினர். வில்லிபுத்தூராழ்வார் போன்ற புலவர்களும் வடமொழியைப் பெரிதுங் கலந்து நூலியற்றிவந்தனர். தர்க்கம், ஜோதிஷம் முதலிய சாஸ்திரப் பயிற்சிக்கும் வடமொழியுணர்ச்சி அத்தியாவசியமாயிருந்தது. இக் காரணங்களால் வடமொழிப்பதங்களின் பொருளுணர்ச்சியும் இன்றியமையாததா மென்பதை யுணர்ந்து அப்பதங்களை மிகுதியாகச் சேர்த்துச் சுமார் 1100 விருத்தங்களால் அமைத்த பெருநூலாகும் இந்த நாநார்த்ததீபிகை. இதன்கட் பயின்றுள்ள வடசொற்களிற் பல வடநூல்களினும் அருகியே வருவனவாம். அடைமொழி புணராது பொருள்களைப் படித்திருப்பது இந்நூலின் பிறிதொரு நயமாம். இதனை இயற்றியவர் இப்பொழுது சென்னை ஸர்வகலாசாலையில் தமிழ் பீடாயிருக்கும் திருவாளர் அநவரதவிநாயகம்பிள்ளையவர்களின் பிதாமகராகிய முத்துசாமிப்பிள்ளையவர்க ளாவர். நண்பர் அநவரதவிநாயகம்பிள்ளையவர்களின அனுபியால் இந்நூல்முழுமையும் யான் பார்க்கநேரிட்டது.

நாநார்த்த தீபிகை

நாநார்த்த தீபிகை தோன்றிச் சுமார் 25 வருடங்கட்குப்பின்னர், 1874-ல், யாழ்ப்பாணத்து வைத்தியலிங்கம்பிள்ளை யென்பவர் சிந்தாமணி நிகண்டு எனப்பெயரிய நூலொன்று இயற்றி அச்சிடுவித்தனர். இதுவும் பதினொராந் தொகுதிமுறையில், தீபிகையைப்போல் வடமொழிச்சொற்களை மிகுதியாய்ச்சேர்த்து அமைத்த சிறியதொரு நூலாம்.

சிந்தாமணி நிகண்டு.

"நேர்செறி இளைஞ ரோர்சொற் கொருபொரு ணோரா யோரப்
பார்செறி நிகண்டு சிந்தா மணியெனப் பகர்வ னென்றே"

என்று ஆசிரியர் கூறுதலால் இஃது ஒருசொல் லொருபொருள் கூறும் நூலென்றறியலாம். இது 400 விருத்தங்களாலாயது. ஆசிரியர் தாமே ஓர் உரையும் வகுத்திருக்கின்றனர்.

இற்றைக்குச் சுமார் 12 வருடங்கட்குமுன்னர், வீரராகவபுரத்திற் பிரபலவக்கீலாயிருந்த திருவாளர் பூமிநாதமுதலியாரவர்களின் தந்தையா

ரும், வீரவநல்லூர் வாசியுமாகிய நா. அருணாசலநாவலரவர்கள் பதி னோராவது 'விரிவுநிகண்டு' எனப்பெயரிய நூலொன்று விருத்தப்பாவால்

விரிவு நிகண்டு.

இயற்றி உரையும் வகுத்திருக்கின்றார்கள். குறித்த நாவலரவர்கள் காலஞ்சென்று இப்பொழுது சுமார் 25 வருடங்கள் இருக்கலாம். இந்நூற்பிரதி, திருநெல்வேலிவக்கீல் திருவாளர். வி. எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியாரவர்களால் அன்புடன் உதவப்பட்டது. விரிவுநிகண்டு சூடாமணிநிகண்டினை யாதாரமாகக் கொண்டு அதன்முறையையே பின்பற்றிப் பல வழக்குச்சொற்களும் பொருள்களும் கூட்டப்பெற்றுத் தன் பெயருக்கேற்ப மிக விரிவாக அமைந்துள்ளது. இது பின்வரும் காப்புச்செய்யுளால் அறியலாம்:

'பொங்கொலி வீரை வேணிப் பூமிநா தன்றன் றாசன்
முன்புறு நிகண்டோ டேனை முதுமொழிப் பொருள னேகம்
இன்புறு மெதுகையாக வியற்றுமிந் நிகண்டை மேலோர்
அன்பமை கருத்துட் கொள்ள வருள்செ யைங்கரமா தேவே'

நூலின் இறுதிப்பகுதி பலவாறாகச் சிதைந்து காணப்படுதலினாலே செய்யுட்டொகை நிச்சயிக்கக்கூடவில்லை. தெளிவாக அறிவது 1036 செய்யுட்கள்; பல செய்யுட்கள் எண்ணிடப்பெறாதுள்ளன. ஆகவே, 1100 செய்யுட்கு மேற்பட இந்நூலில் உள்ளனவென்று கொள்ளலாம். வழக்குச்சொற்கள் புக்கு இது மிக விரிந்த நூலாதலைக் கீழ்வருஞ் செய்யுட்களால் அறிக:

'அகமிடம் பாம்பு தானி யம்புவி பள்ள முள்ளோ
டகலியப் பொருவே தண்ட மாகாய மாழ மான்மா
பகலனே முருபு துக்கம் பாவமுள் ளிடமோர் தாரு
தகுதியில் குணம்வீ டோடு சாருபத் திரவம் நெஞ்சாம்.

'கம்மலே யிருமலோர்வ கைக்கடுக் கங்கா தோலை
பம்மல்மா சோடு மங்கல் குரலடைப் பெனுபர் பாரோர்
பயமல்மந் திப்பு மூடல் பொருத்திக்கட் டிகைமந் தாஞ்
செம்முத லைம்பே ரென்பர் சீமாட்டி தலைவி செல்வி.'

திருநெல்வேலிப் பிரதேசத்துள்ள வழக்குச்சொற்கள் இதன்கண் மிகுதியாயுள்ளமை இந்நூலின் சிறப்புக்களுள் ஒன்றாம்.

இதுகாறுங் கூறிய ஒருசொற் பலபொருள் நிகண்டுகளிலே சொற்களும் செய்யுட்டொகையும் வரவரப் பெருகிக்கொண்டே போவது உய்த்துணரத்தக்கது. சூடாமணி நிகண்டிற் பதினோராந்தொகுதியில் 310 செய்யுட்கள் தரப்பட்டுள்ளன. வேதகிரிமுதலியாருடைய நூதன சூடாமணியில் 583 செய்யுட்கள் இருக்கின்றன. அரும்பொருள் விளக்கநிகண்டினை நோக்கினால் ஒரு பிரதியில் 700 செய்யுட்களும் பிறிதொரு பிரதியில் 740 செய்யுட்களும் உள்ளன. நாநார்த்ததீபிகையில் 1100 செய்யுட்கள் காணப்படுகின்றன. விரிவுநிகண்டின்கண்ணும் இவ்வெண்ணிற்கு மேலாகவே செய்யுட்கள் உள்ளன. இவ்விரிவிற்குக் காரணம் யாது? மேலைநாடுகளிலே சமீபத்திலே நிகழ்ந்த கோரயுத்தத்தின்பயனாக நூற்றுக்கணக்கான புதிய சொற்கள் அந்நாட்டு மொழிகளிற் புகுந்தனவென் றறிகின்றோம். பிறமொழி பேசும் மக்களோடு பல்வேறு காரணங்களால் நெருங்கி யூடாடுவதனாலும், புதிய சொற்கள் மீளாக்கடனாக வாங்கப்பெற்று அம்மொழிகளில் வழங்குகின்றன. பிரகிருதிதத்துவ ஆராய்ச்சி நாடோறும் பெருகப் பெருக ஆயிரக்கணக்கான சொற்கள் ஆங்கில முதலிய மொழிகளிற் புகுந்து நிலவுவதும் கண்கூடே. பிரகிருதியை மேன்மேலும் வெற்றிகொள்ளுவதாலும் நூதன யந்திரங்கள் மேன்மேலும் இயற்றுவதாலும் பொதுஜனங்களின் அனுபவம் முதிர, அதன்வாயிலாக அம்மொழிகளிற் புகுந்து பயிலுஞ் சொற்கள் வரம்பின்றியுள்ளன. ஒருமொழியைப் பேசும் மக்களது அறிவும் அனுபவமும் நாகரிகமும் வியாபகத்தன்மையும் பெருகப்பெருக, அம்மொழியிலுள்ள சொற்களும் பெருகிக்கொண்டே செல்வனவாம். இவ்வகையான காரணங்களாலே சூடாமணிக்குப்பின் சொற்கள் பெருகியதெனக் கூறமுடியவில்லை. இந்நிகண்டின்காலமாகிய 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து அரசியல்மாறுபாடுகள் பற்பல ஏற்பட்டனவென்பது உண்மையே. பிறமொழி பேசும் மக்களோடு தமிழ்மக்கள் ஊடாடிவந்தனரென்பதும் மெய்யே. எனினும், இவற்றால் நிகண்டுகளுட் புகுந்த சொற்கள் மிகச்சிலவேயாகும். தமிழமக்களில் ஒருசிலரை வரம்புகடந்து ஆட்டிவந்த வடமொழிப்போரசையே இம்மொழிப்பெருக்கிற்கு முக்கிய காரணமென்று தோன்றுகிறது. தமிழில் நூல்வழக்கிலும் உலகவழக்கிலும் புகுந்து தமிழ்மயமாய் மாறிவிட்ட வடசொற்கள் இந்நிகண்டு

நிகண்டுகளிற் சொற்கள் பலகிய காரணமும் முறையும்

களில் இடம்பெறுதல் அத்தியாவசியகமே. இவையேயன்றி இருவகை வழக்கினும் பயிலாத சொற்களும் வடமொழியிற்றானும் மிக அருகியே வரக்கூடும் மொழிகளும் இவற்றிற் காணப்படுகின்றன. அநுபவ வாயிலாக வந்த சொற்கள் ஒரு மொழியில் நிலைபெறுவனவே யன்றி, மேற்கூறியவாறு புகுத்தப்பெற்ற கடன்சொற்கள் வழக்கிற் புகுதல் தானும் அரிதாம். கீழ்வரும் உதாரணங்களைக் காண்க:

"பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்
அகலேநா ளொருமூ கூர்த்தம் பகலவ னடுவே தேசு
மகரமே சுறாப் பூந்தா தாம் வசிகூர்மை வசியம் வாளே
அகமன மனையே பாவ மகலிட முள்ளு மாமே"

இது சூடாமணியிற் ககரவெதுகைச் செய்யுள். இதன்கண் வட மொழிப் பதங்களும் தமிழ்ப் பதங்களும் விரவி வந்துள்ளமை காண லாம். கூறப்பெற்ற வடசொற்கள் யாவுந் தமிழ்நூல்வழக்கிற் சாதா ரணமாய்க் காணக்கூடுஞ் சொற்களேயாம்.

"நீபமே கடைய யற்சொ ளுைம்நீர்க் கடம்பு மாகும்;
சாபமே யங்க தச்சொற் றனுவரை யாடே முப்பேர்;
கோபமே சீற்ற மீதல் குறிக்குமிந் திரகோ பப்பேர்
யூபமே வேள்வித் தம்ப முப்படை வகுப்பே மட்டை"

இஃது அரும்பொருள்விளக்கநிகண்டினுள் பகரவெதுகைச் செய் யுள். இதன்கண் வந்துள்ள எதுகைச்சொற்கள் முழுவதும் வட மொழிச்சொற்களே. எனினும் இவை நூல்வழக்கினும் உலகவழக் கினும் பயின்றுவருவனவேயாம்.

"சூநிர்த மினியமெய்ச் சொல்லு மங்களம்
பேநில மிலந்தைக்காய் வகழுருங் கைப்பேர்
தேறுகை யிளங்கற்று மாதங் கப்பிடி
சூநைநங் தனியண்ணம் வதைக்குஞ் சூழலே".

இது நாநார்த்ததீபிகைச்செய்யுள்; நகரவெதுகையைச் சார்ந் தது. இதன்கண் வந்துள்ளன அனைத்தும் வடமொழிச்சொற்களாம். ஆனால் இவை தமிழில் நூல்வழக்கில் இதுவரை பயின்றறியாதன; ஒரு சில வடமொழி நூல்களினும் மிக அருகியே காணப்படுவன.

ஒருசொற் பல்பொருளைக்கூறும் இந்நிகண்டுகளிற் சொற்களும் பொருள்களும் பெருகி அதிகரிக்கும் முறை கூர்ந்துநோக்குதற்குரியது. ஒருமொழிக்கே தனித்துரிய சொற்களுக்குப் பலபொரு ளிருத்தல் அசம்பாவிதமன்று; பொருள்கள் குறைதலும் பலவாதலும் நெருங்கிய ஆட்சித்தொடர்புப்பற்றியேயாம். உதாரணமாக, 'அகழ்' என்ற சொல்லை எடுத்துக்கொள்க. இதன்பொருளை 'அகழெனப் அகழி தொட்டல்' என்று அரும்பொருள்விளக்கம் விரிக்கின்றது. தோண்டுதல் (தொட்டல்) என்ற வினையைபுணர்த்துஞ்சொல்லாய்த் தோன்றிப் பின்னர்த் தோண்டப்பெற்ற அகழ்க்கிடங்கையும் ஆட்சிமுறையான் உணர்த்திற்று. இக்காலத்தில் 'தோண்டுதல்' என்றபொருளில் உலகவழக்கா றற்று, அகழ்க்கிடங்கு ஒன்றனையே அஃது உணர்த்துகின்றது. இச்சொல் பொருட்கேடுற்றது. இதற்கு மாறாக, ஆட்சிமுறைபற்றிப் பொருள்கள் விரிந்து பலவாகி நிற்குஞ் சொற்களும் மிகப் பலவாகவே இருத்தல் வேண்டும். இவற்றிற்குமேலாகப் பிறிதொருவகையாற் பொருள்பெருகிய சொற்களும் உள. தமிழ்மக்கள் பிறமொழிமக்களோடு உறவாடிக் கலந்து பலதிறப்பட்ட வாழ்வுடையராய் மேன்மேலாக விருத்தியடைய, பிறமொழிச்சொற்கள் தமிழில் வந்து கலத்தல் இயல்பே. அவ்வாறு வந்து கலந்த சொற்களுள் வடமொழிச்சொற்கள் மிக முக்கியமானவை யென்று கருதத்தக்கன. அவை செய்யுள்வழக்கில் முதன்முதலாகத் தோன்றினவென்று கொள்ளுதற்கும் தக்க ஆதாரமுளது. செய்யுளீட்டச்சொற்களை யுணர்த்துமிடத்து ஆசிரியர் தொல்காப்பியனார் 'இயற்சொற் றிரிசொல் திசைச்சொல் வடசொலென் – றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே' என்று கூறுகின்றார். இவ்வடசொற்களுட் பெரும்பாலன உச்சாரணபேத முதலியவற்றால் எளிதிலுணரத்தகும் பல்வேறு தனிச்சொற்களாயிருந்தபோதிலும், தமிழில்வரும்போது ஒரேவடிவுபெற்றுச் சொல் ஒன்றாய்முடிந்து பொருள்கள் பலவாயமைகின்றன. உதாரணமாக 'அகம்' என்ற சொல்லை யெடுத்துக்கொள்க. இதன்பொருள் 'அகமான்மா மனையுள் ளுள்ள மகலம்வெற் படன்பா வப்பேர்' (அரும்பொருள். 13) என விரிக்கப்படுகின்றது. 'ஆன்மா' 'உள்' 'உள்ளம்' என்ற பொருள்களை நேராகவும் இலக்கணையாகவும் உணர்த்தும் வடசொல் 'ஃஹம்' என்பது. வெற்பு (மலை) என்ற பொருளுக்குரிய வடசொல் 'அகம்' என்பது. பாவம் என்ற பொருளுக்குரிய வடசொல் 'அகம்'

என்பது. இச்சொற்களெல்லாம் தமிழில் 'அசம்' என்ற ஒரேவடிவந் தாங்கிப் பொருள்கள் பலபெற்று வழங்குகின்றன. இந்நெறியை மேற்கொண்டு தமிழ்மொழியில் வழங்கும் வடசொற்களால் பலபொருட்சொற்கள் அதிகரித்தன. பிறமொழிச்சொற்களும் இவ்வகையில் உதவியிருக்குமென்றே தோன்றுகிறது. வடமொழிச்சொற்களில் உச்சாரணபேத முதலிய வேறுபாடுகளை யொழித்ததுபோலவே தமிழ்மொழிச் சொற்களிலும் சிறு வேறுபாடுகளை யொழித்துச் சொற்களையப் பொருள்களை விருத்திசெய்துகொண்டனர். தகுதியற்ற சிலவிடங்களிலுங்கூட இம்முறையைக் கைக்கொண்டுவிட்டனர். உதாரணமாகக் 'கேவணம்' என்ற சொல் ஆபரணங்களில் மணிகள் அழுந்துங் குழியென்று பொருள்படும். இதற்கும் 'கோவணம்' என்ற சொல்லிற்கும் உள்ள வேறுபாட்டினையழித்துக் 'கோவணம்' என்பதற்குக் 'கல்லழுந்துங்குழி' யென வொருபொருளும் அரும்பொருள்விளக்கநிகண்டிற் கூறப்பட்டிருக்கிறது. ஒருசில இடங்களில் 'கேவணம்' என்பதனைக் 'கோவணம்' என்று பாமரர் கூறும் வழக்குப்பற்றி இங்ஙனம் பொருளுரைக்கப்பட்டதெனச் சமாதானம் கூறலாம். எனினும் நிகண்டாசிரியர் சொற்பொருள்களை இருவகைவழக்குக்களையும் முற்றநோக்கி வேறுபாடுகளைநன்கறிந்து நூலியற்றவேண்டுங் கடப்பாடுடையர். இம்முறையிற் பிழைத்தமையினாலே தமிழ்நிகண்டுகளுட் புகுந்த சொல்வழக்குகளும் பொருள்வழக்குகளும் மிகப்பலவாம். இவ்வாறாகப் பல்வேறுகாரணங்களாற் சொற்களும் பொருள்களும் பெருகிக்கொண்டேவந்திருக்கின்றன.

சூடாமணிநிகண்டு 11-ம் தொகுதியின்மரபிலே வந்த நூல்களிற் காலத்தான் முந்தியது இப்போது என்னால் வெளியிடப்பெறும் அரும்பொருள்விளக்கநிகண்டென்பது முன்னரே கூறினேன். இந்நிகண்டினையியற்றிய அருமருந்தையதேசிகர் வீரசைவமரபினர்; சிவப்பிரகாசரென்பவரின் புதல்வர்; திருச்செந்தூரில் வாழ்ந்தவர்.

அரும்பொருள் விளக்கநிகண்டு காலம் வரலாறு முதலியன.

தமது ஞானாசிரியரும் தில்லைவாசியுமாகிய பச்சைக்கந்ததேசிகருடைய ஆணையைத் தலைமேற்கொண்டு, சூடாமணிநிகண்டு, உரிச்சொல்நிகண்டு, அகராதிநிகண்டு, கையாதரநிகண்டு என்பனவற்றிலுள்ள ஒருசொற் பல்பொருட் பெயர்களைத் தொகுத்து, எதுகைமுறையி லமைத்து 700 விருத்தங்களால் இந்நூலினை யியற்றினர். இஃது அரங்கேற்றப்பெற்ற காலம் சாலிவாகன

சகம் 1685-ம் ஆண்டு, சித்திரபானு, மாசிமாசம், சிவநிசி பொருந்திய வெள்ளிக்கிழமையாகும். எனவே கி.பி. 1763-ல் இந்நூல் இயற்றி முடிந்தது.

நூலாசிரியரைக் குறித்து வேறு யாதும் அறியக்கூடவில்லை. பச்சைக்கந்ததேசிகரைப்பற்றிய செய்திகளும் தெரிதற்கியலவில்லை. பச்சைக்கந்ததேசிகர் மடமொன்று சிதம்பரத்தின்கண் இன்றும் உள்ளது. இந்த மடத்தின் ஸ்தாபனாசாரியாராகிய ஆதிப் பச்சைக்கந்த தேசிகரைக்குறித்துச் சிறியதொரு வரலாறு சித்தாந்தசிகாமணி என்னும் நூலின் முகவுரையில் அதன் பதிப்பாசிரியராகிய நாகிசெட்டியாரவர்களால் தரப்பட்டுளது. அது வருமாறு :—

'இவ்வாசிரியர் கன்னடதேயத்திலே யவதரித்து, மல்லிகார்ச்சுன பர்வதத்திலே சிலகாலந் தவம்புரிந்து, சிவானுக்கிரகம் பெற்று, பின்னர்த் தென்றிசைநோக்கி வருங்கால் வழியிலே சோமேசர் கட்டமுதளிக்கவுண்டு, மலையனூரை யடைந்து, அங்கே சலத்திற் பதிந்து கிடந்த மாகதக்கடகமானது தானே வந்து தமது திருமேனியிலே பச்சையொளி பரப்பிப் பிரகாசிக்கும்படி அற்புதங்காட்டியருளி, அது கண்ட அரசனால் யானை முதலிய பல விருதுகளுந் தந்து உபசரிக்கப் பெற்று, சிதம்பரத்தை யடைந்து, தெய்வீகமுற்று விளங்கியிருந்தவர். பச்சைக்கந்தவுடையார் என்பதும் வழக்கம்'

கி.பி. 1763-ல் இருந்த பச்சைக்கந்ததேசிகருக்கு எத்தனை காலத்துக்குமுன் இம்மடம் ஸ்தாபிக்கப்பெற்றதென அறிதற்கில்லை. ஆனால் துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளின் ஞானாசிரியர் *சிவஞான பாலையதேசிகர் பச்சைக்கந்ததேசிகருடைய மரபினரென்று கூறப்படுதலினாலே அவர்காலத்தில் (அஃதாவது கி.பி 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில்) இம்மடம் இருந்ததென்று தெரிகின்றது.

இந்நூலாசிரியர் ஆதாரநூல்களாகக் கொண்டவற்றுள் அகாராதி நிகண்டு மொன்றென்பது கூர்ந்துணரத்தக்கது. இந்நிகண்டு இயற்றியவர் இரேவணசித்தரென்று முன்னரே விளக்கப்பட்டது. வீரசைவர்களுடைய மூலாசாரியர்களுள் ஒருவர் ரேவணாராத்ரியர் என்பது பிரசித்தம்.

---

*சிவஞானபாலையர் சித்தரென்றும் வீரசைவமரபினரல்லரென்றும் ஒரு சாரார் கூறுவர்.

எனவே அகராதிநிகண்டின் ஆசிரியர் வீரசைவ ராவர். சிவப்பிரகாச சுவாமிகளுக்கு இவர் ஒரு தலைமுறை முற்பட்டவர். வீரசைவர் பெரும்பாலுங் கன்னடதேசத் தொடர்புடையராதலினாலே, இவர் தம் நிகண்டுள்ளே கன்னடச்சொற்கள் பலவற்றைச் சேர்த்திருக்கின்றாரென்று எண்ண இடமுண்டு. அகராதிநிகண்டினை அரும்பொருள் விளக்கநிகண்டு பலவிடங்களில் அடியொற்றிச்செல்வது காணலாம். அருமருந்தையதேசிகரும் வீரசைவராதல்பற்றி அந்நூலை விசேடித்துப் போற்றியிருப்பரென்பது கூறவேண்டா.

இவ்வாசிரியர் வாழ்ந்த இடம் திருச்செந்தூர் என்பது முன்னமே குறிக்கப்பட்டது. இந்த நகரம் வீரசைவர் மிக்கு விளங்கிய இடமாகும். சிவப்பிரகாசசுவாமிகள் இந்நகரத்திற்குச் சென்று 'நிரோட்டக யமக வந்தாதி' பாடிய வரலாறும் அது வீரசைவத்தொடர்புடையதென்பதை விளக்கும்.

இந்நூல் ஓரெதுகைவருக்கத்தில் பிறவெதுகைச்சொற்கள் கலவாதபடி இயற்றப்பெற்றதொரு நிகண்டாகும். செய்யுட்களெல்லாம் இனிய ஓசையுடன் ஒழுகுகின்றன. இதன்கண் மூவாயிரத்திருநூறு சொற்களுக்கு மேலாகப் பொருள் விளக்கப்பட்டுள்ளது.

இந்நூலைப்பதிப்பித்தற்கு இரண்டு ஏட்டுப்பிரதிகளும் ஒரு காகிதப் பிரதியும் கிடைத்தன. ஏட்டுப்பிரதிகளுள் ஒன்றும் காகிதப்பிரதியும் சென்னை அரசாங்கக் கையெழுத்துப்புத்தகசாலையி லுள்ளன. காகிதப் பிரதி ஆண்டுள்ள ஏட்டுப்பிரதியைப் பார்த்துப் பெயர்த்தெழுதியதே யாகும். இவ்வேட்டுப்பிரதியி னிறுதியில் 'தெட்சிணாமூர்த்தி திருவடி வாழ்க. கச்சியப்பதேசிகன் திருவடி வாழ்க. சிவஞானதேசிகன் திருவடி வாழ்க. மாத்தூர் சரவணமுதலியார் குமாரன் மணியப்பன் அரும்பொருள்விளக்கநிகண்டு எழுதி நிறைந்தது. எடுத்தவன் படித்துக் கொடுக்கவேணும்' என்று காணப்படுகிறது. சிவஞானதேசிகர்

அரும்பொருள் விளக்கத்தின் ஏட்டுப்பிரதிகள்.

என்றது திராவிடமாபாஷ்யகர்த்தரும் இற்றைக்குச் சுமார் 150 வருடங்கட்கு முன்னிருந்தவருமாகிய சிவஞானசுவாமிகள் தாமென்று தோன்றுகிறது. சுவாமிகளது சீடருள்ளொருவராகிய கச்சியப்பமுனிவரே கச்சியப்பதேசிகரெனக் குறிக்கப்பெற்றவர். இம்முனிவர் கி. பி. 1790-ல் சிவபதமடைந்தாரென்பது 'ஏர்தருசாலிவாகனசகாத்தமாயிரத்தெழு

சதத்தொருபத்திரண்டின்மேல்' என்று வருஞ்செய்யுளால் அறியலாகும். இவருடைய காலத்துள்ள ஒருவரால் இப்பிரதி யெழுதப்பெற்றிருத்தல் வேண்டும். எனவே இப்பிரதி தோன்றிச் சுமார் 100 வருடங்கள் ஆகி யிருக்கலாம். பிரதியின் கையெழுத்துக்கள் திருந்தியவடிவி லமைந்தன வல்ல; பிழைகளும் பல காணப்படுகின்றன. இவ்வேட்டுப்பிரதியிற் காட்டிலும் இதன் கடிதப்பிரதியிற் பிழைகள் மிகமிக மலிந்துள்ளன.

இவ்விரண்டுபிரதிகளைமாத்திரங்கொண்டு நூலை யச்சிடுதல் தகுதி யன்றெனவெண்ணி வேறு பிரதிகள் பெறுதற்குப் பல அன்பர்கள்மூல மாக முயன்றேன். சிறிதும் பயன்படவில்லை. ஒருமுறை இந்நிகண் டினைக்குறித்துத் தாக்ஷிணாத்தியகலாநிதி மகாமகோபாத்தியாய ஸ்ரீ சாமிநாதையரவர்களிடம் பிரஸ்தாபிக்க நேர்ந்தது. அவர்கள் தங்களிடம் ஒருபிரதி யிருப்பதாகத் தெரிவித்தார்கள். பிறிதொருபிரதி யிருப்பது தெரிந்து மிக்க மகிழ்ச்சிகொண்டேன். ஸ்ரீ ஐயரவர்களும் தங்கள் பிரதி யை மிக்க அன்போடு உதவினார்கள். இப்பிரதி மிகவும் செவ்வை யானது; நன்றாகப் போற்றிவைக்கப்பெற்றதாயுள்ளது. இதன்கண் 93 இதழ்கள் உள்ளன. இதனின்பக்க மொவ்வொன்றும் நான்குசெய்யுட் களுக்குரிய எட்டுவரிகள் கொண்டன. ஏட்டுப் பலகைக்கு வெளியிற் கோத்திருக்கும் ஓலைநறுக்கில் 'முத்துக்குமாரசாமி முதலியார் அரும் பொருள்விளக்கம்' என்று காணப்படுகிறது. ஏட்டினிறுதியில் 'விரோதி ௵ ஐப்பசி ௴ ௨௰௮ உயில் அரும்பொருள்விளக்கநிகண்டு எழுதி நிறைவேறியது. இஃது எழுதியது பச்சையப்பமுதலியார். பொய் கைப்பாக்கம் பச்சையப்ப வாத்தியார்' என்று எழுதப்பட்டுள்ளது. எனவே இப்பிரதி கி. பி. 1852-ல் எழுதப்பெற்றதெனவிளங்குகிறது.

ஆனால் ஐயரவர்களுடையபிரதி எதிர்பாராதவிதத்திற் கலக்க முண்டுபண்ணுவதாயிற்று. இதன்கண், அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப்பிரதியிற் காட்டிலும் 40 செய்யுட்கள் அதிகமாயிருந்தன. இரண்டிற்குமுள்ள வேறுபாடு இவ்வளவில் அமைந்துவிடவில்லை. மற்றை 700 செய்யுட்களுள்ளும் சில செய்யுட்கள்தவிரப் பெரும் பாலன ஒன்றிலுள்ளபடி மற்றொன்றிற் காணுதற்கரியவாயின. இந் நிகண்டின் அனுபந்த மொன்றில் ககரவெதுகைப்பகுதியை ஐயரவர் கள் ஏட்டுப்பிரதியிலுள்ளவாறு கொடுத்துள்ளேன். இதனையும் நூலின்க

னுள்ள ககரவெதுகைச்செய்யுட்களையும் ஒப்புநோக்கி யான் கூறிய தன் உண்மை தெளியலாம்.

இவ்விரண்டனுள் எப்பிரதி ஆசிரியரியற்றிய மூலப்பிரதியோ டொத்ததாயிருத்தல்கூடுமென்று நிச்சயிப்பது அவசியமாயிற்று. இதற்கு ஏட்டுப்பிரதிகளின் நிலைமையைச் சிறிது ஊன்றிநோக்குதல்வேண்டும். அரசாங்கப்பிரதியில் எழுத்துக்கள் திருந்தியவடிவில் அமைந்தனவல்லவென்று மேலே கூறினேன். அதனை யெழுதியோர் பிழையற எழுதுதற்குப் போதிய வன்மையுடையாரல்லர். எனவே இவர் தமக்குக் கிடைத்த மூலத்தை ஒருவாறுகப் பிரதிசெய்துவைத்தன ரென்றே கொள்ளற்பாலது. ஐயரவர்களுடைய பிரதி தமிழறிவு மிக்குடைய கல்வியாளரொருவரால் எழுதப்பெற்றதென அப்பிரதியைத் திறந்து பார்த்தவளவில் ஊகிக்கக்கூடியதாம். எனவே, இவர் தமது மூலப்பிரதியின் குற்றங் குறைகளை நிரப்பிச் செம்மைப்படுத்தும் ஆற்றலுடையாரவர். ஆதலால் இவ்விரண்டுபிரதிகளுள்ளும் ஐயரவர்களுடையபிரதி மூலப்பிரதியினின்றும் வேறுபட்டபிரதியாயிருக்கலாமென்று ஒருவாறு ஊகித்தல்கூடும். இவ்வூகம் பிறிதொருகாரணத்தால் வலியுறுகின்றது. ஐயரவர்கள்பிரதியில் 'சுவைதிகழ் சொல்விருத்தத் தொகை மூவொன் பானூற்றேழாய்' என நூலின் செய்யுட்டொகை அறுதியிடப்படுகின்றது. ஆனால் பிரதியின்கட் காணுஞ் செய்யுட்டொகை 740. இந்த வேறுபாடு மூலப்பிரதியைப் புதுக்க முயன்றதன் பயனாக ஏற்பட்டதெனக் கொள்ளவேண்டுமேயன்றிப் பிறிதொருகாரணத்தால் அதனை விளக்குதல் கூடாது. நூலை யின்னனம் புதுக்கி விரிக்கவேண்டும்நோக்கமும் காணுதற் கெளிதாகவேயுள்ளது. தமிழ்மாணவர்கட்குப் பாடங்கற்பிக்கும் ஆசிரியர்கள் தாம் அறிவுறுத்தும் ஒருசொற் பல்பொருள்நிகண்டு இயன்றவரை நிரம்பியதாயிருக்கவேண்டுமென்று கருதினர். இக்கருத்துப்பற்றியே பற்பல ஒருசொற் பல்பொருணிகண்டுகள் தோன்றின. புதுவதாக நூலியற்றுதலினும் முன்னுள்ள நூலினைச் செப்பஞ்செய்தல் எளிதில் இயலுவதொன்றும். இதுபோன்றதொரு நோக்கம்பற்றியே ஐயரவர்கள்பிரதி விரித்துச் செய்யப்பெற்றதா மெனக் கொள்ளுதல் ஏற்புடைத்தாகின்றது. பிரதிகளிரண்டினுள்ளும், ஐயரவர்கள்பிரதி காலத்தாற் பிந்தியதாதலும் எனது கருத்தை ஆதரிக்குங் காரணங்களுள் ஒன்றும். ஆகவே

இப்பிரதியைக்காட்டினும் அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதி மூலத்தோடு பெரிதும் ஒத்ததாயிருக்கவேண்டுமென்பது பெறப் படுகின்றது. பிற்குறித்த பிரதியையே முக்கிய ஆதாரமாகக்கொண்டு அரும்பொருள்விளக்கநிகண்டு இப்பொழுது அச்சிடப்பற்றி வெளியிடப் படுகின்றது.

ஆனால், இப்பதிப்பிற்கு ஐயரவர்களுடையபிரதி இன்றியமையாததா யிருந்தது. அதனைப் பயன்படுத்தியமுறையை இங்கே அறிவிக் குங் கடப்பாடுடையேன். அச்சியற்றிய நூற்கண்ணே பொருள்விளக் கஞ்செய்துள்ள சொற்களுக்கெல்லாம் ஓர் அகராதி தொகுத்தேன்.

**பதிப்பின் முறை**

இவ்வகராதியில் மூவாயிரத்து இருநூற்றுச்சொச்சம் வார்த்தைகள் உள்ளன. இச்சொற்களனைத்தும் ஐயரவர் கள்பிரதியிற் பல்வேறிடங்களிற் காணப்பட்டன. ஒவ் வொருசொல்லும் இரண்டுபிரதிகளிலும் வந்துள்ள இடங்களை ஒப்பு நோக்கிப் பாடபேதங்கள் குறிக்கப்பட்டன. இதனால், பாடபேதமென்று குறிக்கப்பெற்றதனைச் சொல்லுக்குரிய பொருள் பிறிதோரிடத்திற் பிறவாறு காணப்படுகின்றதென்னுமளவில் மாத்திரமே கொள்ளவேண் டும். இங்ஙனமன்றிப் பிறவகையான் வேறுபடாத ஒரேசெய்யுட்பாடத் திற் குறித்த சொல்லினது பொருள்விளக்கும்பகுதிமாத்திரம் பாடாந் தரமாகக் காணப்படுகின்றதெனக் கொள்ளுதல் கூடாது. நூல் முழு வதினும் பாடபேதங்கள் கொடுத்திருக்கும் முறை இதுவே யென்பது நன்றாக மனங்கொள்ளுதற் குரியது. பாடபேதங்கள் இவ்வாறாக, ஒவ் வோரெழுகையிலும் அச்சியற்றியபிரதியின்கட் காணப்பெறாத பலசொற் கள் ஐயரவர்கள்பிரதியிற் பொருள்விளக்கப்பெற்றிருந்தன. இவற்றை அவ்வவ் வெழுகையின் இறுதியிலே 'மிகை' என்று சுட்டி முறையே யெண்களிட்டுக் கொடுத்திருக்கிறேன். மிகைச்சொற்களுக்கு ஓர் அக ராதியும் தனிப்படத் தரப்பட்டுள்ளது. அச்சுப்பிரதியிற் பொருள் விளக்கப்பெற்றசொற்கள் சிலவற்றிற்கு ரூபபேதங்கள் காணப்படுகின் றன. அவற்றையும் 'மிகை' அகராதியிற் சேர்த்துள்ளேன்.

மேலே குறித்துள்ளபடி ஸ்ரீ ஐயரவர்களுடையபிரதியால் இந் நூற்பதிப்பு அடைந்த திருத்தங்கள் மிகப் பல. பாடங்கள் நிச்சயப் படுதற்கும், ஐயங்கள் நீங்குதற்கும், பொருள்கள் விளக்கமெய்துதற்கும்

அதுவே பேருதவியாயிருந்தது. அப்பிரதி யில்லையாயின், இந்நூல் வெளிவந்திராது என்பது உண்மை. அரிதிற் பெற்றுவைத்திருக்கும் பிரதியை மிக்க தாராளசிந்தையுடன் உதவிய ஸ்ரீ ஐயரவர்களுக்கு யான் பெரிதுங் கடப்பட்டுள்ளேன்.

சென்னை அரசாங்கக் கையெழுத்துப்புத்தகசாலையிலிருந்து யான் வேண்டும்போதெல்லாம் பிரதிகள் கொடுத்துதவிவரும் அப்புத்தகசாலை யதிபரவர்களுக்கு எனது நன்றி யுரித்தாகின்றது. இந்நிகண்டினைச் செந்தமிழ்ப்பிரசுரமாக வெளியிட்டுதவியவர்களும் தமிழ்ப்பரிபாலனஞ் செய்தல் தமது வாணாளின் முக்கியநோக்கங்களு ளொன்றாகக்கொண்டு உழைத்துவருபவர்களும் ஆகிய பிரும்மஸ்ரீ T.C. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களுக்குத் தமிழுலகம் பெரிதும் நன்றிபாராட்டுங்கடப்பாடுடையது. அவர்கள்பால் எனது அன்பினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலின் இரண்டாவது அனுபந்தமாகச் சேர்க்கப்பெற்றுள்ள பலபொருளொருசொல் லகராதியை எழுதும்போது உடனிருந்துதவிய எனதுநண்பர் ஸ்ரீமாந். P. R. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்களுடைய உதவி பெரிதும் பாராட்டத்தக்கது. இஃது அச்சாகுங் காலத்துப் பல்வகையுதவிகள் புரிந்த "செந்தமிழ்"ப் பத்திராசிரியரவர்களுக்கு எனது நன்றி யுரித்தாகின்றது.

*தமிழ் நிகண்டுகளை அச்சிட்டு வெளியிடும் முயற்சி.*

இப்போது வெளியிடப்பெறும் அரும்பொருள்விளக்க நிகண்டுதவிர, இன்னும் பலநிகண்டுகள் வெளிவரவேண்டியனவாயுள்ளன. நிகண்டுகளனைத்தையும் பயன்படுத்துத் தொகுக்கப் பெற்ற அகராதி இதுவரை வெளிவரவில்லை. பலவகையானும் நிரம்பிய போகராதி வெளிவருதற்குரிய பெருமுயற்சியைத் தமிழ்நாடு முழுவதும் ஒருமுகப்பட்ட வுள்ளத்துடன் மேற்கொள்ளும்படி இறைவன் அருள் புரிவாராக. நூதன ஆங்கிலப் போகராதியைக்குறித்துத் தமிழன்பர்கள் அறிவார்கள். இப்பெருநூல் காலகதியிற் பற்பலகோலஞ்சமைந்து சொற் செல்வி நடனஞ்செய்யும் அரங்கமாக விளங்குகின்றது. நாடோறும் புதிதுபுதிதாகத் தோன்றிக்கொண்டிருக்கும் சொற்களின் பிறப்பகமாகவுந் திகழ்கின்றது. இவ்வகராதியின் சரிதமுழுமையும் இடைவிடாத உழைப்பினாலும் சலிப்பறியாத மனவொருமையினாலும் நிரம்பியுள்ளது. இதன்பொருட்டுத் தம்மையே தத்தஞ்செய்து முயன்றுவந்தோர் ஒருவர்

இருவரல்லர். பல அறிஞர்கள் தங்களாயுட்காலத்தையும் ஆத்மசக்தியையும் இவ் வகராதியொன்றற்கே யுரிமையாக்கினர். இவ் அறிஞர்களும் ஒருதலைமுறையின ரல்லர்; அடுத்தடுத்துவந்த நான்குதலைமுறையினர் அகராதிக்கென உழைத்துவந்தனர். இங்கிலாந்துதேசத்தினர்மட்டுமன்று இங்ஙனம் உழைத்துவந்தவர். ஆங்கிலம் பேசும் மக்களுள்ள தேசப்பகுதிகளனைத்தும் இயன்றவரை கூட்டுறவு செய்துவந்தன. இந்நூதன ஆங்கிலப் பேரகராதியோடு எவ்வகையா னோக்கினும் ஒத்து நிற்கக்கூடிய அகராதிப் பொருள்கள் நமது தமிழன்னையிடத்தே உள்ளன. அவற்றை யறிந்து பயன்படுத்தும் மக்களை அவள் பெற்றிலளென்று உலகம் பழியாமைப்பொருட்டுத் தமிழ்மக்களாயுள்ளார் அனைவரும் ஒருமுகமாக உழைத்தல்வேண்டும். இப் பெருமுயற்சியில், எனது ஆற்றலுக் கேற்றபடி உழைத்துவருகின்றேன். தமிழ் அகராதிக்குரிய மூலநூல்களை யொவ்வொன்றாக வெளியிடக் கருதுகின்றேன். இறைவன் திருவருள் முன்னிற்க.

என்னை யுணர்ந்த விளம்பருவ முற்கொண்டே
யுன்னை யுயிரெனக்கொண் டோம்பினேன் ——மன்னுபுகழ்த்
தெய்வத் தமிழ்ணைநின் சேவடிக்கே யாளாக்கி
யுய்விக்கக் கொள்வா யுளம்.

சென்னை;
20—4—31.

S.. வையாபுரிப்பிள்ளை,
தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்.

# அரும்பொருள்விளக்க நிகண்டு.

## காப்பு.

1 மகிழ்ந்துல கெவையும் போற்ற வன்புரங் குன்ற வென்ற
திகப்பர னணங்கோர் பாகத் தெய்வநா யகன்சேய் தந்தி
முகன்றன தடியை [1]யேத்தி மூதரும் பொருள் விளக்க
நிகண்டெனு மணித்தீ புத்தை நிலமிசை நிகழ்த்த லுற்றும். (க)

## பாயிரம்.

2 பொன்னொளிர் கமலப் புத்தே ணருந்துழாய்ப் பெருமான் போற்றுங்
கன்னியம் புரிசைத் தில்லை நாதன்றாள் கருத்திற் சேர்த்திப்
பன்னரும் பொருள் விளக்கத் தீபிகை பகர்வேன் பாரிற்
செந்நெறி யுளத்தோர் யாருஞ் செவிமடுத் தினிது கேண்மின். (உ)

3 குளிர்மணி வடநீ ழற்கீழ்க் குலவுமெம் மடிக டொன்னாள்
எளிதிலா முதனூல் செப்ப விலக்கண ரிவையுந் தூக்காற்
றெளியொரு வழிநூல் செப்பச் [2]சிலர்சார்பு நூலும் போற்றத்
தளிர்பெற விந்நூல் மூன்றுஞ் சகந்தனிற் றிகழ்ந்த தன்றே. (ங)

4 ஆங்கது நிற்கப் பின்னு மலகினூ லுகித்த வாற்றிற்
றாங்கொரு சொற்பொ ருட்பல் விதத்தொகை தானென் றுக்கொன்
றோங்கிமிக் குங்கு றைந்து மொத்திடா திருக்கை தன்னாற்
பாங்குயர் சின்னூற் சேரும் பொருள்கூட்டும் பண்பை யெண்ணி. ()

5 இலக்கண முழுது ணர்ந்தோ னிறைபி நஞ் சிவாக மத்தின்
றலைக்கடல் முற்றுங் கண்டோன் றொல்லையாந் தில்லை மூதூர்
கலக்கற விளங்கும் பச்சைக் கந்ததே சிகன்றெ மெங்கோன
சொலத்திக ழிகப ரத்தை [3]வேண்டியே தொல்லோர் கேட்க. (ரு)

---

பிரதிபேதம்:—[1]வாழ்த்தி, [2]சிலர் சார்பி னூலும். [3]வேண்டிய,

6 மாவியல் சிறக்கும் வீரை மண்டல வன்காங் கேயன்
ரேவண சித்தன் செஞ்சொற் [1]சயாகா னிவராற் சொற்ற
பாவியல் நூற்கூ றோர்சொற் பல்பொருட் டொகையெ லாஞ்சேர்த்
தோவிலா வளஞ்சி றப்ப வொருபெரு நூல தாக. (சு)

7 நவையறு சகா மாதி னகர்வீ றெதுகை தன்னால்
நுவலடிக் கிரண்டு மொன்று நுண்பொரு ளொருங்கு சேர்த்திச்
சுவைதிகழ் சொல்லி ருத்தத் [2]தொகையெழு நூறு தன்னால்
அவைநலோர் குற்றஞ் சொல்லா ரென்பதை யகத்தி னெண்ணி. (எ)

8 சொற்றன னுருத்து ளிக்குந் தோட்டலர் கடம்பின் றிண்டோட்
கொற்றவேன் முருகன் செந்திற் [3]குமாரவேட் கடிமை பூண்ட
நற்றவ [4]வீரா சார நற்சிவப் பிரகா சன்சேய்ப்
பெற்றிசே ரரும ருந்த தேசிகப் பெயரி னானே. (அ)

9 இருஞ்சகாத் தம்பீ ரைஞ்ஞூ றிருமூன்று றுடனெண் பத்தஞ்
சொருங்குசித் திரபா னுப்பேர்ச் சமைமகத் திங்க ளொப்பில்
பொருஞ்சிவ நிசிவெள் ளிப்பேர் [5]புனைதினந் தில்லை மன்றிற்
பெருங்குணத் தோர்க்க ரங்கே றுற்றநூற் பெற்றி தானே. (கூ)

பாயிரம் முற்றும்.

---

(பி-ம்.) [1]சயாதர. [2]தொகையெழுவொன் பானூ றெழாய், [3]குமரவேள் வரங்கள் பெற்றோன், [4]விரதா சார.(?) [5]புகறினர்,

# நூல்.

## ககரவெதுகை.

10 அகவலே யழைத்த லாட லான்றவா சிரிய மூப்பேர் ;
தகவறி வுடனெ ழுக்கந் தெளிவுஞ்சற் குணமுஞ் சாற்றும் ;
பகவதி யுமையே [1]துர்க்கை தருமதே வதைப்பேர் பன்னும் ;
முகவுமா ளிகைமு கப்பே மொள்ளுதல் காந்திக் கும்பேர். (௧)

11 உகமென்ப வுரகம் பூமி யூழியே முதலே நாற்பேர் ;
சுகமென்ப கிளியே நன்மை [2]சுவர்க்கமின் பம்மை மைப்பேர் ;
முகமென்ப திடமே துண்டம்; மோகமே மயக்கங் காதல் ;
நுகமென்ப மகநாள் சோதி நாள்நுகத் தாணி மூப்பேர். (௨)

12 அகலுளே பெருமை நாடு ரகலமென் றோதல் நாற்பேர் ;
இகல்வலி பகைபோர் மேவல்; இகுளையே தோழி நட்பாம் ;
புகலுடல் குதிர்சொல் வெற்றி; பொக்கமே மிகுதி பொய்யாம்;
நகலொளி சிரித்த லின்பேர்; நகமேவெற் புகிர்ம ரப்பேர். (௩)

13 அகமான்மா மனையுள் ளுள்ள மகலம்வெற் புடன்பா வப்பேர் ;
சகமேமா நிலமே பாதி தகருடன் சட்டை நாற்பேர்;
பகமேபெண் ணின்சின் னப்பேர் வாலமு [3]மதுவே பன்னும் ;
மகமேயோர் நாள்யா கப்பேர்; வைகூர்மை வைக்கோல் பைம்புல். (௪)

14 பகடென்ப கடாச்சேத் தந்தி பஃறியே பெருமை யைம்பேர் ;
அகடென்ப வுதரம் நாப்பண் ஆன்றதீங் குறையே மூப்பேர் ;
சகடென்ப பொய்ம்மை யோகஞ் சாகாடே [4]போர்ப்ப றைப்பேர் ;
முகடென்ப கொடிவீ டங்கம்; மோக்கமே தீர்தல் முத்தி. (௫)

15 அகழென்ப வகழி தொட்டல்; அகிலமே சகம னைத்தாம் ;
பகழியா சுகங்கு ழிப்பேர்; பகண்டைசில் லைப்புள் சிவேதை ;
புகழென்ப வகத்தி வாகை போற்றுறுஞ் சீர்த்தி மூப்பேர் ;
சிகழிகை மயிர்மு டிப்பேர் வாசிகை திகழ்தே மாலை. (௬)

---

பிரதிபேதம்:—[1]துர்க்கி. [2]சுவர்க்கமின் பஞ்சம் மாடே. [3]மதன்பேர். [4]போர்ப கைப்பேர்.

16 ஆக்கையே யுடலத் தின்பே ரயிற்கணை வீக்கும் பாசம் ;
சேக்கையே முலைத மூம்பு திகழ்பாயல் கடக ராசி ;
சாக்கையே நிமித்தி கன்பேர் பேயுண்டி யதற்குஞ் சாற்றும் ;
தீக்கையோன் சிவனே யாசான்; சிகண்டிகே கயம விப்பேர். (எ)

17 ஆக்கமே பொன்செல் வம்பே றதிகம்பூ மின்மெய் கேடாம் ;
தூக்கமே நிவப்புத் தொங்கல் துயிலெனு முப்பேர் செப்பும் ;
பூக்கமே வலியி னுமம் புரியுடன் [1]கமுகும் போற்றும் ;
நோக்கமே யழகு பார்வை நொய்திலா வுயர்ச்சிக் கும்பேர். (அ)

18 அகரமோ ரெழுத்தே சேரி; அகப்பாவே ணகையுண் மேடை ;
மகரமே [2]யிராசி காதல் மலர்த்தூளே சுறவே நாற்பேர் ;
தகரமே மயிர்ச்சாந் தீயந் தகரந்தண் மணம்புன் கின்பேர் ;
ஓகரமோங் கார மஞ்ஞை; ஊகித்தல் நினைத்த லோர்ப்பாம். (௯)

19 தகையேயோர் கவசம் பண்பே தளர்வன்பே பெருமை நீளம் ;
[3]முகையேபூ மொக்கு ளின்பேர் மொழிந்தநீர் மிடாவும் போற்றும் ;
தொகையேயா சிரியங் கூட்டம்; சோகமால் கவான்றி ரட்சி ;
நகையேபல் லொளிம லர்ச்சி நகையுட னிகழ்ச்சி யைம்பேர். (௧0)

20 அகளமே மிடாவா முப்பேர்; ஆகவம் [4]புவிபோர் வாசி ;
துகளாதல் தூளே குற்றம்; தொக்கேகூட் டந்து வக்காம் ;
[5]சகளியே கருமு கைப்பேர் தாரதல மிருபேர் காட்டும் ;
உகளமே [6]யிரண்டிட் டப்பேர் ; ஊக்கலே நினைத்த லூர்தல். (௧௧)

21 மகடுபெண் குழலி சைப்பேர்; மகன்மைந்தன் புருடன் மாக்கள் ;
தகடிலை யைம்மைக் கும்பேர்; தக்கையோர் பறையே தெப்பம் ;
மூகடியென் [7]பதுதான் றவ்வை முழுமகன் றனக்கும் பேசும் ;
மகுடமே முடியு றுப்பு மவுலியென் றிரண்டு மாமே. (௧௨)

22 தகைமையே குணமே யாட்சி சான்றாண்மை யெனவே மூப்பேர் ;
புகையென்ப தூமங் காதம்; பூக்குதல் நினைத்தல் தோன்றல் ;

---

(பி-ம்.) [1]கழுகும். [2]பலர்ப்ப ராகம் மகிழ்காதல் சுறவே முப்பேர். [3]சிகையேகீழ் மக்கள் பாறு சென்னியிற் கருவிக் கும்பேர். [4]புவிபொ ராவார்.? [5]சகளிகூக் கருமு கைப்பேர்; சகோரமோர் புள்போத் தாங்கை. [6]யிரண்டி டப்பேர். [7]பதுமூ தேவி.

திசைதிசை சுணங்கி ஞமம்; சேகென்ப வயிர மாசாம் ;
பகைபிக லடித்தல் சாதல்; பகர்தலே விற்றல் பேசல். (கங)

23 அக்கெனு நாமஞ் சங்கோ டம்பகம் விடைமு சிப்பாம் ;
நக்கனே விடையோன் பிண்டி நாதனிர் வாணிக் கும்பேர் ;
பக்கணம் வேடர் வீதி பட்டணஞ் சிற்றூர் மூப்பேர் ;
தக்கனென் பாம்பி லொன்று [1]மால்மகன் றனையன் சாற்றும். (கச)

24 எக்கலே யூர்தி யேறல் சொரிதலென் றிரண்டு மேற்கும் ;
சிக்கலே யிளைத்த லின்பேர் கிடைத்தலுந் தடையும் செப்பும் ;
ஒக்கலே குடிசுற் றப்பேர் ஒப்புற லதுவும் போற்றும் ;
முக்கோலந் தணர்தங் கைக்கோல் சிராவண நாண்மொ ழிப்பேர். ()

25 ஆகமே காய மார்பம் ; அகர்பெரு மாம கிற்பேர் ;
யோகமே தியானங் கூட்ட முச்சாயம் போர்க்கு பாயம் ;
சாகமே தாழை தேணீ தேக்குச்சா கினிவெள் ளாடாம் ;
காகமே யரிட்டங் கிரி [2]கற்பக மவிட்ட நாட்பேர். (கசு)

26 மேகரா கப்பே ரோர்பண் மிளிர்சிறு கீரைக் கும்பேர் ;
மாகத [3]ரோடர் பாட வல்லோர்மற் றெருதே யத்தோர் ;
கேகப மசுண மஞ்ஞை கிளர்ந்தபாட் டோர்தே யம்வில் ;
பாகனே வலவன் புந்தி; பக்கியே குதிரை பல்புள். (கஎ)

27 வேகமே யகறல் கோபம் விரைவுட லுடம்பே கீழாம் ;
பூகமே திரட்சி கூந்தற் பூகம்பூங் கமுகும் போற்றும் ;
கோகமே யற்ப நேமிக் குருகென்றுங் கூறற் பாலாம் ;
மாகமே படையெ முச்சி வான்றலை திருவாழ் வைம்பேர். (கஅ)

28 நோக்கலே காத்த லின்பேர் காணலு நுவலற் பாற்றே ;
பாக்கிடைச் சொற்று வர்க்கா யெதிர்காலப் பண்பே மூப்பேர் ;
போக்குரை நடத்தல் குற்றம் பொய்பத டிப்பே ரென்ப ;
மீக்கோளே றுதலி ஞய மேற்போர்வை பெரிவிவு மாமே. (ககூ)

---

(பி-ம்.) [1]ஞ் சரோருகன் மகவு மாமே. [2]கற்பகம் விடநாற் பேரே.
[3]ராடர் பாட.

29 ஆகாங் கடலே யாக மார்ந்திடு முணவே மூப்பேர் ;
சீகரங் கரகம் வீசு திவலைவெண் கவரிக் கும்பேர் ;
சாகரந் துயிற ணத்தல் தண்கட லெனவுஞ் சாற்றும்;
சேகரஞ் சிகரந் தேமாச் செம்பொன்மா மவுலிக் கும்பேர். (உ௦)

30 சாகினி சேம்பு சாகம் ; சகியென்ப பொறைசே டிப்பேர் ;
போகில்கொப் பூழ்பூ மொட்டுப் புட்பொது வெனவும் போற்றும் ;
கோகில முட்டு ளைப்பேர் குயில்பல்லி குரக்குஞ் செப்பும் ;
போகியிந் திரனே பர்ந்தள் ; புகுதியே வருவாய் வட்டை. (உக)

31 அகறலே குதித்த லோர்ப்புக் கழிவுட னகல நாற்பேர் ;
சிகரிகோ புரமே நாரை சீறெலி வரைகி ரீடம் ;
இகரமோ ரெழுத்தே சந்தம் ; ஏகலே போதல் நாவாய்;
ககனம்விண் படைகான் பல்புள்; ககமேவெங் கணைபுள் ளாமே. ()

32 இக்கென்ப கரும்பி னுமை மிரதமார் கள்ளுக் கும்பேர் ;
குக்குடங் கோழி யின்பேர் சிறகுடைப் பாந்தள் கூறும் ;
சிக்கமே குடுமி யுச்சஞ் சிறையுறி யோர்புள் சீப்பாம் ;
சுக்கையே யுடுதே மாலை; சுகியேபுள் சுகமு மாமே. (உ௩)

33 நக்கலே யொளியே சொன்றி நகைத்திட லுடனுண் டற்பேர்;
மொக்குளே புற்பு தப்பேர் குமிழ்ப்புப்பூ மூகையென் றுகும் ;
கைக்கிளை யாழ்ந ரம்பேரர் பாவொரு தலைக்கா மப்பேர் ;
வக்கிரங் கொடுமை மீளன் மடங்கல்யோய் நிமிர்தல் வட்டம். ()

34 மகிணனே கொழுந னுமை மருதத்தின் றலைவன் வைக்கும் ;
சகுனமே கிழங்கு நாரை சாற்றிய நிமித்தம் புட்பேர் ;
எகினமே புளிமா நாயே கவரிமா வனப்பு ணீர்நாய் ;
சகுனிபுள் நிமித்தம் பார்ப்போன் ; சகுந்தமீன் பொதுப்புள் பூகம்.

35 அகியரா விரும்பி னுமைம்; ஆகாரம் வடிவ நெய்யூண் ;
நிகிரியே வட்ட மாழி தேருருள் தேர்யாழ் வெற்பாம் ;
துகிரிகை பூசுஞ் சாந்தே சொற்றசித் திரமே யென்றும் ;
நெகிழியே சிலம்புந் தீயும் [1]நெருப்புறு கொள்ளிக் கும்பேர். (உ௬)

(பி-ம்.) [1] நெருப்பிலங் குறுங்கொள் ளிப்பேர்.

36 துகிலிகை யெழுது கோலே சொற்றுகிற் கொடியுங் கூறும் ;
வகிர்வகிர்ந் திடலே வாராம்; வகுப்பென்ப தழகே வர்க்கம் ;
சிகிபரி புரமே மஞ்ஞை [1]தீதுறு கேதுத் தீயாம் ;
[2]சுகிருதம் நேய நன்மை ; சுகரேயோர் முனிசொர்க் கத்தோர். (உஎ)

37 மேகலை யுடுத்த வாடை விளங்கரைப் பட்டி கைப்பேர்;
பாகலே கார வல்லி பலாவென்றும் பகரற் பாற்றே ;
போகலே பொலிவு நீள [3]லளவின்மை யதற்கும் போற்றும் ;
சர்களந் தகரி ஞமஞ் சமர்செய்பூ மிக்கு மாமே. (உஅ)

38 வாருவே [4]யழகு தோட்பேர் ; யகிழேயோர் மரங்க ளிப்பு ;
ஆருவே யெலிகொப் பூழு யாம்பெருச் சாளிக் கும்பேர் ;
காகுளி விற்பூட் டோசை களத்தொலி தவிசே மூப்பேர் ;
ஆகுல மொலிந டுக்கம் [5]அருச்சனை துன்பம் நாற்பேர். (உகூ)

39 வீக்கென்ப விசித்த லின்பேர் மிகுதியோர் கணித மூப்பேர் ;
தேக்கென்ப கழுகோர் தாரு திகழுளத் தெகிட்டற் கும்பேர் ;
தாக்கென்ப சமரே வீரம் ; சாகையே சினைவே தப்பேர் ;
[6]மேக்கென்ப மேற்றிக் கின்பேர் மேலும்பர் தனக்கு மாமே. (௩0)

40 மாகதி யதிக வேகம் அதிமது ரப்பேர் வைக்கும் ;
[7]சாகசம் மெய்ம்மை நாமஞ் சத்துவ [8]மதகுஞ் சாற்றும் ;
போகரோர் முனிவன் வீரர் புணர்ப்புயர் விடரும் போற்றும் ;
ஆகையே யாக லின்பே ரவாமமும? பலத்துக் கும்பேர். (௩க)

41 சகுலிமீ னைலியாம்; காகோ தரம் பாம்போர் புண்மோ டின்பேர் ;
குகுமதி மறையி ராவே குலவுமோர் நாடிக் கும்பேர் ;
புருடியே யணிக லன்பேர் பொற்புயர் புருரும் போற்றும் ;
வெகுளியே யடங்கா மைப்பேர் வெஞ்சின மதுவு மாமே. (௩உ)

42 தொகுதியே நெருக்கங் கூட்டஞ் சொற்றிடு திரட்சி மூப்பேர் ;
பகுதியே கொடிப்ப டைப்பேர் பகுத்திடல் [9]இரண்டும் பண்ணும் ;

---

(பி-ம்.) [1]தீதறு. [2]சுகிருத மறநெய். [3]மனவின்மை. [4]யெழிறோள் காமம். [5]; அகலிகை புலியோர் பெண்ணும். [6]மேக்கென்ப மேற்கே மேலாம்; மிகையேவே தனைது யிற்பேர். [7]சாகசம் வழக்கம் வீரஞ் சத்துவங் களிறே நாற் பேர். [8]மதற்குஞ் (?) [9]பகுதி கூட்டம்.

தருதியே பொறையொ டூக்கந் தக்கல் லறிவும் போற்றும் ;
நகுலியே கீரி யோர்கோ; நகாயுதங் குரங்கே சிங்கம். (௩௩)

43 புகரென்ப வொளிகேழ் குற்றம் புற்கென்ற லெழின்ம மைக்கோள்
பகர்சொன் றி யருவி யோடு பற்றுயிர் கொக்கொன் பான்பேர் ;
தகரென்ப வகில மாடு தகர்த்தலென் றேறுதல் மூப்பேர் ;
[1]மகரந்த மலர்ப்ப ராகம் வருநறா வுடன்வண் டாமே. (௩௪)

44 உக்கமே மருங்கின் பக்க மொண்மருங் கால வட்டம்
குக்குடஞ் சுரபி செந்தீ [2]கொழுவிடை முகமேழ் போரம் ;
பக்கமே யருகு நட்புப் பறைதிதி [3]படைக்க லப்பேர் ;
ஒக்கமே யகல மற்ப [4]மொழிவுறுப் பொலிவு மாமே. (௩௫)

45 சக்கரம் பெருமை யோர்புள் தாணிதே ருருளே யாழி
மிக்கரு வரைசூழ் வட்ட மிளிர்நகை பிறப்பொன் பான்பேர் ;
கொக்கரை வளையே சங்கே குதைவில்வெம் பணியே நாற்பேர் ;
அக்கர மெழுத்தி னும மயருநோ யொன்று மாமே. (௩௬)

46 ஊக்கமே வலிதா ளாண்மை யுளமிகுத் திடலே யுண்மை
நீக்கமில் விரிவு யர்ச்சி யா றுமே நிகழ்ந்த நாமம் ;
பாக்கமே புறம்ப ணைக்காம் [5]பதிபெருங் கிராமம் பன்னும் ;
சூக்கமே சுரும்பே யற்பம்; சோகுபே யுடன்பேய்ச் சோறும். (௩௭)

47 பகலேயோர் முகூர்த்த நாளே பலபாடே நடுவே தேசு
பகலவன் செயலே பாகு நுகத்தாணி யொன்பான் போரம் ;
இகலனே நகுல மோரி; ஏகமொன் றுயர்ந்த முத்தி ;
அகலமார் புடனே பூமி விரித்துரை யகலம் நாற்பேர். (௩௮)

48 தோகையே [6]வால்முன் றானை சுற்றுால் தூவி மஞ்ஞை
வாகைசே ரெழிற்ப தாகை மயிற்பீலி யுடனேழ் போரம் ;
ஈகையே கொடைகாற் றுப்பொன் இண்டைகற் பகமில் லாமை ;
ஓகையே வருவ சொல்ல லுவகைக்கும் புகலற் பாற்றே. (௩௯)

---

(பி-ம்) [1]மகரந்தந் துணர்தேன் வண்டாம்; வாசுத நூல்கள் ளாமே. [2]கொவிடை, [3]படைக்க லப்பேர், [4]மொழிவுறும், [5]பதிநெய்தற் பதிபே ரூராம், [6]வால்முந் தானை.

49 சிகரமே குவட்டி னுச்சி திவலைவெற் புடனே சென்னி
யெகினமாக் காக்கை தெண்ணீ ரெறிதிரை யெனவேழ் பேராம் ;
பகவன்மா லீசன் புத்தன் பங்கயன் சினனோ டைம்பேர் ;
நிகர்தலே நிறைத லொப்பாம் ; நெகிழ்தலே குழைவே விள்ளல். ()

50 சக்கிரி யேகு லாலன் றராபதி தனுக்கட் பாந்தள்
[1]இக்குவேள் தாதை செக்கான் கருப்பாலை கதலி யேழ்பேர் ;
கொக்கயஞ் செந்நாய் மூலங் குராண்டமாக் குருக்கத் திப்பேர் ;
சொக்கொளிர் பசும்பொன் சோர்வு சொல்லரு மெழின்மூப் பேரே.

51 பொருட்டென்ப முளரிப் பைம்பொற் பூங்கொட்டை துளையுஞ் சேற்றின்
மிகுத்திடு கொப்புள் நீண்ட மால்வரை விளங்கு முப்பேர் ;
பகுத்திடல் பாதி செய்தல் தறித்திட லெனவும் பாற்றே ;
[2]முகிழ்த்தல்வா ளாகி டத்த லொடுங்கற்கு மொழிபே ராமே. (சஉ)

52 பாகமே பாதி யிவ்பேர் பலகூறோர் கணிதம் பிச்சை
வேகமார் பதம்பட் டாடை விளங்குநா மங்க ளாறும் ;
சூகரங் கரம்பன் றிப்பேர் ; துகிரேசெம் பவளஞ் சேப்பாம் ;
[3]நாகர மோர்தே யச்சொற் சீவனென் றெனவே நாட்டும். (சங)

53 கைகரம் படையு றுப்புக் கருத்துட னொழுக்கந் தங்கை
[4]மொய்விட மொப்ப னைப்பேர் [5]முகிர்கீழ்மை சார்பொன் பான்பேர் ;
மைகறை மேக மாடு மலடேயஞ் சனங்குற் றப்பேர் ;
வைகல்வை [6]கறைநாட் டங்க லூரியன கழிவும் வைக்கும். (சச)

54 கோகன கஞ்ச ரோரங் குளிர்கையாந் தகரை வெய்ய
மோகஞ்செய் நிலக்க டம்பென் றுரையபி தான மூன்றும் ;
பாகவன் றழல்தீத் தேவாம் ; பாகர்கண் மதில்சூ தர்க்காம் ;
சூகையென் பதுவே யானை சொற்றசிற் றிற்கும் பேரே. (சரு)

55 இகுத்தலே யழைத்த லீதல் எறிதலே செருக்தல் வீழ்க்தல்
[7]வகைப்படத் துடைத்தல் தாழ்க்தல் [8]வருத்திட லெண்பே ராகும் ;

---

(பி-ம்.) [1]மிக்கவை நிறைத னியாய மலர்தலூ னாடிசின் மேவும். [2]இகழ்த்தல்காழ்த் தல்நொ ருக்க மெறிதலே கடத்த லும்பேர். [3]நாகரந் திசைச்சொல் லொன்னே ; நகுதலே சிரித்தல் பேசல். [4]மெய்விட. [5]மிளிர் கீழ்மை. [6]கறைநாடங்க. [7]மிகைப்படத். [8]வருந்திடல் விளம்பெண் பேராம்.

அகைத்தலே நோயொ டித்த லறுத்திட லுயர்த்த லோடே
• [1]மிகைப்படு மெழுச்சி மோதல் [2]விளம்புபே ரீருமூன் றாமே. (௪௬)

56 நாகமே குரங்கு புன்னை ஞாழல்வெற் பியானை தூசு
மாகங்கா லங்கா ரீயம் வளர்சொர்க்கம் பன்னொன் றேபேர் ;
ஊகமே கருங்கு ரங்கோ டேற்குறை விலங்கின் கூட்டம்
போகிலாத் தர்க்கஞ் சங்கை பொருபடை வேங்கை யேழ்பேர். (௪௭)

57 பாகென்ப பருப்புப் பாக்குப் பாணிபால் பகிர்ச்சி பாகன் •
பாகஞ்சர்க் கரையா றுணம் பரைகரை யீரா றேபேர் ; •
நாகென்ப சங்கு காரான் நத்தையா னீர்வாழ் சாதி
மோகங்கொள் பெண்பா லீறு விளமைமூண் மாமெண் பேரே. (௪அ)

58 தூக்கென்ப வொலிபாண் கூத்துத் துலாங்தொங்க லயலா ராய்தல்
தூக்கணங் குருகே பாரஞ் சொற்றிடு மூவமை விற்றல்
நீக்கமில் [3]நிவப்பி னோடே நிறுத்திடல் குரவன் றன்னோ
டாக்கிய சிக்க மென்னு மபிதான மூவைந் தாமே. (௪௯)

59 வாகையே திறமு யற்சி வனப்புயர் வெற்றி சால்போ
டீகைநல் லொழுக்கங் கல்வி யியலறத் துறையே யுண்மை
யோகைசேர் மிகுதி பண்போ டொருமா மருந்த வங்கள்
[4]மோகமார் மூடமே யென்று மொழிநாம மீரெட் டாமே. (௫0)

60 [5]வழுத்துறு மெய்ம்மூ வாறின் வருகின்ற ககர மாதி
யெழுத்தெது கையினிற் செய்யு [6]ளைம்பானென் றிசையச்செய்தான்
பழுத்தசெஞ் சுடர்வே லாற்சூர் பகவெறிந் தோன்பொற் பாதம்
அழுத்துறு [7]மிதையன் செந்தி லருமருந் தையன் றானே. (௫க)

ககரவெதுகை முற்றும்.

---

(பி-ம்) [1]வகைப்படு. [2]வழுத்துபே. [3]நிவப்பே பண்டம். ;[4]மோகமார் பேர்மூ வைந்தாம்; மூகையேசீர் மிடாப்பூ மொக்குள். [5]வழுத்துயிர். [6]ளேழே ழென். [ இப்பாடத்திற்கேற்ப 'சகுலி' என்று தொடங்கும் 41-ம் செய்யுள் ஒருபிரதியிற் காணப்படவில்லை.] [7]மிதையச். •

# ஙகரவெதுகை.

61 அலங்குபன் மணிகொ ழிக்கு மணிகிளர் சரவ ணத்தின்
இலங்குமு விருமு கத்தோன் எம்பிரான் றேவர் சேனை
கலங்குறா வண்ணங் காத்த காரணன் பாதம் போற்றித்
துலங்கியே வருங கார வெதுகையின் றொடையைச் சொல்வாம். (௧)

62 அங்கியே [1]யாண்மாச் செந்தீ யாரல்நா ளரைச்சட் டைப்பேர் ;
பைங்கதிர் பனிவெண் டிங்கள் பகர்நெல்லா திப்கு மற்பேர் ;
சிங்கியோர் மருந்தி னுமங் தீங்கடு வுடனே ராடல் ;
பங்கியே யாண்ம யிர்ப்பேர் பற்பிற மயிரு மாமே. (௨)

63 தேங்கலே [2]மெலிவி னுமம் திகழச்சக் குறிப்பெ னும்பேர் ;
வாங்கலே கொளல ழைத்தல் வளைதலோ டிசைத்தல் நாற்பேர் ;
தாங்கலே படுகர் தாங்கல் சாற்றுளக் குறையே மூப்பேர் ;
[3]ஏங்கலே மிகுந்த வோசை யிசைக்குமேக் கப்பே ராமே. (௩)

64 மங்கலி சுமங்க லிப்பேர் மஞ்சிக னெனவு மாமே ;
[4]சங்கரி துமித்தல் நாமம் தாணுவின் றேவி மாயோன் ;
அங்கதம் வசைச்சொல் வெந்தீ யரவுதோ ளணிமார் பம்பொய் ;
புங்கவம் நந்தியம்பு; பூங்கற்றே செவ்வி பூதம். (௪)

65 சுங்கனே மழைக்கோ ளரயத் துறைபவன் பேருஞ் சொல்லும் ;
மங்களன் செவ்வா யின்பேர் மணம்பொருந் திடுவோன் வைக்கும் ;
அங்கமே யென்பு தேக மாறங்கங் கதுப்பே யூகம் ;
சிங்கமே யாளி சீயம்; செங்கைபா திரைநாள் கைப்பேர். (௫)

66 அங்கையே யத்த நாட்பே ரான்றகைத் தலமுஞ் செப்பும் ;
கங்கமே [5]யெருவை பாறு கழுகுஞ்சீப் புடனே முப்பேர் ;
கொங்கொரு தேயந் தாது குளிர்மணந் தேறல் நாற்பேர் ;
கிங்கரந் தணவா வண்புங் [6]கிளத்துதூ தாக்கும் பேரே. (௬)

(பி-ம்) [1]யங்கஞ். [2]மெலிவெ திர்ப்பு. [3]ஏங்கலே மயிற்கு ரற்பே ரிரங்கலு மொலியு மாமே. [4]சங்கரி கிளவி வேட்டல். [5]பவனை சேனம். [6]கிளத்தூது தோர்சா திப்பேர்.

67 பொங்கலே பொலிவு யர்ச்சி பொருந்துறு நிறைவே முப்பேர் ;
மங்கலம் பொலிவி ளுமை மடப்பமோ டெழில்கு ணப்பேர் ;
[1]பிங்கலம் பொன்மை பூசை கபிலமா னிறமும் போற்றும் ;
இங்குலி கப்பேர் சாதி லிங்கமும் சிவப்பு மேற்கும். (எ)

68 பொங்கரே யிலவு சோலை [2]புறம்பேபூஞ் சினையே வெற்பாம் ;
அங்கித முடற்ற மும்பே [3]யங்கிகா ரமுமே யென்ப ;
மங்குல்விண் ணிருள்மே கப்பேர்; மங்கையோர் பருவம்பெண்ணும்;
பிங்கலை யோர்வாய் வின்பேர் பிறழாந்தை தனக்கு மாமே. (அ)

69 புங்கமே யுயர்ச்சி யம்பே பொருமம்பிற் குதையே தூசாம் ;
திங்களம் புலிமா தப்பேர் ; தெங்கேதா ழைநித் திப்பாம் ;
வங்கரே கொலைஞர் கற்றோர் வழுத்துமோர் தேயத் தோர்க்காம் ;
அங்கண முற்றஞ் சேறே யாஞ்சல தாரைக் கும்பேர். (கூ)

70 கங்கபத் திரமே வாளி கழுகின்றன் சிறகுங் காட்டும் ;
சுங்கமே [4]திறைய ளத்தல் சொற்றவா யத்து றைப்பேர் ;
வங்கணங் கத்தி ரிப்பேர் கேண்மைக்கும் வழுத்தற் பாலாம் ;
கங்கணங் கமண்ட லப்பேர் காத்தொடி [5]யதுவு மாமே. (க0)

71 சங்கென்ப வளைகோ டேபுள்; சங்கைபே யுடனே யையம் ;
பங்கென்ப முடமே யாகும் பாதியுஞ் சனியு மேற்கும் ;
உங்கென்ப வரம்பின் பக்கம் கருந்தினை கழுகு பாறு ;
இங்கென்ப [6]திவிடம் காயம் ; [7]இலிங்கமே குறிகு லிங்கம். (கக)

72 செங்கோடே யோர்ம லைப்பேர் செருந்திக்கும் பொருந்தி நிற்கும் ;
அங்கார கன்பேர் செவ்வா யடர்த்தசெந் தழற்கும் போற்றும் ;
செங்கரவி யலர்சே தாம்பல் சீரைதோய்த் திடுஞ்செங் கற்பேர் ;
பைங்கூழே பயிர்நோ யின்பேர்; பாங்கரென் பதிடம் பக்கம். (கஉ)

---

(பி-ம்.) [1]பிங்கமே குரற்கோப் பூசை; பிங்கலங் கபிலம் பொன்மை. [2]புறம் பெழுஞ். [3]யங்கிகார் முகமே. [4]திறைய ளித்தல். [5]மருந்து மன்னும். [6]திடமே. [7]இலிங்கமாண்.

73 [1]பாங்கென்ப தலங்க ரித்தல் பகரெழில் முயற்சி யாட்சி;
ஞாங்கர்வேல் பக்க முன்பே மேலிடம் நவிறற் பாலாம்;
சோங்குநா வாய்ம றப்புச் சொற்குரு கெனவே முப்பேர்;
வேங்கைபொன் மரம்பு லிப்பேர்; வெங்கோலே கொடுங்கோல் பல்லம்.

74 ஓங்கலே [2]வரைமே டியானை யுயர்வீபா யம்வேய் நாவாய்;
இலாங்கலி தெங்கு காந்த ளுழுபடை யெனவே முப்பேர்;
தூங்கல்கூத் தியானை தூக்கஞ் சோம்புசாத் தாழ்வோ ரோசை;
கீங்கபஞ் செவ்வே ளாண்மை [3]கனத்தவன் பணிபொன் னூற்பேர்.

75 பங்கமே தூசு பின்னம் பதிந்த சேறுடனே குற்றந்
தங்குதொல் வினையே யென்னச் சாற்றுமைம் பேருஞ் சொல்லும்;
வங்கமோர் தேயம் வெள்ளி வழுதலை யுடன்க ருத்துப்
பொங்குறு நாவா யீயம் போற்றும்பே ரிருமூன் றுமே. (௭௫)

76 சங்கமே கணக்கா லோரெண் சவைசங்கு புலவர் நெற்றி
பொங்குகை வளையி னோடு பொருந்துறக் கூட லெண்பேர்;
தொங்கலே பீலிக் குஞ்சம் தூக்குடன் றுயில்பூ மாலை
சிங்கலில் கவிகை தெய்வ வுத்தியென் றறுபேர் செப்பும். (௭௬)

77 [4]நூங்கரே நுறுங்கல் தேவர்; நுங்கலே விழுங்கல் நோயாம்;
வீங்கலே மிகுதி வீக்கம்; வெங்கதி ரழல்வெய் யோனும்;
தீங்களே நறவஞ் சோரம்; சிங்கலே யெஞ்சல் கேடாம்;
ஈங்கோர்முண் டகவல் லிப்பே ரிவ்வுழை யெனலு மாமே. (௭௭)

78 [5]துதிபெறு மிரண்டா மெய்யாய்ச் சொற்பெற வருங கார
வெதுகையி னுற்ற செய்யு ளிசையவீ ரெட்டாய்ச் செய்தான்
கதிர்விரி தடக்கை வேலான் கந்தவேள் மலரிப்பொற் றண்டை
அதிர்கழல் வணங்குஞ் செந்தி லநுமருந் தையன் றனே. (௭௮)

ஙகரவெதுகை முற்றும்.

---

(பி-ம்.) [1]பாங்கெழின் முயற்சி யாட்சி பரிசலங் கரித்தல் பக்கம். [2]வரைமோ. [3]கனத்திடு. [4]நூங்கலே. [5]துதிபெற வுணர்வோர் சொற்ற நூயவெல் லினங் கார.

# சகரவெதுகை.

79 கொலைகிளர்ந் தொளிருஞ் செய்ய கூரிலை வடிவேற் றாங்கு
மலைசெறி கடகத் திண்டோள் மஞ்ஞைவா [1]கனத்தெம் பெம்மான்
முலைமுகிழ்க் குறமின் கேள்வன் மூவிரு முகனைப் போற்றிக்
கலைவலோர் புகழ்ச கார வெதுகையின் கவியைச் சொல்வாம். (க)

80 கோசரம் [2]சிவலிப் புட்பேர் கூர்மைக்கும் புரிக்கும் வைக்கும்;
ஊசலே உஞ்ச லூசல்; ஒசிவே நுண் மைசா யற்பேர்;
கூசலே [3]வெஃக லச்சம்; குசமென்ப விருக்கந் தெர்ப்பை;
கேசர மகிழ்ம ரப்பேர் கிளத்துபூந் தாணர்தே னீயாம். (உ)

81 அசதியீ ரெட்டாண் டிற்பெண் ணயர்வுட னோர்கோ வைப்பேர்;
கசிவேயா குலமி ரங்கல் காதல்வேர் வுடனன் பாகும்;
[4]பிசிவேயொட் டல்ந டத்தல்; பிசிதம்பொய் யிறைச்சி வேம்பு;
[5]நொசிவேநோய் வருத்தத் தின்பேர் நுண்மைக்கும் புகல லாமே. (௩)

82 ஆசையே திசைபொன் னேமால்; ஆசுக மம்பு காற்றாம்;
காசையே நாணல் காயா; [6]கசையென்ப கவசம் நாணும்;
பூசையே பூனை பூசை; பொச்சையென் பதுகான் வெற்பாம்;
ஓசையே கதலி சீர்த்தி யொலியெனு மூப்பே ராமே. (௪)

83 முசலியே கோம்பி தாழை மொய்வலி யுடும்பே முப்பேர்;
[7]அசமறி மூவாண் டின்நெல்; அசனியே யுருமு வச்சிரம்;
கசநறுந் தாதி ரும்பு களிற்றுட னளவொன் றாகும்;
கசடைய மலினங் குற்றஞ் சகடெனும் நாற்பேர் காட்டும். (௫)

84 பாசமே பேய்நூ லூசிப் படுதளை [8]கயிறென் றாமே;
வேசரி கருத்த பங்கோ வேறெனுங் கரம் விளம்பும்;
காசறை மயிர்ச்சாந் தின்பேர் கஸ்தூரி மணிப்பொ துப்பேர்;
ஈசன்மா லரனே வேத னைவற்றுக்கு மிறையென் றாமே. (௬)

---

(பி-ம்.) [1]கனத்தேறெம்மான். [2]புரியி னுமஞ் சிவலிப்புட் குருகுங் கூறும். [3]வெள்கல்(?) [4]பிசிதமே பொய்யி றைச்சி நடத்தல்வேம் புடனீ ரும்பேர். [5]நொசி தலே வருத்தம் நோயே. [6]காற்பண மெனுங்க ணிப்பாம். [7]அசனிவச் சிரமி டிப்பேர்; ஆசுல மிடும்பை பூசை. [8]கயிறே யன்பாம்.

85 உசிதமே நீர்வ ளைத்த லதிசய மழைத்த லோதும் ;
இசியொன்றை யிணுங்கு தற்பே ரிசித்திடல் சிரித்தல் முப்பேர் ;
பசியுத ரக்க னற்கும் பாசுதற் கும்பேர் வைக்கும் ;
மசிமதித் திடல்கார் மையாம்; வசந்தனோர் கவிவேள் தென்றல். (எ)

86 மூசல்மொய்த் திடல்சா வென்ப; மூசுவேயோர் வளல்மூ சுப்பேர் ;
கீசகங் குரங்கு தட்டை கிளர்த்திய [1]தலைத்தி ராணம் ;
வீசலே யெறித லீதல் மிகுத்திடல் பாத்தல் நாற்பேர் ;
பாசறை [2]பன்ன சாலை பாடிவீ டிரண்டு மாமே. (அ)

87 உச்சிநண் பகல்மு டிப்பேர் ; [3]ஒசித்திடன் முறித்தல் சாய்த்தல் ;
வச்சிரஞ் சதுரக் கள்ளி வயிரம்வெங் குலிச முப்பேர் ;
நொச்சிசிற் றார்ம திற்பேர் நுவல்சிந்து வார மென்ப ;
மிச்சில்போம் பொருளே யெச்சில்; வீசமோர் கணிதம் வித்தாம். (கூ)

88 ஆசிடை கூட்டஞ் சீரை வாழ்த்துமென் றறைதல் முப்பேர் ;
தேசிக மெழில்நற் காந்தி செப்பொனோர் நடந்தி சைச்சொல் ;
ஆசினி பலாவி சேட மரவுரி மரம்விண் சேகாம் ;
தாசிசொற் பரணி நாட்பேர் [4]அடிமைக்குஞ் சாற்ற லாமே. (கO)

89 [5]விசவமே நெடுமால் பூமி ; விசாலமே பொலிவு தாவல் ;
வசுவென்ப செம்பொன் றேவர் வன்னிகோ தனநாற் பேரே ;
பசுவென்ப திடபஞ் சீவன் [6]பற்றுறும் பெற்ற முப்பேர் ;
பிசுனங்கொண் டியமே கோளே பேசுறும் பொய்யென் றூமே. (கக)

90 குச்சென்ப சிற்றில் குற்றி குலவும்பா வாற்றி முப்பேர் ;
நச்சென்ப விடம்புண் மூக்கு நவின்றிடு விருப்ப முப்பேர் ;
கச்சென்ப கைப்பே மீனே கனன்முலைக் கச்செ னும்பேர் ;
[7]அச்சென்ப கழற்காய் கூட்டல் கம்பிவாங் கற்கோ ரச்சாம். (கஉ)

91 பாசியே [8]நாம் ஞாளி பசாசெனு முப்பே ரோதும் ;
வாசிமா வோதல் தெற்காம்; [9]மச்சம்பொன் னுரைமச் சப்பேர்;

---

(பி-ம்.) [1]தலைக்கிராணம். [2]யன்ன. [3]ஒசித்தல்சாய் வுதவி யற்றல். [4]சாற் றடி யாட்கு மேற்றும். [5]விசியென்ப விசித்தல் மஞ்சம். [6]பாற்பொழி. [7]அச் செண்ப வணிகு யிற்றச் சணிகழற் குழூத்தே ரச்சாம். [8]மழைநாய் பாசி பசா செனும் நாற்பே ராமே. [9]'மச்சமே மாற்றின் றிட்டம் நெடும்புழற் பேரும் வைக் கும்' என்ற பாடத்தோடு இச்சொற்பொருள் பிறிதோரிடத்துள்ளது.

தேசியே யெழில்சு ணங்கன் ; திசைதிக்குத் திகிரி யென்றும் ;
கோசிகஞ் சாம வேதம் கோதில்நற் படாமு மாமே. (கங)

92 பசும்புல்பைங் கூழே சட்பம்; பசுமையே கேசம் பைம்மை ;
விசும்புவிண் கருபம் மேகம் விளங்கிய துறக்க நாற்பேர் ;
தசும்புசெம் பொன்கு டப்பேர்; தாசுசே கண்டை வல்லாம் ;
அசும்புபைம் புற்கூ வற்பேர் ; [1] அசூசமே நாசம் நாயாம். (கச)

93 கொச்சியோர் புதரே தீவாம் ; குச்சங்கொண் டியக்தெர்ப் பைப்பேர் ;
பிச்சியே கருமு கைப்பேர் பித்துளோன் றனக்கும் வைக்கும் ;
துச்சிலே யொதுக்கி டத்தோ டணிந்திடு சூட்டுஞ் சொல்லும் ;
சச்சையே யிகழ்ச்சி தேய்வை சட்டைவெற் பகங்கூற் றப்பேர். (கரு)

94 அசிபடைக் கலம்வா ளின்பே [2] ரவமதி சிரிப்புஞ் சாற்றும் ;
நிசியிரா மஞ்சள் பொன்னும்; நேசங்கொநந் தளம்நே யப்பேர் ;
பிசியேபொய் வெண்சோ றோடு பேசுநூற் பொருளே முப்பேர் ;
[3] சுசிகோடை சுத்தம் வெண்மை சுடர்த்தழ லெனுநாற் பேரே. (கசு)

95 குசைபரி சுவலிற் றோன்றுங் கூந்தல்கூர் கவினந் தெர்ப்பை ;
வசைபழி மொழிப்பேர் குற்றம்; மாசியோர் புதரே மாதம் ;
[4] அசைநிலை மேம்பா டோதல் எழுத்திரண் டுறழ்த லாகும் ;
விசைவிரை வுடனே வெற்றி; மிசைசேட மூயர்வே சோறும். (கஎ)

96 அச்சுதன் மால்கே டில்லான்; [5] அசைத்தல்சொல் லுலாவல் கட்டல் ;
எச்சமே குறைசே யாகம்; ஏசியே கிளியி கழ்ச்சி ;
கச்சையே தழும்பி னோடு கயிறுமெய்க் கவச முப்பேர் ;
பொச்சாப்பே மறவி யின்பேர் பொல்லாங்கென் றிரண்டு மாமே. ()

97 ஊசியே சூசி கண்டம் ; உசாத்தேர்ச்சி யுலாவ லென்றும் ;
பூசலா யோத மோசை புலர்த்தலொப் பனையே நாற்பேர் ;
தேசிக னுசான் றேசாந் திரியெனு மிருபேர் செப்பும் ;
[6] நாசிசார் விடமே மூக்காம் ; நசையிச்சை யொழுக்கத் தின்பேர். ()

(பி-ம்.) [1] ஆசூசம் நாசம் நாயாம். [2] ரவமதிச் சிரிப்பே. [3] சுசியென்ப குடையே சுத்தஞ் சுடர்த்தழல் வெண்மைக் கும்பேர். [4] அசையென்ப நிலைமேம் பாடே யறைதலி ரசைய சைச்சொல். [5] அசைதல் சொல். [6] நாசிக' மருந்தே யாஸம்.

98 மிச்சமே பொய்ம்மை மிஞ்சல்; விசித்திர மழகு மேன்மை;
கொச்சைவெள் ளாட்டி ஞமம் இளைத்தலின் பேருங் கூறும்;
அச்சமே [1] அகத்தி யைம்மை யஞ்சலி யெனவே முப்பேர்;
நிச்சய மென்னும் நாமந் துணிவுமெய்ம் மையுரி கழ்த்தும். (உ0)

99 ஓச்சலே யெதிர்த்து வீச [2] லுலகோம்ப லோய்தல் முப்பேர்;
பாச்சலே யெழுச்சி பாய்தல்; பசும்பிடி யிலைத மாலம்;
காச்சலே காய்த லின்பேர் கோபமுங் கழறற் பாற்றே;
தோச்சலே பிரைசேர் வெண்பாற் [3] புனலாட லுவளல் முப்பேர். (உக)

100 கோசமே மதிலு றுப்பாண் குறிமுட்டை முறைபண் டாரம்
[4] காசில்பொத் தகநீள் வீதி கருகூல மென்றுரன் பான்பேர்;
பாசனஞ் சுற்றம் பாசம் பாண்டமுண் கலனே நாற்பேர்;
வாசமே யிருப்பி டம்பூ மணம்பல்புட் சிறகே தூசாம். (உஉ)

101 கச்சமே கரிக்க மூத்திற் கயிறளை வொடுமே ரக்கால்
நிச்சயத் துணிவு கூர்வாள் நினைத்தலங் கவடி யேழ்பேர்;
பிச்சமாண் மயிரும் பீலிக் குடையும்வெண் குடையும் பேசும்;
இச்சையே பொய்த்த லாசை யிடித்தலஞ் ஞான நாற்பேர். (உரு)

102 இசையுரைக் கிளவி பாட்டோ டிசைப்புடன் புகழே வண்மை
திசைபொளிர் பணத்தி ஞேடே நித்திப்பென் றெண்பேர் வைக்கும்;
விசையமே பருதி வட்டம் வெற்றிசார்க் கரைவை யப்பேர்;
[5] அசைதலே தங்கல் நோதல்; அசனம்பட் டினியல் [6] லுண்டல். (உச)

103 ஆசானே புகர்பொன் சுவாமி யயர்வில்பா லைத்தி றப்பண்
தேசாருஞ் செவ்வே ளென்றே செப்புநா மங்க ளைந்தாம்;
ஆசார மறிவொ ழுக்க மாடைபெய் மழைகாட் சிப்பேர்;
தாசோக மொட்ட கப்பேர் தருமமென் றிரண்டு மாமே. (உரு)

104 [7] ஆசுகைக் கருவி குற்றம் அற்பமே கவச மோர்பாட்
டேசிலாச் சடுதி யாசோ டெல்லாமென் றுரைத்த லெண்பேர்;

---

(பி-ம்.) [1] பயம கத்தி யைம்மையஞ் சலியே நாற்பேர். [2] லோட்டுத. [3] ரேயுற. [4] காசுபொத்(?). [5] அசைதனெய் நெருங்கல் தங்கல். [6] லூணும். [7] ஆசெசன்பு சடுதி வான்பாட் டரிலற்புங் கவச மூற்றும்.

[1]தூசுபோர்ப் படைவ குப்புத் துகில்யானைப் புரசை முப்பேர் ;
காசுநற் செம்பொன் கோழை கதிர்மணிப் பொதுக்குற் றப்பேர். ()

105 செச்சையே வெட்சி யாடு செறிசந்தக் குழம்பு நீறு
பொச்சையாங் காடு சோடு புகன்றவிப் பேர்க ளாறும் ;
[2]பச்சையே தோலி லாபம் புரிமளம் புதன்மால் புந்தி
மெச்சுபை யொளிவி ரிக்கு மென்மர கதமு மாமே. (உஎ)

106 சசிநில விந்தி ராணி தவளங்கற் பூரம் [3]பற்றும்
நிசியுறழ் கடலி னோடு நிறத்தகார் மழையென் றேழ்பேர் ;
வசிவசி யம்வாழ் கூர்மை வாசித்தல் திரட்சி குற்றம்
[4]கசியுற வருட்டல் போழ்ந்தே வடுப்பட லெண்பேர் காட்டும். (உஅ)

107 வழுவில வொலிசி றக்கும் வல்லின மாஞ்ச கார
மொழியெது கையினிற் செய்யுள் மூவொன்ப தாகச் செய்தான்
கழுதுண வசுரர் சேனைக் கடறேலை குகனைப் போற்றும்
அழகியற் செந்தின் மேவு மருமருந் தையன் றானே. (உகூ)

[மிகை:] 1. தூசியே படைவ குப்புந் தூசுமு மென்னற் பாற்றே. 2. போசரே காவிரிக்கும் புகல்வினைக் குடையர்க் கும்பேர். 3, முச்சுட ரிரவி சோமன் மொய் யொளித் தழலு மாமே,

சகரவேதுகை முற்றும்.

---

## ஞகரவெதுகை.

108 நற்றவ முனிவர் விண்ணோர் நான்முக னெடியோ னேத்தும்
பெற்றமூர் கடவுட் கன்று பேசரும் பொருளு ரைத்த
வெற்றிவேற் குருசில் செங்கேழ் மென்மலர்ப் பாதம் போற்றிச்
சொற்றிகழ்ந் திடுஞ கார வெதுகையின் றொடையைச் சொல்வாம்.

109 கஞ்சுகி யங்கி யேமெய் காப்பாளர் பாந்தண் முப்பேர் ;
மிஞ்சிகை குண்ட லப்பேர் விளங்குபே ழைக்கும் வைக்கும் ;

---

(பி-ம்.) [1]தூசென்ப துகில்மா வியானைப் புரசைகட் டிற்றா சேயாம். [2]பச்சையே புதன்மா லாநி குந்தோ லோர் புதர்பைம் காசாம், [3]பவ்வம் [4]இசியுற,

வஞ்சுளம் [1]காரிப் புள்ளே வல்லிசா தகக்கொ டிப்பேர் ;
அஞ்சனி யிராமன் றாத னன்னைகா யாவுக் கும்பேர். (உ)

110 மஞ்சமே கட்டில் தூசாம் ; வாஞ்சையே விருப்ப மோர்புல் ;
கஞ்சிகை மணிக்காற் பள்ளி திரையாடை தூகிலுங் காட்டும் ;
குஞ்சரக் கிளவி யானை குளிர்நறுங் குவளைக் கும்பேர் ;
[2]ஐஞ்சைநல் லெழிலே யாடாம் ; அஞர் துக்க மறிவி லாமை. (ந)

111 கஞ்சனும் வலியன் கல்வாய்ப் புள்ளேகண் ணுடி மூப்பேர் ;
நெஞ்சமே மனமார் பின்பேர்; [3]நீஞ்சலே குடித்தல் நீந்தல் ;
மஞ்சரி யத்த நாள்பூங் கொத்துத்தார் தளிரோர் மன்னூல் ;
அஞ்சலி பேதை வாவ லங்கைகூப் புதலென் றாமே. (ச)

112 தஞ்சமா லெளிமை தாழ்வு தருப்பற்றுக் கோடே யைம்பேர்;
துஞ்சலே நிலைபே றுகுந் துயில்சோம்பு சாவே நாற்பேர் ;
கஞ்சமே தாளங் குல்லை கமலம்வெண் கலம்வட் டப்பம் ;
[4]அஞ்சமே யெகினப் புட்பேர் அச்சமென் றிரண்டு மாமே. (ரு)

113 இஞ்சியே மதிளே யல்ல மிலங்குதோற் பலகைக் கும்பேர்;
வஞ்சிமேற் செலவே யோர்பா வல்லிபெண் கருவூ ரைம்பேர்;
பஞ்சிபஞ் சாடை [5]தூறும் ; பஞ்சரம் செருந்தி கூடாம் ;
கஞ்சியே யனங்கு மும்பு காஞ்சிமா நகரு மாமே. (சு)

114 குஞ்சமீச் சோப்பி நாழி குறளைச்சொல் குறள்கூன் குன்றி
விஞ்சுதூய்க் கவரிக் குஞ்சி விளம்பிய நாம மேழாம் ;
கஞ்சனை யத்தம் பானை; காஞ்சனம் பொன்புன் கேபேர்;
வஞ்சமி லுஞற்றுத் திபோகம் வழக்கோதல் மனவெ ழுச்சி. (எ)

115 காஞ்சியே கச்சி யெட்டி கருமைமே [6]கலையு ணர்ச்சி
பாய்ஞ்செதி ரூன்ற லோடே நிலையின்மை பகரேழ் பேரே;
ஆஞ்சிகூத் தழுங்க லேலம்; அஞ்சலே யயர்வச் சப்பேர்;
நாஞ்சிலே மதிலு றுப்பும் கலிற்றுமு படையு மாமே. (அ)

---

(பி-ம்.) [1]வல்லி சாதக் கொடிகாரிப் புள்வ மூத்தும். [2]ஐஞ்சையா டறிவில்லான்பேர். [3]நீஞ்சேநீந் துதல்கு டித்தல் [4]அஞ்சமே யனமஞ் சாமை; ஐஞ்சலம் பஞ்ச வாசம். [5]தூறு. [6]கலைபு ணர்ச்சி.

116 [1]வஞ்சமே யற்பங் கள்ளம் வஞ்சனை சபதம் பொய்யோ
டெஞ்சலில் கொடுமை வாளென் றியம்பிய நாம மேழாம் ;
நஞ்சுகார் விடம்நை தற்பேர்; நவின்றபஞ் சானனந்தான்
[2]விஞ்சுசங் கரனா் தூண்டும் விளங்குசி யப்பே ராமே. (கூ)

117 அஞ்சனந் திசைக்கார் வேழ மணியுமை யிருள்க றுப்பு
விஞ்சுமோர் கற்பி றப்பு விழிக்கிடு மருந்தா றேபேர்;
மஞ்சுபூண் வலிவ னப்பு மழையானை முதுகே யோட
மிஞ்சுத விளமை சூளை மேடளி பன்னொன் றேபேர். (க0)

118 விரியுறு மொளிசி றந்த மெல்லினந் தனிவி ரண்டாம்
வரியெது கையினிற் செய்யுள் மும்மூன்றாய் வகுத்தல் செய்தான்
திரிபுரந் தன்னைச் செற்ற செம்மலின் செம்மல் செந்தாள்
அருண்முடி சூடுஞ் செந்தி லருமருந் தையன் றானே. (கக)

[மிகை. ]கிஞ்சுகங் கிளிமு ருக்காம்; கிஞ்சித்தே யற்பங் கொங்கை.

ஞகரவேதுகை முற்றும்.

## டகரவெதுகை.

119 வலிசிறந் தொளிர்ப ரானை வரைச்சிற கரியுங் கொற்றக்
குலிசிதன் மருக ஞய குருபர முருக வேளின்
கலிஞெலி பரிபு ரப்பொற் கமலமென் பாதம் போற்றி
யொலிசிறந் திடும்ட கார வெ துகையின் கவியோ துற்றும். (க)

120 வடமென்ப சிலைநா ணாலே மணிக்கோவை நகர்தாம் பைம்பேர்;
திடமென்ப வலியே மெய்ம்மை ; திட்டிகண் ணுளக்கு றிப்பாம்;
குடமென்ப நகரோர் கூத்துக் கும்பங்கோக் கரும்பின் கட்டி;
முடமென்ப வெய்யோன் பாகன் முதுமகன் [3]றனக்கு மாமே. (உ)

121 அடலேபோ ராற்றல் கோறல் அணுகலே யுடன்ப டற்பேர் ;
[5]மடலெழு தோடே பூவின் மட்டித ழோர்நூற் கும்பேர்;

(பி-ம்.) [1]வஞ்சமே சபதங் கள்ளம் வாளற்பங் கலாம்பொய் வஞ்சம். [2]விஞ்சரன் முகமே சியம் ; மிஞ்சேமிஞ் சுதல்வண் டாமே. [3]முடனு. [4]உடலணு கிடல்வ லிப்பே ருடன்படல் கொலையாற் றற்போர். [5]மடலேபூ விதழே யோர்நூல் வரிபனை யேடு மாமே.

கடல்பசு வுவரி யின்பேர்; கட்சிதுஞ் சிடங்கான் கூடாம்;
உடல்பொருள் வலிகா யப்பேர்; ஓடமே யறிவு தோணி. (௩)

22 கோடலே முறிதல் காந்தள் கொள்ளுதல் வளைத னாற்பேர்;
ஆடலே வார்த்தை கூத்தோ டாண்பெண்கூ [1]டுதல்கு னித்தல்;
சூடலே மூடல் வேய்தல்; சுடுவேசும் மாடு சுட்டல்;
பாடலே யிராகஞ் செய்யுள்; படாகைநீள் கொடிப டர்த்தல். (௪)

123 விடலையே வெற்றி யாளன் விளங்கும்பா லைத்தோன் றற்பேர்;
தொடலையே மகளி ராடல் சொற்றதே மாலைக் கும்பேர்;
படலையே படர்ச்சி தொங்கல் பரந்திடும் வடிவி னாமம்;
நடலையே நுடக்கம் பொய்ம்மை நாட்டும்வஞ் சனையே முப்பேர். ()

124 [2]கடைசொரி வாயி லப்பக் கடையீறோ டிடமங் காடி;
விடையெதிர்மொழியேற்றின்பேர்விடுதலென் றுரைத்தல்முப்பேர்;
[3]தொடைகணை பாவு றுப்புச் சொற்றொடர் தொடுத்தன் மாலை;
[4]முடைபொதி திரட்சி நாற்ற முடைபெட்டி தவிடே கோளி. (௬)

125 விடரேகான் [5]றார்த்த ரோடு விடத்தொழில் செய்வோர் [6]முப்பேர்;
தொடரேசொல் பழமை தாரி துவக்குட னிகள மைம்பேர்;
[7]படரேநோய் நடைநி னைப்பு பரப்பன்பு கொடிவீ ரர்க்காம்;
[8]அடரேமல் கலின்பே ரைய மலங்குறுந் தகடே முப்பேர். (௭)

126 தடைகுடங் கவசம் பாரி தடுத்தல்பூண் கடைபு ணர்ப்பாம்;
தொடையல்வா சிகைதே மாலை; தொடர்பேகட் டுதல்நட் பும்பேர்;
[9]படைமரம் பரிக்க லன்பேர் படாஞ்சுற்றும் பலகை யென்ப;
கடையமிந் திராணி யாடல் கங்கண மிருபே ராமே. (௮)

127 குடைதலே கடைதல் தோய்தல்; குட்டியே குருளை யெச்சம்;
இடையலே யிடைதல் பட்டாம்; இட்டியே யீட்டி யாகம்;
மிடைதலே நிறைவி னோடு மிருத்திடல் நெருங்க லும்பேர்;
புடையிடம் பரி சப்பேர்; பூட்கைமேற் கோள்தோல் சிங்கம். (௯)

---

**(பி-ம்.)** [1]டுதலே வெற்றி. [2]கடைசொரி யிடையீ றேயங் கடியப்பு கடைவா யற்பேர். [3]தொடையேபா வுறுப்பு வாளி. [4]முடையேநாற் றந்தி ரட்சி முடைந் தபெட் டிகைபொ திப்பேர்—நடைகோளி கைப்ப ரிப்பேர் தவிடறு நாம மாமே. [5]றார்த்தர் விட்பு. [6]ஆமே. [7]படரேபற் றனல்தூ மம்நோய் படைவீரர் கொடிப ரப்பாம். [8]அடரேபை யயம்நெ ருக்க. [9]படையேமன் பரிக லன்பேர்.

128 அடியென்ப வடிமை சென்னி வெளியேதா ளண்ட நாற்பேர் ;
கொடியென்ப வல்லி வஞ்சி நீளந்திண் கொடிகாக் கைப்பேர் ;
வடியென்ப கூர்மை யோடல் ; [1]மாட்டல்மாட் டிடுதல் முட்டல் ;
பிடியென்ப நெடுங்க ழுத்தல் குஞ்சரங் கவரிப் பெட்டை. (௧௦)

129 [2]படியங்க வடிசோ பானம் பார்நாழி குணம்ப டிப்பேர் ;
வெடியென்ப வெளிகள் ளச்ச மென்புகை வெள்ளி டிக்காம் ;
செடியென்ப விளக்கம் பாவங் குணமின்மை புதருஞ் செப்பும் ;
குடியென்ப குலம் புருவங் குடித்தலே நகரே நாற்பேர். (௧௧)

130 அடையிலை நக்கம டுத்த லப்பமிம் முப்பேர் செப்பும் ;
கிடையுவ மைப்பேர் வேதக் கிளரொலி கிடை கிடைத்தல் ;
படைநிரை படுக்கை தானை பல்லணம் படைக லப்பை ;
நடைவழி யுடனொ ழுக்கம் நற்செல்வ மூப்பே ராமே. (௧௨)

131 கடிஞைபாத் திரஞ்சூ தாடு கருவியென் றிருபேர் காட்டும் ;
மடிபகை [3]யடங்கல் சோம்பு வயிறுநோய் புடைவை தாழை ;
படிதலே புணர்தல் தோய்தல் ; படலமத் தியாய மூடல் ;
பொடிதலென் றுரைத்த நாமம் பொடித்தலங் குரித்த லாமே. ()

132 படிகமே நிருத்தம் பிச்சை பளிங்கெனு முப்பேர் செப்பும் ;
கடிகைநா ழிகையே துண்டங் கதவிடு தாழே முப்பேர் ;
சுடிகையே மகுட முச்சி சுட்டியுந் திலக மும்பேர் ;
நொடிபிதிர் கிளவி பிட்டு நாவலென் றோதல் நாற்பேர். (௧௪)

133 அடலைவெண் பொரிசாம் பற்பேர் ; ஆட்டிபெண் [4]ஆட்டற் கும்பேர்;
கெடவரல் மகளிர் கூட்ட மவராட லிவைகி ளத்தும் ;
படலிகை கைம்ம ணிப்பேர் பதாகைபீர்க் குடனே முப்பேர் ;
கடவுளே தெய்வம் நன்மை ; [5]கடனேயுன் னல்பின் வாங்கல். (௧௫)

134 குடிலமே ககனம் வஞ்சம் சடையுடன் வளைவே கோட்டம் ;
தடிவய லிலக்கை வில்லுத் தண்டுமீன் றசையு டும்பாம் ;
தொடிவளை யொருப லப்பேர் சூழ்ந்தகங் கணமுஞ் சொல்லும் ;
சடிலமே குதிரை துன்றல் சாற்றிடும் வேணி முப்பேர். (௧௬)

---

(பி-ம்.) [1]மாட்டேமாட். [2]படியென்ப குணம்பார் நாழி பகையங்க வடிசோ பானம். [3]வழுங்கல். [4]ஆடற் கேயாம். [5]கடனே யுன்னுதல்பின்.

135 முடியென்ப சிமிலி சென்னி முடிநாற்று முடிகி ரீடம் ;
குடிஞைபுட் பொதுவும் யாறுங் கூகையும் பதியும் வைக்கும் ;
படிவம்நற் செவ்வி நோன்பாம் ; பட்சியே குதிரை பல்புள் ;
[1]இடிதரூப் பணஞ்சு ணம்நென் மாத்தக ரம்மி டிச்சொல். (கஎ)

136 மிடலேசேய் வலிவெண் டிங்கள் ; வேட்டலே விவாக [2]மிச்சை ;
[3]தடறேதொண் டாளு ரைப்பேர் படையுறை பதகன் சாற்றும் ;
கொடிறேபூ சங்க துப்பாம் ; குடம்பையே முட்டை கூடாம் ;
கடிறேநான் வழிவாட் புட்டில் ; காட்டியே [4]பிரட்டி பன்றி. (கஅ)

137 தடாவென்ப மிடாவின் பேருந் தக்கநற் பெருமைக் கும்பேர் ;
கடாவலே யெதிர்மொ ழிப்பேர் ஊர்திதூண் டற்குங் காட்டும் ;
கிடாவலே வேல ளுட லெறிதற்குங் கிளத்தற் பாலாம் ;
[5]படாமிடு திரையே யாடை ; பட்டேபட் டாடை சிற்றூர். (ககூ)

138 வட்டிகை யோவி யம்நால் வகையிற்சாந் தொடுகூ டைப்பேர் ;
கொட்டியே [6]புறவா யிற்பேர் கூட்டமோர் மூலங் கூறும் ;
பட்டிகை யரைநா ணில்லம் பயோதரக் கச்சே தெப்பம் ;
தட்டியே பரிசை காவல் சாற்றுறும் பலகை முப்பேர். (உ0)

139 [7]இடக்கரே மறைச்சொல் கும்பம் ; இடங்கழி நெருங்கல் தூர்த்தர் ;
கிடைத்தலே[8]யெதிர்தலொன் றைக்கிடைத்தலென் றேதற்கும்பேர் ;
கடைப்பிடி மறப்பிலாமை கருதிய தேற்றஞ் சொல்லும் ;
படப்பையே தோட்டம் நாட்டிற் புறம்புமென் றேதற் பாலாம். ()

140 கட்டலே யிறுக்க லார்த்தல் களைதலே தடைகள் ளப்பேர் ;
தொட்டல்கை தீண்ட லுண்டல் தோண்டலென் றேதல் முப்பேர் ;
தட்டலே தடையே கிட்டல் ; தட்டம்நச் சுப்பல் தாலம் ;
கொட்டலே யப்புல் மொத்தல் ; [9]குடத்திமுல் லைப்பெண் ணோர்மா,

141 நாடென்ப [10]மருகு வையம் நவிர்பின்ன [11]லணியார் வைப்பேர் ;
தாடென்ப தலைமை கோவில் தளிர்தூறல் பெருமை யாற்றல் ;

(பி-ம்.) [1]இடிதரு மணஞ்சு. [2]பேற்றல். [3]தடறுகூன் றெண்டா ளுமை ர. [4]பிராட்டி. [5]படாமிடு திரையா டற்பேர். [6]புரவா. [7]இடக்கரே நெருங்கல் கும்ப மிடங்கழி மறைச்சொல் தூர்த்தர். [8]யெதிர்த்த. [9]கொடும்பைதாம் பருவி குண்டம். [10]மறிகு. [11]லணிபூர் வைப்பேர்.

ஏடென்ப மகியே குற்ற மியன்றகண் ணிமைபூத் தோடாம்;
பீடென்ப துழைவே யொப்பே வலியொடு பெருமைக் கும்பேர். ()

142 ஏடகம் பலகை பெண்ணை நல்லாடை யிலாங்க விப்பேர்;
பாடகஞ் சிவப்பு நீழ லொலிபாத கடகம் பன்னும்;
கோடக முடியு றுப்புங் குலவுறு பரிக்குங் கூறும்;
மாடகஞ் சகோட யாழ்ப்பேர் வலிமுறுக் காணிக் கும்பேர். (உச)

143 ஆடென்ப மேடம் வெற்றி யாடவர் நிருத்தம் நாற்பேர்;
சேடென்ப பெருமை நன்மை திரட்சியோ டழகுஞ் செப்பும்;
சூடென்ப கண்ணிற் சூடே சூட்டேபுட் டலைச்சூட் டிப்பேர்;
[1]மோடென்ப வுதரம் போழ்தல் பெருமைமே [2]டெனுமொ ழிப்பேர்.

144 மாடுபொன் செல்வம் பக்கம்; வட்டணை யறுத்தல் மொத்தல்;
கோடிகந் துகில்பூந் தட்டே [3]குண்டிகை யதற்குங் கூறும்;
பாடிடம் பெருமை யோசை படுதல்பக் கம்பண் பென்றும்;
ஓடென லலவு மாமென் றுரைத்தலோ டுதல்கெ டற்பேர். (உரு)

145 ஊட்டியே விலங்கின் கன்றாண் ஒளிர்மழை மிடறே முப்பேர்;
கோட்டிகண் பார்கு றிப்பேர் கூட்டம்வா யிற்குங் கூறும்;
பாட்டியே நரிநாய் பன்றி பாணிச்சி பாட்டி யைம்பேர்;
நாட்டியங் குறிப்பே யாடல் நல்வடி வம்முப் பேரே. (உஎ)

146 மட்டென்ப நறவே யெல்லை வாசமா யுதமும் வைக்கும்;
கட்டென்ப மிகுதி கட்டுக் களைதலே குறிக்கா வற்பேர்;
புட்டங்கோ டிகமே காகம் பொருந்துறு நிறைவும் போற்றும்;
குட்டம்பூர் தடம்நோ யாழம்; கொடிஞ்சிதேர் தேர்க்கூம் பாமே. ()

147 ஒட்டென்ப படைவ குப்பும் அற்பமு மூரைக்கற் பாற்றே;
பட்டடை யடைகு றட்டின் பால்விளை பண்ட ராசி;
கட்டளை நிறைகல் லொப்பே யிட்டிகை யியற்ற லாணி;
சட்டகந் தட்டம் பாயல்; சாடுவிற் பன்னர் பாண்டில். (உகூ)

148 [4]ஒடுக்கமே யடக்கம் பார்தல்; ஒடுங்கியே மூளைகூம் பற்பேர்;
கடுத்தலொப் பைபயம் வேகங் கலந்துறச் சிந்தற் கும்பேர்;

(பி-ம்.) [1]மேடென்ப. [2]டெனவும் போற்றும். [3]கெண்டிகை. [4]ஒடுக்கமே முடியச் செய்தல் அடங்கல்பாந் துதலோ டும்பேர்.

தொடுப்புழு படைவ ளைப்புச் சொற்புறங் கூற னாற்பேர்;
[1]வடிச்செம்பு தழும்பு குற்றம் வண்டுமா வடுவேச் சாமே. (௩௰)

149 உடுக்கையோர் பறையே யாடை; [2]ஒடுத்தலே சொரிவொ சித்தல்;
கடத்தலே நடத்தல் தூண்டல் காணுறத் தாண்டல் முப்பேர்;
தொடுத்தலே வளைத்தல் பற்றல் சொற்கூட்டல் பிணித்தல் நாற்பேர்;
அடுப்புயர் பாணி நாட்பேர் அச்சஞ்சல் விப்பேர் வைக்கும். (௩௧)

150 படுகரே பள்ளங் கேணி பகர்கமண் டலமே முப்பேர்;
முடுகலே விரைவே மல்லல் மூட்டுதல் மிகுதி யச்சம்;
கடுமையே [3]மிகுதி வல்லை கொடுமையே யகறல் காட்டும்;
வடுகுய ரிந்த ளப்பண் மருதயாழ்த் திறத்தோ ரோசை. (௩௨)

151 மாடமே யுழுந்தோ டில்லாம்; வட்கலே நாண்கே டாகும்;
பாடமே கலைப யிற்றல் பிறங்கொளி யிரண்டும் பண்ணும்;
கூடமில் மறைவு வஞ்சங் குவட்டுச்சி [4]கொல்சம் மட்டி;
சேடனே வற்பேர் பாங்க னனுசன்பாம் போர்சா திப்பேர். (௩௩)

152 கூடலே பொருந்த லூடல் மதுரைமா நகருங் கூறும்;
பாடைவாள் தீட்டுஞ் சாணை தேயச்சொல் பகரி ரண்டாம்;
கீடமே யளியே கேழல் கோற்புழு வெனக்கி ளத்தும்;
பீடிகை யாவ ணம்பூண் கொள்கலம் பீட முப்பேர். (௩௪)

153 ஆடவ ரிளைஞர் தம்பே ராம்புரு டற்குங் கூறும்;
பேடவி காம னுடல் பிறங்கிய நகரே முப்பேர்;
பாடவி கள்ளே யோரூர்; பட்டிமை கரவே வஞ்சம்;
கோடணை வரச்சி யப்பேர் கொடுமைக்கு மொலிக்கும் பேரே. (௩௫)

154 சுட்டியே பட்டஞ் சுட்டி சொற்றநா வுடனே பங்கி;
செட்டிவா ணிகன்செவ் வேள்பேர்; [5]தெட்டியே நாய்கன் யானை;
பட்டியே யிடம்சு வாப்பேர் [6]பகர்ந்தகள் ளுக்கும் வைக்கும்;
வட்டிலே புட்டில் நாமம் வழிகூடை [7]புடன்முப் பேரே. (௩௬)

---

(பி-ம்.) [1]வடுத்தழும் பேச்சு வண்டு வான்கூர்மை வடுச்செம் பாமே. [2]ஒடுக்கலே யடங்க லோசை. [3]வல்லை கூட்டம். [4]கோல்சம் மட்டி. [5]தெட்டிவா ணிகன்யானைப்பேர். [6]படர்புதர் கள்ளே சோரம். [7]வட்டித்தற்பேர்.

155 கட்டியே மகிழ்ச்சி யோர்புள் கருப்புவட் டடனே முப்பேர் ;
கிட்டியே தலையீற் றாவுங் கிளத்திய தாளத் தும்பேர் ;
தொட்டியே யழகு வாயிற் சொற்றகள் ளெனவே முப்பேர் ;
[1]விட்டிலே கொலையி னுமம் விளக்குறு பதங்க மும்பேர். (௩௭)

156 முட்டையே தவிடண் டப்பேர் ; முநிவல் பெண் ணுப்செந் நாயசம் ;
திட்டையே யுரலு மேடுந் திண்ணையும் நண்ணு மப்பேர் ;
தட்டையேய் தினைத்தாள் கிள்ளை தனைக்கடி கோல்தீ முண்டம் ;
ஒட்டையே நெடுங்க ழுத்தல் ஒருமாஞ் சாண்முக் [2]கோலாம். (௩௮)

157 இடங்கரே குடங்கர் தூர்த்த ரெய்துநீர் முதலை முப்பேர் ;
முடங்கலே மடங்கல் கைதை மூங்கில்நோ [3]யாங்கு நாற்பேர் ;
படங்குமேற் கட்டி சேனை பகர்பெருங் [4]கொடிபுள் ளோசை ;
விடங்கமோர் கொடிகொ டுங்கை மேன்முக டிளமை யாண்மை. ()

158 சூடிகை கிரீட முச்சி ; சுடர்க்கடை மின்மினி மஞ்ஞை ;
சேடிவிஞ் சையரூ ரேணி செப்பிய விகுளை முப்பேர் ;
மோடியுள் ளத்து வஞ்சங் காடுகாள் மூதே விப்பேர் ;
தாடிம மென்ப தாது மாதுளை சந்தா னும்பேர். (௪0)

159 ஆடியோர் மாதங் காற்றே கண்ணுடி படியா ணிப்பேர் ;
சாடியே யாடை தாழி ; சடைவேணி வேரோர் பூடாம் ;
தேடியே தொழிலி லாபம் ; சேடமே சிறுமை மிச்சில் ;
[5]காடிசோ றாறு காய்நெய் ; [6]காட்டமே சமித்து வாசி. (௪௧)

160 மாட்சியே [7]திநந்தல் குற்ற மமைதியே [8]நிரப்பே மானம் ;
காட்சியே யறிவி னுமம மின்புறக் காணற் கும்பேர் ;
பூட்சியே யுரிமை [9]யின்பேர் பொருந்துறு முடற்கும் போற்றும் ;
ஞாட்பெனும் பேரே கூட்டம் நற்பாரம் படைபோர் நாற்பேர். ()

161 விடம்விடத் தொழிலே யால மேவுறுந் [10]தியாக்கி யப்பேர் ;
சடமுட லிருமூன் றேபோய் [11]சாற்றுறுங் கொடுமைக் கும்பேர் ;

---

(பி-ம்.) [1]விட்டிலே கொலைபதங்கம் ; வீமெடயில் முத்தி யின்பேர். [2]கா லாம். [3]ய் தாங்கோ லைப்பேர். [4]கொடியுள். [5]காடிசோ றாறு காய் நெய் கஞ்சி முத் தடனே ஊர்தி. [6]காட்டந்திக் ககவங் கட்டை. [7]திருத்தல். [8]ஊற்பேர்.? [9]தாயம் ; பொடிதுகள் மூளையே சாம்பல். [10]பிரச்சி யப்பேர். [11]தண்ணளி.

சுடரொளி தளிர்வி ளக்குத் தூய்க்கனல் வெய்யோன் றிங்கள்;
மடமறி யாமை [1]சத்திர மனைமுனி வாசம் நாற்பேர். (சங)

162 வேட்டுவன் மகநாள் வேடன் விளக்குறுங் குளவி மூப்பேர்;
சேட்டையே விசாகங் கேட்டை சீர்கேடி மூற்றில் நாற்பேர்;
கேட்டையே கலதி யோர்நாட் கிழத்தியென் றறைதல் மூப்பேர்;
நாட்டமோர் பண்கண் ணுடல் நாந்தக மூளப்பா டச்சம். (சச)

163 நடுமையம் நடலோர் நாடி; நட்டமே கேடுங் கூத்தும்;
கடுவிடம் விரைவு முள்ளோ டரிதகி கசப்போ டைம்பேர்;
கிடுகொரு பறையே சட்டம்; கிடக்கைபூ தலம்பா யற்பேர்;
படுதலே யொலியின் றுதல் பகர்தலுண் டாதல் பூத்தல். (சரு)

164 சடரமே வயிறேந் திப்பேர்; [2]தடாரிபல் பறைமூ ழாவாம்;
[3]தொடரே நூல் செய்யு ளாகும்; துடுப்பெகை மூலயி ரண்டாம்;
விடலேகற் பிளப்பு விள்ளல்; மேடுமேம் பாடு யர்ச்சி;
அடகேபொன் றீடாக் கொள்ளல் இலைக்கறி யிரண்டு மாமே. (சசு)

165 இடும்பரே நிருதர் கிண்பர்; ஈட்டியோர் படைவ ளர்த்தல்;
கிடங்குநீர் நிலைபல் பண்டங் கிளர்சாலை கிளத்தற் பாலாம்;
குடந்தமஞ் சலிதி ரட்சி; குடஞ்சுட்டே சுராபி மேதி;
மடங்கல்கூற் றிடிநோய் சீயம் வடவைதூ ருழி தாழை. (சஎ)

166 தடவென்ப பெருமை யோம குண்டமே வளைவுஞ் சாற்றும்;
விடபமே மாக்கொம் பேறு விளங்குதூ றெனவே மூப்பேர்;
துடவையே தோட்டஞ் சோலை; துடாவென்ப துழவே மஞ்ஞை;
வடவைதீ குதிரைப் பெட்டை யுவாப்பிடி யெருமை வைக்கும். ()

167 துடியேலம் பறைநுண் போது துடிப்புட னேழு மாதர்
நடியாடல் செவ்வே ளாடல் நாட்டிய வற்ப மேழ்பேர்;
படிறேபொய் கொடுமை கள்ளம்; [4]பட்டாரகன்றே வாசான்;
[5]வடிவேநன் மேனி மெய்ச்சொல்; வடிதலே யொழுகல் நீளம். ()

(பி-ம்.) [1]சித்திர. [2]சடமென்ப கொடுமை காயம். [3]தொடருரை செய்யுளாலாம். [4]பட்டார காசா ந்ண்டர்? [5]வடிவமெய் மேனி வேள்வி.

168 கோடாங் குதிரை யெட்டி தூங்குகொம் புடனே சோலை
நாடுறு மயிர்ச்சாந் தாலம் நவிற்றுநா மங்க ளேழாம்;
பாடலஞ் சபதம் வாசி பாதிரி களிப்புச் சோணம்;
கேடசம் பரிசை வேறு [1]கேடிலூர் பலகை செப்பும். (ருo)

169 [2]ஓடையே நீர்க்கி டங்கோ டொளிர்மலைச் சரிமால் யானை
மாடையிற் குயிற்றும் பட்ட மாமொன்றோ டிருமூன் றேபேர்;
கோடைமேல் காற்றி னோடே குதிரைவெண் காந்தள் வேனில்;
வாடையே நீடும் வீதி வடகாற்றுந் தானு மாமே. (ருக)

170 கடகமே சேனை வட்டம் கைவளை பரிசை யோர்கூத்
தடகருந் திடும்யா னைக்கூட் டம்மதில் படைவீ டெண்பேர்;
படகமோர் வாச்சி யப்பேர் கவரிமாப் [3]பதலை பண்ணும்;
வடகமே சருமம் மத்த [4]வாளமென் றிரண்டு மாமே. (ருஉ)

171 பாடிபா சறைநா டாயர் பாடியே செறிப தாதி
வாடிலாப் பேரூர் மெய்க்கே வனைகவ சங்க ளாறும்;
[5]நாடிநா சிகைந ரம்பே நவிற்றுறு துணைபெண் கூந்தல்;
[6]கோடியெண் புதுமை தூசம்; [7]குடுமியே வெற்றி யுச்சி. (ருந)

172 முடலையே பெருமை வெய்ய முடைநாற்றந் திரட்சி யுண்டை
யெடுமுரா டென்கு றட்டோ டெய்துறுங் கழலை யேழ்பேர்;
பிடகநூல் வேதத் தின்பேர்; பெட்டலே விரும்பல் வேட்டல்;
மடைவயல் மடையே யன்ன மணிப்பணி கடைப்பூட் டும்பேர். ()

173 புட்கரம் நிறைவு வாள்நீர் புட்குழு மருந்தே [8]தீத்தம்
முட்கம லம்மி பக்கை நுனிபாண்ட முகம்பத் தேபேர்;
கொட்புறல் திரித லோடு சுழற்சியென் றிருபேர் கூறும்;
பெட்புயர் விருப்பம் பேடாம்; பிடரேதோண் மேலெ ருத்தம். ()

174 தட்டேநேர் நடுப்பேர் [9]முட்டுச் சாற்றிய பரிசை முற்றில்
[10]வட்டமோ டுயர்ந்த குற்றம் வளைவுட னேழ்பே ராகும்;

---

(பி-ம்.) [1]கேடிலாப். [2]ஓடையே பட்டந் தாரு கிரிச்சரி கரிநீ ரோடை. [3]பணவை பன்னும். [4]வாளமும் வடக முமபேர். [5]நாடிபெண் கூந்தல் பாசி துளைநாசி கைந்ந ரம்பாம். [6]கோடியே. [7]குடுமிவில். [8]தீர்த்தம். [9]முட்டுத் தட்டலே. [10]வட்டப்பே ரொடுதுற் றப்பேர் வளைவெனு மெண்பேர் வைக்கும்.

¹சுட்டலே பொருமை யெண்ணம் ; ²தோட்டியங் குசங்க பாடம் ;
எட்டொரு கணித மெட்டல் ; எட்டிகாஞ் சிரமோர் சாதி. (௫௬)

175 கோடென்ப வயல்வ ரம்பூ துக்கொம்பு விலங்கின் கொம்பு
நீடுஞ்சங் கசலத் துச்சி நெடுங்கரை மரக்கொம் பெண்பேர் ;
தோடென்ப தொழுதி பூவின் ³றோடணி குழைப்பேர் தானும்
நாடும்பச் சிலையி னோடே வளைவெனு நாம மாறே. (௫௭)

176 கடமேவான் சுரம தங்கோற் கணங்கயி றுவாக்க துப்பு
குடம்நீதி யுடல்பொன் வெற்பின் கொழுஞ்சாரல் பன்னொன் றேபேர் ;
தடமேசெல் வழித டாகம் தடக்கரை பெருமை யானை
நடவிய சரிவி ளைச்சல் ⁴கவில்வளை வுடனேழ் பேரே. (௫௮)

177 பட்டமே வழிவி லங்கின் பாயல்கே டகந்து சோடை
திட்டநற் பதவி யெஃகங் கவரிமாத் திகழெண் பேரே ;
வட்டமே பரிசை தாழ்வு வலைபங்கை மணித்து சூர்கோள்
ஒட்டுநீர்ச் சாலெ ழுத் துத் திரட்சிபோட் டம்பேர் பத்தே. (௫௯)

178 இடமேழு ⁵விடம்வி சால மிடப்புறம் பெருமை ⁶செல்வம்
திடமேவ நெருங்க லென்னச் செப்பிய நாம மாறும் ;
⁷படமேசம் படஞ்சிம் புட்செய் படம்யானை முகப டாத்தோ
டிடமார்பாந் தட்ப டப்பெ ரெழுது படமைந் தேபேர். (௬௦)

179 ⁸உடையென்ப குடைவேல் செல்வ முடுக்கையே முள்பூ ராடம்
நடைசரண் கலனை வாசி நற்கவ சம்மொன் பான்பேர் ;
குடையென்ப கவிகை கல்லை குடாவே ளாடல் நாமம்
அடைமிதி யடிமே விட்ட கொட்டையீ கையைம் பேரே. (௬௧)

180 உடுவிண்மீன் கிடங்கே நாவா யோட்டுங்கோ லம்பி னீர்க்கோ
டுகணை யிளம்பிஞ் சென்ன வுரைக்குநா மங்க ளாறும் ;
படுமரக் குலையே கள்ளுநப் பரவுநீர் நிலைசும் பத்தோ
டடுகன்மை வெள்ளி லைப்பே ரியம்புறும் பொய்கை யேழ்பேர். ()

---

(பி-ம்.) ¹சுட்டென்ப. ²சுடலேகாட் டிடலெ னும்பேர். ³றோடணை. ⁴கவில்விளை. ⁵விடங்கள் செல்வ. ⁶மல்கல். ⁷படமேபை குழி தூசூர் படம் விடு படமு னந்தாள். ⁸உடையேமுன் குடைவேல் செல்வ முடுக்கைதோள் கலனை வாசி — யடலார்வெங் கவசம் பூராட நாளெனு மொன்பான் பேரே.

181 கோட்டமே படப்பை நாடு கோயிலவ் வியமான் கொட்டில்
நீட்டுவாத் தருமம் [1]பாசம் நீர்நிலை மருதத் தூர்யாழ்
நாட்டுகோண் குராங்கே வாவி நல்வயல் மூவைந் தேபேர் ;
ஓட்டமே லூதடே தோல்வி யொழுக்குறும் வீதி முப்பேர். (சுங)

182 கடிமணம் விரைவு கூர்மை காப்பச்ச மெழில்வி ளக்கம்
வடிவக லல்குல் காலம் வரைவுபேய் சடிப்பு வெம்மை
வெடிகரிப் பேசி றப்பு மிருதிநற் புதுமை பையம்
ஓடிவில்லிம் மிதம்பு ணர்ச்சி யொன்றொழி யிருபான் பேரே. (சுச)

183 தகைசெறி டகா மாய வெழுத்தெது கையினிற் சார
நிகாறு கவிதை [2]யேமொன் பாளென நிகழச் செய்தான்
முகிழ்முலைக் குறமின் கேள்வன் மொய்ம்மலர்ப் பாதம் போற்றும்
அகனில மேத்துஞ் செந்தி லருமருந் தையன் றானே. (சுரு)

[மிகை.] 1. இடைநவ் விறையே யானை யிடமேறுண் ணுசுப்பே யையம் பேர். 2. ஈடென்ப பெருமை யொப்பே வலிகுழை வெனுநாற் பேரே. 3. கேடமே ஊளியா ரென்ப. 4. கடிப்பகை யேவி ளாவுங் கடுகெனு மிருபே ராமே. 5. கூட்டமே குழுப்பி ன்னு ணுக்குப் பருத்துவ மூப்பேர் கூறும். 6. நெடு மைவார் தவின்பே ரோடே நெறிகரு மயிரு மாமே. 7. தேடுபொன் றேடற் கும்பேர் செய்ம்முயற் சிக்கும் பேரே. 8. கோடணை வாச்சி யப்பேர் கொடு மைக்கு மொலிக்கு மாமே.

டகரவேதுகைமுற்றும்.

---

(பி-ம்.) [1]வாசம்(?) [2]யெட்டெட் டென்றாய்.

# ணகரவெதுகை.

184 [1]வளங்கிள ரொளிர்ப சும்பொன் வரையுறழ் தோளுங் கண்ணும்
உளங்கிளர் பன்னி ரண்டோ டுரைக்குமீ ராறுங் கொண்ட
தளங்கிளர் நெடிய வேலோன் றண்மலர்ச் சரணம் போற்றிக்
[2]களங்கற வருண கார வெதுகையின் கவியைச் சொல்வாம். (க)

185 இணரேபூப் பூம்ப ராக மியன்றபூங் கொத்தே மூப்பேர் ;
புணர்வேதோய்ந் திடலி சைப்புப் [3]பொருபவென் றேதற் கும்பேர்;
துணரேபோ துப்ப ராகம் ; [4]துண்டில்வேய் சூழ்தற் கும்பேர் ;
உணர்வேநல் லறிவே யூட றீர்தற்குந் தெளிவுக் கும்பேர். (உ)

186 மிண்டலே நிறைவி னுமம் நெருக்குதற் கும்வி ளம்பும் ;
கண்டல்கே தகைமுள் ளிப்பேர் ; கலிச்சிபொன் மழுவு ளிப்பேர்;
கொண்டல்மே கங்கீழ் காற்றும் ; கொண்மூவென் பதுவின் மேகம் ;
வண்டல்பெண் கூட்ட மாடல் ; மாண்புமாட் சிமைப்பேர் நன்மை.

187 [5]சண்டனே யலிகால் வெய்யோன் ; தணித்தல்சே மித்தல் [6]தீர்த்தல்;
குண்டமீ ரெட்டாண் டிற்பெண் குளமாழங் கும்பம் பன்றி ;
புண்டா றுதற்கு றிப்பேர் பொலிவுறு கழுகும் போற்றும் ;
கண்டகம் வயிர முள்வாள் கதிர்விடு சுரிகை நாற்பேர். (௪)

188 [7]பேணலே கருத லாசை ; பிணர்கோங்கு நெருக்கங் கட்டி ;
கோணலே மாறு பாடே கூன்சிந்து வளைவே நாற்பேர் ;
காணலே குறித்தல் பார்த்தல் கழலிணை பணிதல் மூப்பேர் ;
மாணலே நன்மை யின்பேர் மாட்சிமை தனக்கு மாமே. (௫)

189 ஆணமே குழம்போ டன்பாம் ; [8]அணில்வரிப் புறங்காற் றென்றும் ;
ஓணமே யோணு மாறும் ; உண்மையே நியதி சொல்லே ;

---

(பி-ம்.) [1]வளங்கிள ரெளிமொய் நீப மாலைமீதா யாறி ரண்டென்—றுளங் கொடோட் கிரிபு மாறு முகமூன்கொண் டொளிரும் புத்தேள்—தளங்கிளை ராடு தோய் செம்பொற் றாமரைச் சரணம் போற்றிக். [2]களங்கறு ணகாரத் தொற்று. [3]பொருப்பென்றே தற்கும் பேரே. [4]தூண்டல்வேய். [5]சண்டனே யலியே காலன் றபனனென் றேதற் கும்பேர். [6]தீர்தல். [7]பேணலே கருத லாசை யிருத்துறல் பேசு மூப்பேர். [8]அணங்கிழலாய்ப் புறமூன்றுவாம்.

காணமே பரியூண் செக்கோர் கண்ணீர்பொன் னளத்தல் கொள்ளாம்;
கோணமே குதிரை வாளங் குசம்வளை வுடனே மூக்காம். (௬)

190 வண்மையே வளங்கொ டைப்பேர் வலிபுகழ் குணமே வாய்மை;
ஒண்மையே யறிவு நன்மை [1]யோங்கிய வழகே மூப்பேர்;
வெண்மையே யறிவி லாமை [2]விளர்தன்மை கற்கண் டென்ப;
எண்மையே யிறுமாப் பேந்தல்; எண்டோளி துர்க்கை காளி. (௭)

191 அண்டம்வான் பறவை முட்டை யமரர்த மிருக்கை மத்தாம்;
பண்டம்பொன் பரிகா ரப்பேர்; பணவையே பாண்டு டிப்பேர்;
துண்டஞ்சா ரைப்பாம் பின்பேர் துணியொடு வதன மூக்காம்;
கண்டென்ப கரும்பின் கட்டி கழலைகண் டித்தற் கும்பேர். (௮)

192 மண்டலம் பருதி நாடு வட்டமிம் மூப்பேர் வைக்கும்;
அண்டரே பகைவர் வானோ ராயரென் றூக மூப்பேர்;
சுண்டனே சதைய நாளுஞ் சூறனும் வேறு காட்டும்;
குண்டலம் விசும்பே வட்டம் குழையெனு மூப்பே ராமே. (௯)

193 இண்டையே பதுமம் மாலை [3]யேணமான் வலியி ரண்டாம்;
தொண்டையா தொண்டை கோவை சொற்கள மூவாத்து திக்கை;
உண்டையே திரளை பிச்சை யுருதிரள் படையு றுப்பாம்;
கொண்டையே மயிர்மு டிக்கு மிலந்தையின் கனிக்குங் கூறும். ()

194 திண்டியே களிறு பூமி தெழித்திடும் படக மூப்பேர்;
பிண்டிபிண் ணாக்க சோறு கருப்பணம் புணர்தம் நென்மா;
[4]சுண்டியே சுக்கோர் பூடாம்; [5]துணியறை சேறே தூக்காம்;
கண்டிகை பதக்கம் வாகு வலையமே கலன்பெய் செப்பாம். (௧௧)

195 பண்டேமுன் பேய மூப்பேர்; [6]பணிலஞ்சஞ் சலம்வெண் சங்காம்;
கண்டூதி காஞ்சொ றிப்பேர் தினவிரு பேருங் காட்டும்;
வண்டேவெண் சங்கங் குற்றம் வளையளி [7]வாளி யைம்பேர்;
செண்டேகூர் மைப்பேர் வாசி யூர்வெளி பூச்செண் டேபேர். (௧௨)

---

(பி-ம்.) [1]யொழுங்கெழி றகாக்கும் வைக்கும். [2]விளர்வேகற் கண்டே தன்மை. [3]யெண்மானம் வலிய ரண்டாம். [4]சுண்டியே சுக்கோர் பூடாம் சுவற் றற்குஞ் சொல்லுற் பாற்றும். [5]துணியறை சேதுத் தூக்கு. [6]பணிலமே சலஞ்ச லப்பேர் பாணிறச் சங்கே யென்ப. [7]வாளே.

196 உண்ணலும் பொறிய ருந்த லூட்டல்பூட் டுதலே மும்பேர்;
தண்ணுமை பறைப்பொ துப்பேர் நிசாளஞ்சாற் றிடுமு டுக்கை;
கண்ணுளர் [1]நிருத்தர் தம்பேர் கண்ணுளர் தனக்குங் காட்டும்;
அண்ணலே பெருமை பெற்றோ னாசன்முல் லைத்தோன் றற்பேர் ()

197 பண்ணவ னருகன் தீத்தோன் பகர்ந்தபுத் தேளே மும்பேர்;
[2]தண்ணமோர் கட்ப றைப்பேர் தறித்திடு மழுவும் வைக்கும்;
திண்ணமே [3]மெய்ம்மை திட்பம்; திணிபுவி திண்ணி யன்பேர்;
நண்ணுத லணுகல் போகல் பொருந்துத னவிற்று மும்பேர். (௧௪)

198 காணியே யுரிமை யோரெண்; கண்ணுதல் சிவனுள் ளற்பேர்;
வாணியே யோர்நி ருத்தம் வாக்குநா மகட்கும் வைக்கும்;
[4]தோணியே வதிநா ளோடம்; தோடைமதி லூறுப்பே சேரும்;
[5]நாணிலச் சைப்பேர் தானே கயிறுபூ ணெனவும் நாட்டும். (௧௫)

199 தூணியோ ரளவை யாவம்; சுண்டையோர் புதர்ந றுவாம்;
[6]வேணிநீள் சடையி னுமம் விசும்பாறே மும்பேர் செப்பும்;
ஆணியே யெழுதுங் கண்டம் [7]ஆன்றகா லாணிக் கும்பேர்;
ஏணியே யுலகோ டெல்லை யிறவைமா னென்றுஞ் சொல்லும். (௧௬)

200 வாணிகன் றுலாரா சிப்பேர் வசியற்கும் வழுத்தற் பாலாம்;
வேணவா மிகுதி வேட்கை; [8]விண்ணொளி முகிலா காயம்;
பாணமே மேக வண்ணக் [9]குறிஞ்சியெய் கணைபூம் பட்டாம்;
சேணுய ரம்நீ ளப்பேர் சேய்மையோ டகல மைம்பேர். (௧௭)

201 சேணரே யூழி காலஞ் சேகா மெழுவாய் பூமி;
பாணரே சிலதர் பாட்டோர்; பாணித்தல் நெடும்பொழ் தேசொல்;
வாணரே கவிஞர் கூத்தர்; மாண்டல்மாட் சிமையே பொன்றல்;
யாணரே புதுமை தச்சர் அழகுடன் வளநல் மைப்பேர். (௧௮)

---

(பி-ம்.) [1]விணைஞர் கூத்தர். [2]தண்ணமோர் பறைக ணிச்சி; தணிதண்மை சயிலத் தும்பேர். [3]பொய்ம்மை மெய்ம்மை. [4]தோணியே கடைநாள் வங்கம். [5]நாணியே சிலைநாண் வெஃகல் நாணேபூண் கயிறி லச்சை. [6]வேணியே சடைவாறு; வெண்கலம் நாளே கஞ்சம். [7]மாற்றுரை யடியா ணிப்பேர். [8]விண்டொலி. [9]குறிஞ்சியே.

202 துணங்கற லென்னு நாமம் விழவிரு ளிரண்டுஞ் சொல்லும்;
கிணுங்கலோ ரோசை துன்றல்; கேண்மைகண் ணோட்டம் நட்பாம்;
குணுங்கர்தோற் கருவி யாளர் குயிலுவ ரிழிஞர் முப்பேர்;
[1]கணம்பா ணுடநோய் வட்டந் திரட்சிபேய் கால நுட்பம். (௧௧)

203 உணர்தலே [2]யொற்ற றத்தல் நினைத்தற்கு முரைக்கற் பாற்றே;
[3]குணவுகீட் டிசைகு ணக்காம்; கொண்கனே துறைவன் வேட்டோன்;
புணரியே கடலொ லித்தல் [4]புரப்புயர் கரைத னிப்பேர்;
அணவலே யெழுச்சி புல்லல்; [5]அணுக்கஞ்சந் தனமே யாழ்பாம். ()

204 கண்ணிதார் மூருளம் வெய்ய வுயிர்படு கயிறே முப்பேர்;
புண்ணியந் தருமஞ் சாணி; புணையேவேய் [6]விலங்கு தெப்பம்;
மண்ணீடு வேயர் கூட்டம் வயங்குவே திகையி ரண்டாம்;
தண்ணீர்மை குணங்தெ ருட்சி; [7]தணத்தலே பிரிதல் பையுள். ()

205 அணையென்ப வமளி சேதாம்; ஆண்டாரே யுடையோர் தேவர்;
பிணையென்ப வுழைவி லங்கின் பெண்ணுடன் பெட்பே முப்பேர்;
கணையம்பொன் யானைக் கம்ப மெழுவுடன் காவற் காடாம்;
துணைவன்றோ ழன்பின் மந்திரி தோயுறுங் கொழுந ஞற்பேர். ()

206 அணல்மிட றுடனே கீழ்வாய்ப் புறமென வறைதற் பாலாம்;
உணவுவெண் புழுக்கல் நாம மொளிர்மாரி யிரண்டுஞ் செப்பும்;
பிணாவலே [8]சுனகத் தின்பேர் பெண்களிற் பொதுவும் பேசும்;
தணியலே கள்ளி ஞமஞ் சாற்றுறுங் கமையு மாமே. (௨௫)

207 ஆண்டகை சிறப்பின் மிக்கோ னப்பவர்க் கப்பே ரென்ப;
ஈண்டென்ப விரைவிவ் வண்ண மிவ்விடமே புலிது டக்கி;
பாண்டுவெண் மைநோய் ஓர்கோ; பணித்தலே நல்கல் பேசல்;
[9]தூண்டலே நடத்தல் பார்த்தல்; சுண்ணமே சுதைந றுந்தூள்.

208 உண்டியே யுண்ணல் சோறும்; உண்டாட்டா டல்பெண் ணுடல்;
தெண்டிகை யுளமார்ப் பாகந [10]தெவர மெனவுஞ் செப்பும்;

---

(பி-ம்.) [1]கணமேநோய் பரிணு டுப்பேய் கால்நுட்பந் திரட்சி வட்டம். [2]யெற்று றத்தல். [3]குணவென்ப கிழக்குக் கோணல். [4]தனிமைபூந் திரைக ரைப்பேர். [5]அணுகலென் றேதன் முப்பேர். [6]நிகளம். [7]தணவுலே. [8]சுணக்கத் தின்பேர். [9]தூண்டுதல். [10]தெவரா.

பண்டிதர் [1]கவிபார்ப் பாயுள்; பண்டாரந் துறவோர் கூலம்;
மண்டிலங் குதிரை வட்டம் வளாவுசா ரிகையே மூப்பேர். (௨௫)

209 சண்டமே கொடுமை யின்பேர் விரைவினிற் குறிப்பே தாழ்வில்
மண்டுறு பெருமை மற்றைத் திரணமும் வழுத்தற் பாலாம்;
முண்டமே பிட்டுச் சென்னி மொழிநுதற் குறிதி ரட்சி;
பிண்டமே திரளை பிச்சை பிறழ்கரு வுடனே முப்பேர். (௨௬)

210 குணமென்ப சிலைநாண் புந்தி கும்பமுக் குணமே சீர்மை
யுணர்வின்பங் கயிறே பொன்றை விசேடித்த லொழுக்க [2]மேபேர்;
மணமென்ப வதுவை வாசம்; மணுங்கொரு கணிதந் தாழி;
[3]பணமென்ப தூரகம் பாம்பின் படமிசை பகர்முப் பேரே. (௨௭)

211 [4]தண்டென்ப குழாயே வீணை தடிபடை மிதுன ராசி
கொண்டெழுஞ் சிவிகை யேசெய் வாம்பெனக் கூறேழ் பேரே;
தொண்டொன்பா னெழும்போர் பூடே வுருவிடு சுருக்கே தொன்மை;
விண்டென்ப மாயோன் வெற்பே மேகமே மூங்கில் காற்றும். ()

212 அண்டசந் தவளை யோந்தி யானைமீ னுரகம் பல்லி
நண்டுடும் பாமை பக்கி நவில்காப் பன்னொன் றேபேர்;
குண்டலி யென்ப தேழுத் தாபலம் கூறோர் சத்தி;
மண்டலி பாம்பு பூனை மகிதலம் நாயெ னாற்பேர். (௨௯)

213 வண்ணமே யழகு சந்தம் வருணமொப் பனையே பண்பே
பண்ணமர் கவியே யோசை பகர்[5]செய்மை யெண்பேர் பன்னும்;
நுண்ணல்வாக் குள்ளோன் மந்திரி; நுண்ணென்ப மிகுதி நுட்பம்;
மண்ணனு முழவ [6]மண்ணொப் பனைகழு வுதற்கும் வைக்கும். ()

214 பாணிநீ ரொலிநா டோதல் பண்டந்தார் பாடல் கைபற்
[7]றேணுபல் லியம்நொ டித்தற் பொழுதுகா வீரா றேபேர்;
கோணிதைப் பையே பன்றி நுறிமதி லுறுப்புங் கூறும்;
கேணியே மடுக்கி டங்கு கிளருல குடனே மூப்பேர். (௩௧)

---

(பி—ம்.) [1]கவிஞர் பார்ப்பார் மருத்துவர் பேரும் பன்னும். [2]மேழ்பேர். [3]பணமேபாந் தட்டை பாந்தள் பணமெனு முப்பே ராமே. [4]தண்டுசெய் குழாய்வ ரம்பியாழ். [5]செம்மை (?) [6]மாண்பொப். [7]றேணிபல் லியம்நெ டித்தற் போழ்து.

215 [1]மணியென்ப விதைப ருக்கை வனப்புயர் கருமை நன்மை
தணிகவ மணியே கண்டை சாற்றுமா மணியே யெண்பேர் ;
அணிகமே சிவிகை நாம மான்றநா வாய்க்குஞ் செப்பும் ;
பிணிமுக மெகின மஞ்ஞை புட்பொது வெனுமுப் பேரே. (௯௨)

216 பணிமொழி தொழிலே யேவல் பாம்புதோற் கருவி பூணோ
டணுகிய பெருமை மிக்க வளிகொடை யொன்பான் பேரே ;
கணியொரு சாதி செண்ப கம்வேங்கை மருத வேலி ;
பிணிமெலி வுடனோய் கட்டல் ; பிணிகைமேற் போர்வை தச்சாம். ()

217 அணியழ கணிதல் பூணோ டலங்கார மணிவ குத்தல்
நணுகிய முன்னற் சென்று நடத்தலோ ரசையென் றேழ்பேர் ;
குணில்குறுந் தடிக [2]டிப்பாம் ; [3]குண்டென்ப குதிரை சட்டி;
துணிசவி துணிவு துண்டஞ் சோதிநா ளிந்நாற் பேரே. (௯௪)

218 தாணுவே நிலைபே ரூங்கல் சங்கரன் சிறுவை குற்றி
தூணுயர் சாலே யென்னச் சொற்றநா மங்க ளேழாம் ;
வேணுவே சிலைவாள் மூங்கில் வெய்யவுட் டுளைப்பொ ருட்பேர் ;
ஆணுவே யிரதம் நன்மை ; அணுவான்மா விரேணு நுட்பம். ()

219 ஆணையே மெய்ம்மை வென்றி சூளேவ லிலாஞ்ச னைப்பேர்
பூணுறு விதியே யொன்றைப் பொருந்துறச் செய்த லேழ்பேர் ;
[4]கோணையே யழிவிலாத விளமைக்கு மிசைக்குங் கூறும் ;
தூணமாற் பதமே தம்பஞ் சொற்றன பகையு மாமே. (௯௬)

220 கண்ணென்ப வகலம் பொற்புக் கருத்துக்கண் பெருமை மூங்கில்
எண்ணயப் புணர்வே முரம்வேற் றுமையரு ளிடப்பேர் பத்தாம்;
தண்ணடை மருதந் தூர்கான் றழைத்தநா டுடுக்கை பன்னம் ;
எண்ணெணி மைவி சார மெள்வலி சோதி டப்பேர். (௯௭)

221 பண்ணையே மருத வேலி பழனம்நீர்த் தாழ்வே பொய்தல்
விண்ணவர் குழாங்க ளேகாஞ் மிருகந்துஞ் சிடம்பூ டேழ்பேர்;

---

(பி—ம்.) [1]மணிவிதை பருக்கை காசு வனப்புமால் நன்மை கண்டை. [2]டிப்பம். [3]குண்டுருட் டுண்டை சட்டி குதிரையின் வடவை யாமே. [4]கோணை யே கொடுமை சிதை மழிவிலா விளமைக் கும்பேர்.

பெண்ணேயே யோர்ந திப்பேர் பெரும்பனை யதற்கும் பேசும்;
மண்ணேயே யிளமை வெம்பே யறியாமை வழுத்தன் முப்பேர். (௩அ)

222 அணங்குபெண் கொலைவ ருத்த மாசைநோ யழகே தெய்வங்
குணங்கிளர் விழாவே யச்சம் வெறியாடற் குறிபேர் பத்தாம்;
துணங்கையோர் நாளே கூத்தே விழவெனச் சொல்முப் பேரே;
நுணங்கலே நுண்மை தேறல்; நுணவையெண் ணேலை பிண்டி. (௩௯)

223 துணையேதோள் துரிதம் நட்புச் சொற்பிணை யளவு கூத்துப்
[1]பிணைதாருக் கடுத்தல் வெற்றி பாட்டெனும் பேர்பன் னொன்றும்;
இணையேநே ரிரண்டு மாத ரியற்கண்வேல பனிச்சைச யோதி;
[2]கணையேபோர் முரசம் [3]வாரி பூரநாள் திரட்சி காட்டும். (௪0)

224 பாண்டிலே றூர்தி கஞ்சம் பரியங்கம் வட்டந் தீபம்
காண்டநற் றகளி வாகை கழையிடு திரையொன் பான்பேர்;
தோண்டலே முகத்தல் தொட்டல்; துணிதலே வலித்தல் வெட்டல்;
ஆண்டேயவ் விடஞ்ச மைப்பேர் அறைந்தபைம் புல்நெற் கும்பேர். (௪௧)

225 [4]புண்டரீ கஞ்ச ரோசம் புலிதிசைக் கரியே வண்டே
யுண்டநோ யொன்றே டேபூ டொன்றெனு நாம மாறும்;
தண்டமே குடைக்கா லூர்தி தண்டித்தல் கதை பண்டார
மண்டலம் வரம்பே தானை வனகரி தடமொன் பான்பேர். (௪௨)

226 திணைநிலங் குலமொ ழுக்கம் [5]மருதத்தின் பறைய கஞ்சேர்
திணைபுறத் திணையு யர்ச்சித் திணையயஃ றிணையே யெண்பேர்;
பணைவயல் பரியின் பந்தி பருத்தல்வேய் பெருமை [6]போதி
[7]பிணைமரக் கோடே பெற்றும் பறைபுற மொன்பான் பேரே. (௪௩)

227 கண்டமே கவசம் வெல்லங் கழுந்திடு திரைவாள் துண்ட
மண்டலம் பூமி யானை துயிலிடம் வழுத்தோ ரெண் பேர் ;
முண்டகந் தாழை கள்ளு முளரிமத் தகமுண் மூலங்
கொண்டதிண் கடலே [8]சென்னி குறித்தபே ரேழென் றூமே. (௪௪)

---

(பி-ம்.) [1]பணை தருக். [2]கணையென்ப முரச ஞாட்புப் பூரநாள் கணைதி ரட்சி. [3]வாளி(?) [4]புண்டரி கங்கார் வண்ணன் புரந்தரன் கவரி புற்று, வண்டுதிக் கயஞ் சிங் காரம் வனசம்நோய் குடையோர் பூடு, திண்டிறற் கழுகு பாயுஞ் சித்திர காய மென்னப், பண்டையோ ருணர்ந்து ரைக்கும் அபிதானம் பன்மூன் றூமே. [5] மருதத்தின் பணைய கஞ்சூல். [6] யோதி. [7] பணைமரக் கோடை. [8]முள்ளி.

228 காண்டம்நூல் முடிவே தூசு [1]சுனைநீர்வெவ் காடே புந்தி
மாண்டகு படைக்க லம்பூண் கொள்கலம் வானோர் கூட்டம்
நீண்டவொண் கோலே தீர்த்தம் நிறைகமண் டலந்தி ரட்சி
பூண்டவார் திரையே யென்னப் புகன்றபேர் மூவைந் தாமே. (௪௫)

229 நண்ணரு ணகார மாய வெதுகையி னடாத்துஞ் செய்யு
ளெண்ணவை யையொன் பானு மிசைத்தன னீர்ங்க டற்சூர்
விண்ணடைந் திடவே ஞெட்ட வீரன்றாட் டுணையைப் போற்றும்
அண்ணலஞ் செந்தின் மேவு மருமருந் தையன் றானே. (௪௬)

[மிகை.] 1. தணியல்கள் சமையுஞ் சாற்றும். 2. பூணணி கலன்பூ ணற்பேர் போற்றுகிம் புரிக்கும் பேரே.

ணகரவெதுகை முற்றும்.

---

# தகரவெதுகை.

230 பூங்கமு குறழ்கி ரீவப் [2]புலோமிசை தடந்தோ டோயும்
[3]பாங்குயர் குலிசி தூங்கந் துடைத்தபன் னிருத டக்கைக்
காங்கயன் சிகியூர் செவ்வேள் கடலப்பொற் பாதம் போற்றி
யோங்கிய வெழிற்ற கார வெதுகையின் றொடையோ துற்றும். (க)

231 வித்தகம் பெருமை கல்வி; வித்தகர் விஞ்ஞ ராயர்;
பொத்தகங் கோசமென்ப சித்திரப் படாமும் போற்றும்;
மத்தகம் நெற்றி சென்னி; வத்திரம் வதனந் தூசாம்;
உத்தரம் வடக்கு றூலி லொன்றெதிர் மொழிமே லும்பேர். (உ)

232 உத்தரி யுரகம் யானை யுவர்ப்பெபா தி கடற்கே யாகும்;
பத்திரி குதிரை யம்பு பறவைபா சடைகா ளிப்பேர்;
கத்திரி வங்கம் பாந்தள்; காதம்யோ சனைப யப்பேர்;
சித்திர புங்கம் பாணந் [4]திகந்தவோ வியத்தூ சாமே. (௩)

(பி - ம்.) [1]கனை [2]புலோமசைக் கருள்கூர்ந் தென்றும். [3]தாங்கருஞ் சுபந்தா னீந்த சண்முகக் கடவுள் வெற்றிக். [4]திகழ்ந்தவோ.

233 அத்தியே கொலையெ லும்பே டார்கலி மரமொன் றியானை ;
சத்தியே கவிகை காற்றல் சத்துவ முமைவேல் சூலம் ;
பத்தியே முறையொ ழுக்கம் பகர்வழி பாட டைத்தல் ;
சுத்தியோர் கருவி சங்கஞ் சுடாசல் சுத்தம் நாற்பேர். (௪)

234 மத்திகை விளக்குத் தண்டே வாசியோட் டிரும்ப டைப்பேர் ;
கத்திகை தொடைவி கற்பந் துவசமே கமழ்வா சந்தி ;
பித்திகை கருமு கைக்கே பெயர்சுவர்த் தலமும் பேசும் ;
பத்திரை யிலையே யாவே பகர்மையத் திதியென் றேபேர். (௫)

235 அத்தனே முந்தோன் றாதை யைம்முகன் றானே முப்பேர் ;
சுத்தனே யருகன் றானுந் துளிநறாப் பழமைத் தண்ணல் ;
[1]புத்தன்சாக் கியனே மாலே புகன்றிடும் அருகன் முப்பேர் ;
முத்தனே விடையோன் புத்தன் முநிவலோர் அனக னாற்பேர். ()

236 நத்தமே யிருளு மூரும் நங்தொடுண் மையாக் கப்பேர் ;
[2]துத்தம்யா ழிசைபால் ருக்கி சுனகங்கண் மருந்தே பற்றும் ;
அத்தம்பொன் வழிபா திகை யாடிசொற் பொருள்கா டோர்நாள் ;
மத்தமு மத்தை மோக மதயானை மகிழ்ச்சி மத்தாம். (௭)

237 ஆதார முடலே மாரி ; அதிதியே புதியர் யோகர் ;
மாதாவம் பிகையே யன்னை ; மதுரையோர் புரிந றுவாம் ;
சேதாரந் தேமா வின்பேர் செய்யபொன் னுரைதேய் மானம் ;
பாதாளந் துவாரந் தென்றீ ; பதிகம்றான் [3]முகத்தி ரிப்பேர். (௮)

238 அதமுயர் கொலையே யத்தி; அதிகமே பொலிவு மிச்சம் ;
இதம்பனை யேடு பூமி யிதமூத டெனவிம் முப்பேர் ;
கதம்வுலே கஞ்சி றப்புக் கடுத்தலே பெருமை நீளம் ;
சிதடனந் தகன்மூ டன்பேர் ; திதிபக்கம் நிலையே றும்பேர். (௯)

239 [4]பத்திர மில்வ ணப்புப் படைக்ககன்மை சிறகே யானம் ;
குத்திரம் வஞ்ச மேபொய் வரைவிலிற் குறிப்பே குன்றும் ;

(பி-ம்.) [1]புத்தனே யுழுவன் சாக்கியன் புயனிறத் தவனும் போற்றும். [2]துத்தமே மருந்து பாலுச் சுனகம்யா ழிசைபால் ருக்கி. [3]முகங்கத் திரிப்பேர். [4]பத்திரந் தழைமாப் பத்தி பணையானஞ் சிறகே நன்மை.

சித்திர பானுச் செந்தீ திவாகர ஞ்ண்டொன் றேயாம்;
சத்திரங் [1]குடையி ரும்பே சாலைகை விடாவேல் வேள்வி. (௧0)

240 மதலையே பாவை கொன்றை மரக்கலந் தூண்கொ டுங்கை;
சிதலைநோய் துணிசெல் லென்ப; சீதம்நீர் குளிர்மே கப்பேர்;
பதலையோர் கட்ப றைப்பேர் பருப்பதந் தாழி யென்ப;
கதலிவா ழைப்பேர் தேற்று காற்றுடி துவசம் நாற்பேர். (௧௧)

241 பீதகம் பொன்மை சாந்தே பிறக்குபொன் னிருவே விப்பேர்;
சூதக மேயா சூசந் தோகைமார் தோயாப் பூப்பாம்;
போதக மிளமை நாவாய் புகல்பனை களிற்றுன் கன்றும்;
சாதகம் வானம் பாடிப் புட்பூதஞ் சனன மூப்பேர். (௧௨)

242 ஏதமே துன்பங் குற்ற மெளிமையென் றிசைக்கு மூப்பேர்;
சூதமா மரமே பாத ரசம்பிறப் புடன்சு ரும்பாம்;
[2]போதமே பஃறி ஞானம்; புதுமையே நவமி குத்தல்;
கீதமே தவளை வண்டே கிளத்துமெல் லிசைவேய் நாற்பேர். (௧௩)

243 அதர்வழி நுண்ம ணற்பேர்; [3]ஆதண்மெல் லெனல்சூழ் நோயாம்;
புதர்செடி யறிஞர் தம்பேர்; புத்தேளே புதுமை தெய்வம்;
சிதர்மழை தூறல் சிக்கஞ் சிந்துதல் நுணுக்க ணுப்பேர்;
மதர்களிப் புடனே வீரம்; மதாணிபூண் பொதுப்ப தக்கம். (௧௪)

244 [4]கதம்பமே கூட்டம் நீபங் கலவைச்சே றுடன்ச பைப்பேர்;
நிதம்பமே யல்கு லென்ப நெடுமலைப் பக்க மும்பேர்;
பதக்கம்வீப் பொதுவிட் டிற்பேர்; பதாயுதங் கூர்வாள் கோழி;
சிதம்விண்மீன் ஞானம் வெள்ளை செயமுறப் பட்ட தாமே. (௧௫)

245 [5]விதிசெயல் வான்மு றைப்பேர் விரிஞ்சனற் குணந்தொன் னூலாம்;
[6]சதிபுரோ கிணிகற் பாட்டி தவிராத வட்டம் போனம்;
பதியரன் கேள்வ னூராம்; [7]பதுக்கைகற் பாறை தூறும்;
விதியுளி விவாகம் யாகம் [8]வேட்டற்கு மிட்ட பேரே. (௧௬)

---

(பி-ம்.) [1]குடையி ரும்பீர் தல்சாலை கைவேல் வேள்வி. [2]போதமே யறிவு ஞானம் புதன்மரக் கலமு மாமே. [3]ஆதனே நோய்வ ருத்த மெல்லெலன லதுவு மாகும். [4]கதம்ப நீப மான்கூட்டம். [5]விதியுயல் குணநூல் வேதன் வினையியல் வான்மு றைப்பேர். [6]சதியுரோ கிணியே வட்டந் தவறில்கற் பாட்டி சோறும். [7]புதிவிளம் பிறைமூத் தோனும். [8]வெட்டுதற் கும்பேர் வைக்கும்.

246 வெதிர்செவி டுடன்கம் பித்தல் விளங்குபைங் கழையே முப்பேர் ;
பிதிர்கதை நொடியே தூவல் பேசரு நுணுக்க ணுப்பேர் ;
கதிரொளி யிரவி திங்கள் களிநெல்லா தியநா ற்பேர் ;
எதிர்தலே மலர்த றோன்றல் ; எதிர்தொடர்ப் பூவெ திர்த்தல். ()

247 மாதவந் தவமே கள்ளே வசந்தகா லமுமே முப்பேர் ;
சேதகஞ் செங்கேழ் சேறும் ; சேதுசெய் கரைசி வப்பாம் ;
பாதவம் விடபி வெற்பாம் ; பதகம்புட் பொதுவே பாவம் ;
நூதம்மெய்ப் பொருளே போசை ; [1]நதியாறு மாலை யாமே. (௧௮)

248 மாதர்பெண் ணிடைச்சொல் வேட்கை ; மதர்வீர மழகு லாவல் ;
சாதனம் படைப்பொ துப்பேர் [2]தடந்தோய்பீ டிகைதொண் டோலை ;
சூதரே வலவர் பாணர் சூதாட்டம் வல்லோர் கூத்தர் ;
ஈதலே கடைகொ டைப்பே [3]ரிறகரி தற்கும் பேரே. (௧௯)

249 மாதேபெண் [4]குற்றத் தின்பேர் ; மதன்சிலை வேள்வ னப்பாம் ;
சூதேகூத் தாடரங்கஞ் சொற்றவல் நளினந் தீச்சொல் ;
போதேபூப் பொழுதிரண்டாம் ; பொதிகிழி [5]பொதிதல் மன்றம் ;
கேதேதிண் பதாகை மஞ்ஞை கிளத்தொரு [6]கோளுள் நாற்பேர். ()

250 [7]குதையேவிற் குதைமொட் டம்பு கொம்புறும் பசியே முப்பேர்;
[8]சுதையேயீன் றிடாவா வெண்மை சுண்ணஞ்சாந் தமுதே யைம்பேர் ;
புதையேவெங் கணையின் கட்டுப் புதுமையே மறைவே தேகம் ;
கதையேதண் டப்பேர் வார்த்தை காரண மிம்முப் பேரே. (௨௧)

251 ஓதையே யொலிம திற்பே ருரைத்தமோ தகமுஞ் செப்பும் ;
சீதையே பொன்னுங் காணி படைச்சால்சீ ராமன் றேவி ;
மேதைதோல் புதனி றைச்சி மிக்கபே ரறிவு கள்ளாம் ;
பேதையோர் பருவ மூடம் பெண்தரித் திரனே நாற்பேர். (௨௨)

252 வீதியே செவ்வ ணேகல் வெருவுதல் தெருவே முப்பேர் ;
சோதியே விடையோன் காந்தி சுடரோன்மா லருக ஞோர்நாள் ;

---

(பி — ம்.) [1]நதியென்ப மலையா றின்பேர். [2]தடந்தேர்ப்பீ டிகையே தொண்டாம். [3]ரிறகாரி தற்கும் பேசும். [4]குறத்தி னப்பேர். [5]யுடன்பொ துறப்பேர். [6]தொன்று. [7]குதையேமொட் டம்பு வில்லின் கோப்புடன் பசியே முப்பேர். [8]சுதையேசாந் தமுத மெச்சஞ் சுண்ணம்பால் கறவாத் தேறு.

[1]பூதியே தூர்க்கந் தப்பேர் பொலிவுறு நாகும் போற்றும்;
ஏதிவாள் படைப்பொ துப்பேர்; எதிர்ப்பெசொல் லடுத்த லும்பேர். ()

253 மாதிரம் நிலமா காயம் மலைதிசை யுவாவே யைம்பேர்;
சோதினி துடைப்பஞ் [2]செத்தை; துதியேத்தல் அகில்நா திப்பேர்;
போதியே யாசோ டாசான்; பொதிர்ப்புப்பீ டெண டுக்கம்;
[3]வேதியே யயன்கேட் டைப்பேர்; வேதிய ராயுள் விப்பிரர். (உச)

254 உதியனே [4]மாறன் சேரன் ஒலிக்குமீ ர்ங்கொல் லிப்பேர்;
மதியசைச் சொல்தெ ருட்சி மாதமுன் னிலைநிங் கட்பேர்;
கதியுடர் கதிநடன் காய கதியைந்து கதிக்குங் காட்டும்;
வதிதளர் சேறெ பாதை; மதுகர மொலிவண் டேகள். (உரு)

255 அத்தென்ப தசைச்சொல் செம்மை யரைநாணே டிசைப்பே நாற்பேர்;
[5]தித்தேகூத் தின்வி கற்பந் தித்துதல் பகைத்தல் முப்பேர்;
தொத்தேபூங் கொத்துத் தொண்டாம்; சுதனேவெண் டிங்க டோன்றல்;
தத்தைமூத் தாள்கி ளிப்பேர்; சதஞ்சிற கிலைநூ றுமே. (உசு)

256 அத்தவா ளங்கா டேயுல் லாசமாம் போர்வைக் கும்பேர்;
உத்தரி யம்மே காச மொண்பரிப் பேருஞ் செப்பும்;
சித்தனே வயிர வன்பேர் சினேந்திரன் எண்சித் துள்ளோன்;
[6]குத்தலே பறித்த லின்பேர் குத்தற்கு முரித்த தாமே. (உஎ)

257 கூத்தனே யுயிர்ந டன்பேர்; கோதோதல் குற்றங் கோதல்;
போத்தேயாண் விலங்கு பாயல் பொங்கர்செம் போத்தே நாற்பேர்;
பாத்தென்ப கஞ்சி சோறு பகுத்திடல் விளிதல் மூப்பேர்;
வாழ்த்தலே நினைத்தல் செவ்வி யுருபகு னழிவென் றுமே. (உஅ)

258 சாத்தனே புத்த னையன் சினவரன் முப்பேர் சாற்றும்;
சேத்தைய முழுப்ப சைச்சொற் றிகழ்கருத் துவமை சோணம்;
நீத்தநீ திகழ்வெள் ளிப்பேர்; [7]நிதியேபண் டாரஞ் சேனை;
நீத்தமே விழாவு நீரும்; தீத்தனே யருக னுசான். (உகூ)

---

(பி - ம்.) [1]பூதியே புவிதூர்க் கந்தம். [2]செற்றை. [3]வேதியே விதிகாப போர்நான். [4]சேரன் சோழன். [5]தித்தென்ப நடைவி கற்பம். [6]குத்தலே கொடுத்தல் குத்தல் பரித்தலுங் குறித்தற் கும்பேர். [7]நிதியேபண் டாரஞ் சேனை நிதியிரண் டெண்ணு துப்பேர்;

259 மாத்திரை நொடிக்கும் காலே மருந்தொரு குருவிற் பாதி;
காத்திரி [1]யிருப்பு முட்பேர் உரகங்கி ரிக்குங் காட்டும்;
கோத்திரம் வரகு பூமி குலமுடன் மலையே யென்ப;
சூத்திர முபாயம் [2]நன்னூல்; [3]சுதமிறங் குதல்பிள் ளைப்பேர். (௩௦)

260 ஒத்தலே நடுவோ டொப்பாம்; [4]உதியூ னங் குருத்தி விஞ்சை;
தைத்தலொப் பனையே துன்னல்; ததைதலே மிடைதல் விள்ளல்;
பைத்தலே [5]யுருத்தல் பச்சை; [6]பாத்திசெய் பகுத்த வில்லம்;
கைத்தலே கசப்புற் பத்தி; கைதவம் [7]பொய்துன் பப்பேர்; (௩௧)

261 முத்தமே யுவகை யோட்டம் [8]முத்தந்தண் மருத வேலி;
சத்தமேழ் குணமொ லித்தல்; சத்தியஞ் சபத மெய்யாம்;
பித்தமே தெளிவி லாமை பிணங்குமோர் நாடிக் கும்பேர்;
சுத்தமே தருப்பை யுள்ளம் [9]சுசியெனு முப்பே ராமே. (௩௨)

262 முதுவரே யமைச்சர் மூத்தோர்; [10]முத்திபே றலர்மின் றேமல்;
வதுவையே கடிநாற் றங்கா [11]வல்புள்ளா ணின்பேர் வைக்கும்;
பொதுளலே தழைத்த லின்பேர் செறிதலும் போற்று மப்பேர்;
மதுகமே யிலுப்பை யெட்டி மதுரமாந் தராவு மாமே. (௩௩)

263 [12]மதவிடம் புலவி காமர் வலியுடன் மிகுதி வையம்;
கதவமே புதவங் காத்தல் காவலென் றேதல் மூப்பேர்;
[13]பதனமே யரணம் யானை; பதவிதாள் [14]வதியே மோக்கம்;
மிதவையே தெப்பஞ் சோறும்; மெத்தைபூ வணைசட் டைப்பேர்.

264 விதப்பேகம் பிதமி குத்தல் வேணகை யுறுப்பா சைப்பேர்;
கதுப்பெயாண் மயிரே மஞ்சள் கவுளுடன் முப்பேர் காட்டும்;
செதுக்கேமந் [15]திப்பேர் பூக்குஞ் சேறுடன் செதுக்க ஞற்பேர்;
[16]இதக்கேகற் புளிப்பி னும மிசைக்குமப் புக்கட் டாமே. (௩௫)

---

(பி - ம்.) 1 விருப்பு. 2 தொன்னூல். 3 சூத்திரன் மயமேனர் சாதி. 4 உதியென்ப வுலைத்து ருத்தி யோதுறும் விஞ்சை தோன்றல். 5 வருத்தல் பைம்மை. 6 பாத்தியே சிறுச்செய் யில்லம் பகுத்திட லெனவே முப்பேர். 7 பொய்துக் கப்பேர். 8 முதகந்தண். 9 சுசியெனு. 10 முத்திகை வலமுத் தாடல் மொய்ம்மலர்த் திருத்தே மற்பேர். 11 வல்பூணின் பேரே. 12 மதர்விடம். 13 பதணமே. 14 வழியே. 15 திரிப்பேர். 16 இதக்கப்புக் கட்டாம் பீரம்.

265 விதவைகை மணியி னுமர் திருவிலிக் கேவி ளம்பும்;
நுதல்புரு ரஞ்சீர் நெற்றி; [1]நுதம்புசோ றெள்ளி ரண்டாம்;
[2]மதமிகு செருக்கே யானை வழுத்து றுஞ் சமய மூப்பேர்;
உதகமே தெண்ணீர் பூமி; உதும்பர மத்தி செம்பாம். (௫௬)

266 ஊதிய மிலாபங் கல்வி; ஒதுக்கமே மறைவு மார்க்கம்;
பாதியே பகிர்தல் தூறு பருதிதேர் வலவன் முப்பேர்;
சேதியொற் றுரைசே தித்தல்; சித்தாந்தங் கடுகே [3]சின்னூல்;
போதியே யிரதத் தின்பேர் போதஞ்செய் வதற்கு மாமே. (௫௭)

267 [4]ஆதவர் வெய்யோர் பார்ப்பார்; [5]ஆதல்தேர் தல்நுண் மைப்பேர்
[6]மூதென்ப முதுமை யீதல்; முத்தேவெண் குருகு முத்தம்;
வேதண்டம் வெள்ளி வெற்பாம் விளங்குறுங் கிரிக்கும் வைக்கும்;
வாதுவர் யானைப் பாகர் வாசிமா வடிப்போர்க் கும்பேர். (௫௮)

268 விதனமே [7]கவலை சாரம்; வித்தென்ப விதைவி தைத்தல்;
சதனமே புள்ளின் றூவி தழைக்குறு மிலைக்குஞ் சாற்றும்;
கதனமே கலக்கங் காடு குதிரையின் கதிமுப் பேரே;
[8]மதனமே மிகுதி வேட்கை மத்தனங் காம நோயாம். (௫௯)

269 அதிகாரஞ் சாத்தி ரப்பே ரதன்முக [9]மாசு செய்யல்;
சதகோடிப் பேரே வச்சிரஞ் சாற்றுறு நூற்றுக் கோடி;
சிதலேநற் சிதாய்க னித்தோல்; சிதவலே துவச மோர்புள்;
மதுவேயோர் நிருதன் றீங்கள் வசந்தகா லப்பே ராமே. (௬௰)

270 இதைகாரர மணிக லப்பை யெழிற்புதுப் புனம்நா வாய்ப்பாய்;
[10]புதரேபுல் புருவம் பூடாம்; பொதிமூடை பொதித லாகும்;
முதலேமு லிகைதன் கையின் முதலிட முதல்மூம் மூர்த்தி;
இதலேநற் கவுதா ரிப்பே ரிசைசிவ லிப்புட் குப்பேர். (௬௧)

---

(பி-ம்.) [1]நுசம்புகள் ளின்பேர் சோறும். [2]மதமேசொற் சமயம் யானை மதமகிழ்ச் சிப்பே ராமே. [3]தொன்னூல். [4]ஆதவர் வெய்யோர் பார்ப்பார் அறையு மோர் சாதிக் கும்பேர். [5]ஆதலே நுணுக்கந் தேர்தல் ஆன்றநூ லுடன்கூத் தே பேர். [6]முதலே. [7]கனைவி சாரம். [8]மதனம்வெங் காமநோயு மதிமெது வுக்கு மாமே. [9]மாசச். [10]புதலேபுல் புருவம் ஆடாம்.

271 காதென்ப [1]கொலையே காதாம்; கைதுவா மையி டாமை
யோதும் வேல் விகற்ப மேகை யொழியாமை மூப்பேர் கூறும்;
பீதமே மஞ்சள் பொன்மை கத்தூரி பொன்னாற் பேரே;
வேதமே பாழி யற்பேர் விளங்காதி நூற்கு மாமே. (சஉ)

272 [2]தூத்திநெய் விழவே தேமல் துணங்கையா டல்நா ளோரடே
பத்திசெய் ஞானம் பாந்தட் படப்பொறி யிருமூன் றேபேர்;
தித்தியே குராங்கு தோற்பை [3]தித்தல்தேஞ் சுணங்குஞ் செப்பும்;
மித்திர னிரவி நட்பாம்; வேதிகை பலகை திண்ணை. (சங)

273 [4]உத்திசெந் திருவு றுப்புச் சுணங்குரா கப்ப டத்தின்
றொத்துறும் பொறியே தொங்கல் துவசமோ ருரையே யேழ்பேர்;
குத்திமண் [5]ணடக்க மென்ப; குதிரையே மனைவா சிப்பேர்;
பத்தியங் கடுக்காய் பூவாக் காய்நோயுற் றோனூண் பன்னும். (சச)

274 பூதமா விறந்த காலம் புவிமுத லைந்தே சீவன்
பாதமார் பரணி நாள்வெம் பாரிடம் புனித மேழ்பேர்;
ஆதனு ருயிரோ பேதை; ஆதாஞ் சிலம்பே வேட்கை;
ஓதனம் பெருமை வெண்சோ றுடனுண்ட லெனவே முப்பேர். (சரு)

275 [6]ஆதியே முதல்நே ரோட லருகன்மா லிரவி யீசன்
ஓதிம முயர்த்தோ னேமண் டிலமாயோ டற்பே ரெட்டாம்;
பாதிரி பாட லப்பேர் பணைத்தெழு மூங்கிற் கும்பேர்;
ஓதிபெண் மயிர்வெற் போந்தி யுதிபூனை யெகினம் ஞானம். (சசு)

276 சாதியே பிரம்பு கள்ளுத் தாருத் தேக் கமுத வல்லி
யோதுசண் பகந்தி ணைப்பே ருரைக்குநா மங்க ளேழாம்;
பூதியம் புவியு டற்பேர்; பூதாம் பன்றி வெற்பாம்;
ஓதிம மசல மன்னம் ஒளிர்மயிர்க் கவரி முப்பேர். (சஎ)

---

(பி - ம்.) [1]குலையே. [2]துத்திநெய் விழவே ஞானம் சுணங்குபைப் பொறி யே யோர்நாள் - வைத்துறு புதர்து ணங்கை யாடலென் றெண்பேர் வைக்கும். [3]தித்தித்தல் சுணங்கே தித்தல். [4]உத்திசெந் திருவுறுப்புத் திதலைப் பொறி யோ ரோதல்-கொத்துறுந் தொங்க லாடைக் கொடியிவை யிருமூன் றேபேர். [5]ணடக்க. [6]ஆதியே யான யன்மா லருகனே முதனே ரோடல்—வீதிமண் டிலமா யோடல் ஓந்திவெய் யோனென் பான்பேர்.

277 கோதைமுன் கைத்தோற் கட்டே குழல்தார்காற் றொழுங்கு சோன்
பேதைநெற் சுமையே கோதா விரிநதி? யெண்பேர் பேசும்;
காதைசொற் கதையி னுமம்; கைதொடல் தீண்டல் துய்த்தல்;
பாதைசெல் தாரி நாவாய்; பைதலே யிளை துன் பப்பேர். (௪௮)

278 காத்திர மவய வப்பேர் களிற்றின்முற் காலே சீற்றம்
பூத்தநற் றிரையே கூற்றே பூதிய மிருமூன் றேபேர்;
பாத்திரங் கடிஞை மாஞர்; பானுகாத் திடல்வ ருத்தம்;
நேத்திரங் கண்பட் டாடை; நீதிமந் திரிநெ றிப்பேர். (௪௯)

279 அத்திரி யுலைத்து ருத்தி யசுவமொட் டகம்வா லேபம்
[1]குத்திரந் தருவோர் யோக முனிவனேழ் பேருங் கூறும்;
[2]சித்திர மழகோர் பாடல் சிறந்தபொய் மணியே ரண்டம்
அத்திரி யோவி யத்தோ டதிசய மெண்பே ராமே. (௫0)

280 [3]பதமடி வரிசை சோறு பகர்வழி செவ்வி போழ்தோ
டிதமறு கொடுசொல் கால மியல்வீரங் குழைவு சேமம்
நிதமுறு கடிகை யாடை நிகழ்த்துறு மூவைந் தேபேர்;
உததிதெண் டிரைந திப்பேர்; உதையமே புலரி தோன்றல். (௫௧)

281 தாதுமண் முதலா மைந்துந் தமனிய மாதி யேழுந்
தீதறு மிரத மாதி யேழுஞ்செங் காவிக் கல்லும்
போதுறு துணருந் தொண்டும் புகன்றிடு கலைகா ரவும்
ஏதமில் பொடியுஞ் சீவ னில்லன கொடியு மாமே. (௫௨)

282 மணிதிகழ் வலித்த கார வெழுத்துறையின் வழுத்துஞ் செய்யுள்
[4]எணிலோரைம் பானென் றென்ன விசைத்தனன் கமலத் தோன்றன்
றிணிதிகழ் முடிபு டைத்த சேவலங் கொடியோற் போற்றும்
அணிதிகழ் செந்நிலை மேவு மருமருந் தையன் முனே. (௫௩)

(பி-ம்.) [1]குத்திரி கிரிவின் தாருக் கொடுவெண்ணை முனிபஃ தேபேர். [2]சித்திர மதிச யம்பொய் சிறப்புவிம் மிதமே ரண்டம் – பத்திர மணியோர் பாடல் பழுவமொன் பால்பேர் வைக்கும். [3]பதமேசோ றியல்சே மந்தாள் பதவிபோழ் தாடை வீரம் – இதமார்சொல் குழைவு பாதை யிலங்கல்கொக் கின்பங் காலம் – நிதமாருங் கடிகை செவ்வி நிகழ்நல மீரொன் பான்பேர். [4]எணியிரு மூன்றோ டைம்பா னென்னவே யிசையச் செப்தான் [இப்பாடத்திற் கேற்பச் செய்யுட்டொகையுங் காணப்படுகிறது].

[மிகை.] 1. அத்திரம் பகழி வெற்பே யசுவமா யுங்கரப்பேர். 2. கேதார மோர்ப திப்பேர் ஒளத்துமஞ் ஞைக்கும் வைக்கும் — தூதாரம் புரவி நாமம் தூக் கணங் குருகு மாமே. 3. பித்தென்ப கள்ளே பித்தம்; பேதியே யிரதம் பேதம். 4. சித்திர னேவன் தச்சன். 5. ஓதலே விசாரித் திட்டல் ஓதுதற் கும்பே ராமே. 6. நாதனே மழவெள் ளேற்று நம்பன்மூத் தோனு மாமே. 7. ஒதுங்கல்போ குதல்பாங் தற்பேர். 8. பொதுவரங் தணத்தோ ராயர்; புதன் புந்தி யறிவோ னாகும் — விதுவொளிர் நெடுமால் திங்கள். 9. உத்தர குருவே பாண்டு வழியருந் ததியே யோதும். 10 பத்தொரு கணிதம் பூச்சு; பார்த்தலே தொழல்பார்த் தற்பேர். 11. சீத்தைதான் அசடே கொத்து. 12. மாதங்க மூவாவே வார்தல் மறிகட லிளமை நாற்பேர்; — சாதம்பா ளிதமே மெய்ம்மை; சதுரமோர் கணிதஞ் சந்தி — ஓதந்திண் கடலே வெள் ளம்; யுத்தம்பித் தேறல் வெம்போர். 13. வாதியோர் கவிம தப்பேர் வாதம் வான் நார்க்கங் காற்றும்.

தகரவேதுகை முற்றும்.

---

# நகரவெதுகை.

283 காமுறு மொளிர் வெண் டிங்கட் கற்றையஞ் சடிலத் [1]தண்ணற்
[2]கோமுறு பொருளை யோது மூலகெலா முணர்ந்த மூர்த்தி
யேமுறு மெழிற்க லாபத் திருஞ்சிகிக் கடவுட் போற்றித்
தோமறு முயர்ந கார வெதுகையின் றொடையைச் சொல்வாம். ()

284 [3]இந்தன மிசையே காட்ட மெரியிடுங் கலன்பு கைப்பேர்;
சந்தன மிரதஞ் சாந்தம்; சாந்தசந் தனஞ்சுண் ணப்பேர்;
பந்தனை புதல்வி கட்டல்; [4]பந்திதேர்க் கால்நி ரைப்பேர்;
மந்தனந் தயிரின் றாழி மதயானை முகப டாப்பேர். (உ.)

285 விந்தமோர் வெற்பே மேலோர்; விந்தையாச் சரியந் துர்க்கை;
சந்தமோர் நிறம் வனப்புச் சாற்றிய கவிதை சாந்தம்;
குந்தமே நெடிய கைவேல் குதிரைநோய் குருந்தம் நாற்பேர்;
பந்தமே கிரட்சி கட்டிப் பாவங்கை விளக்கே நட்பாம். (௩.)

---

(பி — ம்.) [1]தண்ணல், [2]கோமுறும் பொருளு ரைத்த வும்பர்கோ னுலகம் போற்றும், [3]இந்தமே யிசையே, [4]பந்திகோக்.

286 நந்தியே சிவன்செக் கான்பேர் நவிற்றுமோர் பறைபே யேறும்;
புந்தியே புதன்ம திப்பேர்; [1]போந்தைமால் யானை பெண்ணை;
சந்தியே யந்தி மூங்கில் சதுக்கமோ ரிசைகன் னற்பேர்;
குந்திபாண் டவர்தம் மன்னை குடித்தநீங் கள்ளு மாமே. (ச)

287 [2]மந்திரி குபேர னெண்ணிர்; மந்திவண் டொடுகு ரங்காம்;
சந்திர மயிலின் றோகை தயங்குபொன் வட்ட முப்பேர்;
[3]முந்திரி யோரி லக்கம் முதிர்சுவைக் கனித்தா ரொன்றும்;
தந்திரி சேனை காப்போன் சாற்றும்யாழ் [4]யாழின் றந்தி. (ரு)

288 சிந்துர மோர்புள் யானை; [5]சிந்திசிந் தித்தல் சிந்தல்;
கந்துகம் குதிரை பந்தாம்; காந்தார மிசைகான் றேயம்;
பந்துகந் துகமும் மட்டுப் படர்நீர்தூஉந் துருத்தி யும்பேர்;
துந்துமி யோராண் டின்பேர் துவைக்குறும் பறையு மாமே. (சு)

289 இந்தென்ப மதியங் காரி யியங்குறுங் காடி முப்பேர்;
செந்தென்ப நரக [6]மோரீ சீவனெ டணுவே நாற்பேர்;
தந்தென்ப சாத்தி ரம்நூல்; தந்திரம் பணுவ றண்டம்;
மைந்தென்ப வலிம யக்கம்; மைந்தனே மதலை பூமான். (எ)

290 காந்தனே யிறைவன் வேட்டோன்; காந்தியே யெழிலி மைத்தல்;
சாந்தமே [7]கமையும் சாந்துஞ் சாற்றுகோ மயமுங் கூறும்;
கூந்தலே மாத ரோதி கொழுமயிற் [8]பீலிக் கும்பேர்;
வேந்துவெண் மதியே வெய்யோன் [9]வியாழமிந் திரனே மன்னன். ()

291 ஏந்தலே பெருமை மேடோ டேந்துதல் வேந்தன் வெற்பாம்;
சாந்தைபூ தலம்கங் கைப்பேர்; சந்தகம் சதம கிழ்ச்சி;
காந்தமோர் புராணம் வன்கற் கடைமருந் தோர்பு தற்பேர்;
[10]தீந்தொழில் வேள்வி பாவம்; செந்தழல் எரிகேட் டைநாள். (கூ)

---

(பி – ம்.) [1]பொந்தையே யிளமை யானை புற்பதி யதுவும் போற்றும். [2]மந்திரி புகர்பொன் னெண்ணர் வருதிதிக் கிறையு மாமே. [3]முந்திரை. [4]இசைக் குங் கோலாம். [5]சிவப்புத்திந் திருணிக் கும்பேர். [6]மோரி. [7]கமையே சாந்தே தண்மைகோ மயமே நாற்பேர். [8]பீலி பூகம். [9]விளங்குமிந், [10]சேந்துவெங் கனலி ற்பேர்.

292 அந்திலாங் கசையி டப்பேர்; அந்தண ரறவோர் பார்ப்பார்;
வந்திகை வந்திப் பட்ட மலடிபூண் பொதுச்சு ணங்காம்;
கந்திரு வம்பண் வாசி கடவுளர் சாதி முப்பேர்;
எந்திர மிரத மாலை யெயிலுறுப் பெழுத்தே நாற்பேர். (௧௦)

293 அந்தா மிடைவி [1]சும்போ டளவுடன் மேக நாற்பேர்;
கந்தா முழைக ழுந்தே கரும்புய லழகே யென்றும்;
[2]நந்தா முல்லை மாக்கள் நவிற்றுறும் புதல்வர்க் கும்பேர்;
கொந்தள மாத ரோதி குழற்கொத்துக் [3]குருளே முப்பேர். (௧௧)

294 அந்தரி துர்க்கை நாம மகிலமீன் றிடுமு மைப்பேர்;
கந்தனே யருகன் செவ்வேள்; காந்தாரி நூற்றோர் தாய்பண்;
சுந்தரி யிந்தி ராணி சுண்டனெண் றிருபேர் கூறும்;
மந்தனே கதிரோன் மைந்தன் மதிகூர்மை யிலனு மாமே. (௧௨)

295 எந்தையே யப்பன் [4]சுவாதி ஈசனென் றோதற் கேயாம்;
சிந்துவா ரம்வெண் ணொச்சி தெண்டிரைக் கடல்வில் முப்பேர்;
தந்தமே நகைவெண் கோடு தந்தமென் றோதற் கும்பேர்;
நந்தல்கே டெனே யாக்கம்; நந்தைமுற் றிதிகொற் றனும். (௧௩)

296 சந்தானந் தேவ தாரு சந்ததி யெனவுஞ் சாற்றும்;
மந்தாரஞ் செம்ப ரத்தம் வானவர் தருவி ரண்டாம்;
சிந்தூரந் திலகஞ் செம்மை [5]செங்குடை புளிம ரப்பேர்;
சந்தாரம் வழிமு டக்காம்; சாந்தாற்றி [6]விசிறி பீலி. (௧௪)

297 கந்தமே கிழங்கு நாற்றம் கழுத்தடி பகுத்தல் செம்பொன்
வந்தவிந் [7]தியமன் பென்றே வகுத்தபே ரேழும் வைக்கும்;
கொந்தமே சவளம் வேள்வி குறித்திடும் படியே முப்பேர்;
[8]அந்தமீ றழகே யென்றும்; அந்தகன் குருடன் கூற்றும். (௧௫)

298 சிந்துவா மனமே முச்சீர் தெண்கடல் நதியோர் தேசம்
உந்துநீர் வெட்சி யென்றே யோதுறு நாம மேழாம்;
கந்துபண் டியுளி ரும்புங் கம்பமும் யாக்கை மூட்டும்
வந்துறு பற்றுக் கோடும் வகுத்தபே ரிந்நான் காமே. (௧௬)

---

(பி-ம்.) [1]சும்பே யளவொடு முடிவே மேகம். [2]நந்தனர் முல்லை. [3]நகைசம் வேதி. [4]சுவாமி; ஈங்தென்ப கொடுத்த லீச்சாம். [5]செங்கொடை. [6]வீரண். [7]சிறிய மன்ப னுரைத்தபே. [8]அந்தமீ றழகி னும மணிக்கிடுங் கத்தா ரிப்பேர்.

299 [1]உந்திதே ருருள்யாழ்க் கண்ணென் றுயர்ச்சிகொப் பூழ்ப றத்தல்
நந்திலாப் பசுவின் கூட்டம் நடுப்புனற் சுழிய ளக்கர்
புந்திசெய் யாறே யென்னப் புகலுறு மொன்பான் பேராம்;
மந்திரம் விசாரங் கோயில் வாசியின் சுழாம்வீ டேகள். (கஎ)

300 [2]தெளிவினி னுபர்ந கார வெதுகையிற் சிறக்குஞ் செய்யுள்
எளிதிலா வெண்ணி ரண்டென் றின்புற வுரைப்பச் செய்தான்
பளிதமார் [3]தடந்தோட் செவ்வேள் பங்கயப் பாதம் போற்றும்
அளிதிகழ் பொழில்சூழ் செந்தி லருமருந் தையன் றானே. (கஅ)

[மிகை.] 1. அந்தியே யசைச்சொல் சந்தி. 2. வந்தனை வரவு போற்றல்; மாந்திமா மரம ருந்தால், 3. மொந்தைமொள் கலசப றைப்பேர்.

நகரவெதுகை முற்றும்.

## பகரவெதுகை.

301 [4]கண்கைகால் முகம்வாய் செங்கேழ்க் கமலநேர் மலரின் மாது
கொண்கன்வார் காரச லத்தைக் குறித்தடு பகுவாய்ச் செங்கண்
வண்கராச் செகுத்த வாழி மான்மரு கோனைப் போற்றிப்
பண்பினு னுயர்ப கார வெதுகையின் றொடைப ணிப்பாம். (க)

302 விபுலமே பெருமை பூமி விரிவெனு மூப்பேர் செப்பும்;
தபுதலே கேடுஞ் சாவும்; சபலையே சலிவு மின்னல்;
[5]கபிலையோர் நிறம்ப சுப்பேர்; கைப்பெகைத் தல்வெ றுத்தல்;
சுபமழ குடனே வெண்மை சோபன மிம்மூப் பேரே. (உ)

---

(பி - ம்.) [1]உந்திதே ருருளே யாழி னுறுப்பொடு நிவப்பே கொப்பூழ்-நந்தலில் துணைப ரத்த னடுப்புனற் சுழியான் கூட்டம்-நிந்தையி லளக்க ராறே நிகழ்த்துபேர் பன்னொன் றேயாம். [2]தெளிவினே ருரைந. [3]புயனுஞ். [4]கண்களீ ராறும் வெய்ய கமலநேர் முகங்க ளாறும்—தண்கிளர் கடம்பின் றிண்டோட் சயிலமு மயிலும் வேலும்—விண்கிளர்ந் தோர்கள் காண விளங்கிய வள்ளற் போற்றிப்—பண்கிளர்ந் திடும்ப கார வெதுகையின் றொடைப ணிப்பாம். [5]கபிலமோர்.

303 அபரமே கவசத் தின்பே ரியானைப்பின் கால்பிற் பக்கம்;
தபனன்றீ யாத வன்பேர்; சபதிசீக் கிரமே வெம்போர்;
இபமென்ப மாக்கோட் டின்பே ரியானையென் றிசைக்கு மப்பேர்;
அபரங்கங் கடைக்க ணித்த லணிநகர் கவச மாமே. (௩)

304 விபூதியே கொடுமை குற்றம் விடக்குவெண் ணீறே செல்வம்;
கபோதமே புறாப்பொ தூப்பேர் கரும்புற வுக்குங் காட்டும்;
குபேரனே யளகை வேந்தன் [1]குளிரலர் மதியி ரண்டாம்;
அபாரமே யளவின் மைப்பே ரறைபரம் பொருளு மாமே. (௪)

305 நீபமே கடைய யற்சொ ஞளும்நீர்க் கடம்பு மாகும்;
சாபமே யங்க தச்சொற் றனுவரை யாடே [2]முப்பேர்;
கோபமே சீற்ற மீதல் குறிக்குமிந் திரகோ பப்பேர்;
யூபமே வேள்வித் தம்பம் உறுபடை [3]வகுப்பே [4]மட்டை. (௫)

306 தாபர முனிவர் வாசந் தருவுடல் மலையே சார்வாம்;
ஞாபக மரும்பொருட்பேர் நவிற்றுநல் லறிவு மேயாம்;
சோபமே கள்ளால் சீயம் [5]சோம்புமென் றோதன் முப்பேர்;
தீபர்வா ணிகரே நீராம்; தீபம்நற் சுடர்பல் தீவாம். (௬)

307 காப்பென்ப கதவே நீறே காவல்தூ சுடனே வேயாம்;
யாப்பென்ப நகைபோர் செய்யு ளணியின் பழுவே கட்டாம்;
சீப்பென்ப [6]கதவின் றாழுஞ் செப்பிய கங்க மும்பேர்;
பூப்பென்ப மகளிர் தோயாப் பூப்பொடு பூத்த லாமே. (௭)

308 பாப்புவெம் பணியே பார்ப்பார்; [7]பப்பேரு பகம்வி சாலம்;
நாப்பண்யாழ் கண்ணு றுப்பே நடுவுட னருள்தேர்த் தட்டாம்;
தூப்புவா யங்க ணப்பேர் மதகினுட் டுளைக்குஞ் சொல்லும்;
[8]சாப்பைபுற் பாய்ப ணித்தோல்; தைப்பைசட் டைபொ திப்பேர். ()

309 உப்புமெல் லியலா ராட லுவர்க்கட லாக மின்பம்;
கப்பிளங் கொம்பு யர்ச்சி கருதிய மிகுதி முப்பேர்;
சுப்பிரந் தூய்மை வெண்மை; துப்பைவெற் றிலையே [9]பேராம்;
செப்புரை காண்ட கப்பேர் சிவப்புச்செம் புடனற் பேரே. (௯)

---

(பி - ம்.) [1]குளிர் விளர். [2]குட்டி. [3]புறப்பே. [4]யட்டை. [5]சோம்பலுறை யெனவும் பாற்றே. [6]தாழ்ப்பாள் கங்க மாம்பையின் குலேசீப் பும்பேர். [7]பைய ராப் படமே பச்சை. [8]சாப்பேபுற். [9]பேராம்.

310 ஒப்புர வதுக டைப்பா டுண்மையொப் புரவே மூப்பேர் ;
செப்பமே நடுநி லைப்பேர் தெருவுடன் வழியே நெஞ்சாம் ;
துப்புர [1]வுணவே வேண்டற் பாடேசொற் பொறி நுகர்ச்சி ;
கப்பணா மிரும்பிற் செய்யும் நெருஞ்சிமுட் கைவே லாமே. (௧௦)

311 வைப்பென்ப திடம்ப திப்பேர் வைத்தலூ ணுண்டல் நாற்பேர் ;
கொப்பென்ப கூந்தல் கொம்பாம் ; குப்பையே யாகு கூட்டம் ;
வெப்பென்ப மால்கால் வெம்மை ; விபுதரே நிபுணர் விண்ணோர் ;
ஒப்பென்ப திசைபொ ருத்த லுவமைகட் டழகே நாற்பேர். (௧௧)

312 ஆபீனஞ் சிறப்பேர் வீதி யான்றிகழ் செருந்தற் கும்பேர் ;
சோபானந் தாழ்வா ரப்பேர் சொற்றகற் படையும் வைக்கும் ;
காபாலி விடையூர் நாத னவனுட லிருபேர் காட்டும் ;
பூபாலன் வேந்தன் செவ்வாய் ; பூபதி யரசன் சேடன். (௧௨)

313 அப்பல்சாந் தணிதல் மொத்தல் ; அபயன்செம் பியனே சூரன் ;
கொப்பா [2]மொருதே யம்மெல் லடைவின்மை முழங்கைக் கும்பேர் ;
தப்பலே குற்றந் தப்பல் ; தபதிதச் சன்னி டப்பேர் ;
மைப்புய லதுவின் மேகம் ; மாபெலி யவுணன் யாளி. (௧௩)

314 [3]உபமென்ப திரண்டி னும முபமான மெனவும் பாற்றே ;
விபரீதம் வேறு பாடு மிகுதியென் றிவையி ரண்டாம் ;
உபதான முதவும் பிச்சை யுறக்கங்கொள் தலையா ணிப்பேர் ;
[4]அபாமிதம் பெருமை யின்பே ரளவின்மை தானு மாமே. (௧௪)

315 குப்பமே சிற்றூர் பொன்னும் ; கோபுரஞ் சிகரி தானம் ;
ஐப்பசி யோர்திங் கட்பே ரசுபதி நாட்கும் வைக்கும் ;
கைப்புலி மதுமா வியானை [5]கதித்தவா ளுழவர்க் கும்பேர் ;
சுப்பிர தீபந் திக்கோ ரியானைநற் சுடர்வி ளக்காம். (௧௫)

316 கைபுனை யென்ப தேபூத் தொடுத்தல்கான் மலரே செப்பம்
மெய்புணர்ந் தூற்ற [6]கண்க ளணிதலா டவர்மின் னுரை
மைபெற வலங்க ரித்த லபிதான மிவையா றேபேர் ;
எய்புகற் பேரே பன்றி யேவெய்த றனைக்கு மாமே. (௧௬)

---

(பி-ம்.) [1]வுணர்வே. [2]மொருதெய் வப்பேர் லாவுசிக் கிரமுங் கூறும். [3]உபமென்ப திரண்டே யொப்பாம் ; உபகார முதவி காட்சி. [4]அபாரதம் பிழைதண்டித்தல் அபாயிதம் பெருமை யிச்சம். [5]கனத்து. [6]கண்ணே விளங்குமா டவர்மின் னுரை.

317 துப்புநெய் பகைய ரக்குத் துகிரூற்ற மனுப வஞ்சோ
ற்றுப்பினற் பொலிவே யுண்ட லொளிர்படைப் பொதுவி லங்கூண்
தப்பில்சொற் பிணையே முற்றஞ் சாற்றிய தூய்மை வன்னஞ்
செப்புடன் றெளிந் துணக்கா [1]ரணமொரு பானேழ் செப்பும். (கஎ)

318 [2]தெள்ளிதா யுயர்ப கார வெதுகையி னுரைக்குஞ் செய்யுள்
உள்ளமா ரீரெட் டென்ன வுலகினிற் புகலச் செய்தான்
கள்ளறு [3]மலர்ப்பூங் கொந்தார் கடம்பணி குகனைப் போற்றும்
அள்ளறுச் செந்தின் மேவு மருமருந் தையன் றானே. (கஅ)

பகரவேதுகை முற்றும்.

---

# மகரவெதுகை.

319 [4]மாண்கிள ரொளிசி றந்த மரகதக் கலாப மஞ்ஞைச்
சேண்கிளர் பரிது ரக்குந் தெய்வகுஞ் சரிம ணாளன்
பூண்கிளர் தாட்டு ணைப்போ துளத்திடை நினைந்து போற்றிக்
காண்கிளர் கவின்ம கார வெதுகையின் கவியைச் சொல்வாம். (க)

320 சமங்களிப் புடனே யொப்புச் சங்கிரா மமுமப் பேரே;
[5]கமந்திகழ் நிறைவே மூசல்; காமாரி சிவனோர் சாலி;
[6]தமந்திமி ரம்மி ராகுத் தம்பமென் றுரைப்பேர் சாற்றும்;
சுமங்கலை வறட்சுண் டிப்பேர் சொல்வண்ண மகளு மாமே. (உ)

321 அமலையே மிருத்தி சோறோ டம்பிகை முப்பேர் வைக்கும்;
விமலையே துர்க்கை கங்கை வெற்பிறை மகட்கு மென்ப;
கமலையே திருவி தாதா; கம்பையோர் நதிப ணைத்தல்;
நிமலைபார்ப் பதியே சேலூர் நிருமலன் றனக்கு மாமே. (௩)

---

(பி-ம்.) [1]ரணமிரு பான்பேர். [2]தெள்ளியோர் புகல்ப. [3]விரிம லர்ப்பூங் கடம்பணி குகன்றாள் போற்றும். [4]மாண்கிள ரொளிசி றந்த மணிதிகழ் சரவ ணத்திற்–கோண்கிளர் பிறைமு டித்தோன் காணிய குமார வேளைச்–சேண்கிளர் நீபத் திண்டோட் சேயினை வணங்கிப் போற்றிட–பாண்கிளர்ந் திடுப காரவெது கையின் றொடைப ணிப்பாம். [5]கமமென்ப நிறைவே தெண்ணீர். [6]தமங்கரு வரியி ராகுத்.

322 [1]சாமமே யாமம் வேதஞ் சாமள வனமு பாயம்;
[2]வாமமே குறளி டப்பால் வயங்கலோர் சமய மூராம்;
காமமே குடியூர் வேட்கை கதிரிறை யொழுங்கே கொன்றை;
நாமமே பெருமை நற்பேர்; நம்பியர்ச் சகனே யேந்தல். (௪)

323 அம்மையே வருபி றப்பேர் டம்பிகை யழகே தாயாம்;
சும்மையே படுக்கு நெற்போர் நாடொலி சுமையுஞ் சொல்லும்;
செம்மையே சிவப்புச் செப்பம் செவ்வைநற் பெருமை நாற்பேர்;
கொம்மையே ரிளமை வட்டம் குயந்திரட் சிகை கொட்டல். (௫)

324 அம்பென்ப துளிரோ தண்ணீ ராசுக மிம்மூப் பேரே;
[3]சம்பென்ப நரியே நாவல் சங்கா னருகன் வேதா;
வம்பென்ப புதுமை கச்சு [4]மணம்நிலை [5]யின்மை மேற்கோள்;
தும்பென்ப [6]சிம்பே தோடாம்; தும்பிவண் டுடன்மால் யானை. ()

325 உம்பரே தேவ ராகு முயர்நில முடன்மே லும்பேர்;
கும்பமே குடமி ராசி [7]கும்பிமத் தகமூங் கூறும்;
தம்பமே கவசந் தூணும்; தாம்பதா மணிநா ணாகும்;
விம்பமே யுருவங் காந்தி விரிந்தெழுங் கோவை முப்பேர். (௭)

326 அம்பலே சிலா றிந்தே யறைமொழி பழிமொ ழிப்பேர்;
உம்பலே யூற்றம் யானை உற்றநற் குலனே முப்பேர்;
[8]பம்பலே நிறைவே யாற்றல் படர்ச்சிபொன் னணவ லோசை;
நம்பலே வேட்கை நம்பல்; நாமென்ப வெருவல் தானும். (அ)

327 அம்பலஞ் சித்திர கூட மான்றபே ரவையு மாகும்;
கம்பல மேற்கட் டிப்பேர் சிம்புளின் படாமுங் காட்டும்;
செம்புலம் பாலை வேலி செருக்களம் வகுக்க லாகும்;
சம்பளம் தகர்கி டாய்ப்பேர் சேவகத் திலாபஞ் சாற்றும். (கூ)

328 வாமனங் குறளே யோர்நூல் மாதிரக் களிறே முப்பேர்;
காமனே மதன்சு ரும்பு [9]பிப்பிலி முப்பேர் காட்டும்;

(பி–ம்.) [1]சாமமே யுபாயம் வேதம் சாமளங் கருமை யாமம். [2]வாமமே குறள்வ னப்பு மதவிடப் பால்க லான்வில். [3]சம்பென்ப நரியே நாவல் சங்கா னருகன் வேதா-விம்பமா ரிரவி சம்பு விளங்கெலு மிச்ச மெண்பேர். [4]மணமலி. [5]யின்ப. [6]சிலம்பே. [7]கும்பிமத் தகஞ்ச வப்பேர். [8]பம்பலே வலிபொன் மல்கல் படரொலி பொலிவெ ழுச்சி. [9]பிப்பலி.

சோமனே ரேந்தல் கட்டுந் தூசுவெண் டிங்கள் சொல்லும் ;
[1]வீமனே கலுழ னுமம் விளங்குமோ ரேந்த லாமே. (௪0)

329 அம்பிநா வாயே தெப்ப மான்றொடர் பூட்டே முப்பேர் ;
கும்பியே நரகம் யானை ; கோம்பிசக் கரப்புள் ளோந்தி ;
உம்பியே யிளவல் விண்ணோர் ; ஓம்பலே புரத்தல் காத்தல் ;
கம்பியே கலன்செய் கம்பி காதணிப் பொதுவு மாமே. (௪௧)

330 அம்பரங் கடலே விண்ணே யாண்றது சுடனே முப்பேர் ;
ஒம்பர்கொம் புடன்வெங் காற்றும் ; கோமானே மூத்தோன் சாத்தன் ;
சம்பரங் குலிசம் வெய்யோன் சரபமோ டெலுமிச் சைப்பேர் ;
பம்பரஞ் செம்பொன் மேரு கறங்குமோர் கலனும் பன்னும். (௪௨)

331 கம்புளே சம்பங் கோழி கதிர்சங்கம் வானம் பாடி ;
கிம்புரி தந்தப் பூண்பேர் கிளர்முடி யங்க மாகும் ;
சிம்புளெண் காற்புள் சிம்புள் ; செம்புகா வற்பொன் செம்பாம் ;
கம்பள மயிர்ப்ப டாஞ்செய் ; கமைசாந்த முரிமை யாமே. (௪௩)

332 [2]அம்புதி கடல்கால் பாட்டி னத்தமென் றுற்ற நாமம் ;
கம்பலை யொலிந டுக்கங் கருதச்சம் படைதுன் பப்பேர் ;
வம்பலர் புதிய ரோடே அயலவர்க் கும்வ ழூத்தும் ;
பம்பைமுல் லைப்ப றைப்பேர் நதியருந் தவப்பெண் பன்னும். (௪௪)

333 அம்மழ கசைச்சொல் நீராம் ; ஆம்பிரம் புளிப்பே சூதம் ;
கம்மயன் றலைகால் வெண்மை ககனம்நீர் நதிகா ராடாம் ;
பொம்மலை பொலிவுஞ் சோறும் பொருந்துபோ ருடனே முப்பேர் ;
இம்மையே [3]யுரிமை யுப்புக் [4]கிளர்த்தும்பண் பெனுமுப் பேரே. (௪ரு)

334 இம்மியே நுண்மை செம்பொன் இயன்மதி யுடனே ரெண்ணும் ;
தொம்மொலி குழூவெ னும்பேர் ; [5]தோமரி யோரெண் கூத்தாம் ;
வெம்மையே வெருவு தற்பேர் விருப்பமுட் டணமுஞ் சொல்லும் ;
கம்மியர் கைவி னைப்பேர் கண்ணுளர் தமக்கு மாமே. (௪௬)

335 தாமரை புலிச ரோரம் ; சமன்யம னடுவோ டொப்பாம் ;
தேம்விரை [6]யகில்தேன் றித்தல் ; செம்மைசீக் கடியோர் பூடாம் ;

(பி-ம்.) [1]வீமன்றுக் கியனோர் வேந்தன். [2]அம்பொதி. [3]யுரியை [4]கிளத்திடு மாட்சி முப்பேர். [5]தோமரி கூத்தெண் வார்ச்சியம். [6]யகிறேன்.

காமர மத்த [1]நாளால் கடிபொழி லிசைய டுப்பாம்;
பூமர மறிகு றிச்சொல் [2]ஒரும்பூ மாமு மாமே. (கஎ)

336 நேமிதே ருருள்பார் வட்டம் நெடுங்கட லமையுள் ளாழி;
சாமிபொன் [3]னிறையி னுமம்; சம்மட்டி [4]குறடாக் கூடம்;
பாமினி விறலி காவாம்; பைம்பொன்னே யிமயஞ் செம்பொன்;
ஏமினி யிடுதி சைப்பேர் [5]கிடையாடை யிருபே ராமே. (கஅ)

337 நிமிர்தலே யுயர்ச்சி யோட்டம் நீட்டித்தல் சோறே நாற்பேர்;
திமிர்தமே யொலிதி மிர்த்தல்; சேமங்கா வற்பேர் சேமம்;
ஞெமிர்தலே பரப்பி றுத்தல் வளைத்தலு மெனநி கழ்த்தும்;
குமிழொரு மரமே சேற்றிற் குமிழியுங் [6]குவித்த லும்பேர். (கக)

338 சிமிலியே குடுமி [7]பூனை திருவிசி யுறிதோ ணிப்பேர்;
அமுதமே யினிமை வெண்பா லமாருண் மழையே நாற்பேர்;
குமுதமே குசைய டுப்புக் குளிராம்பல் லொலிதிக் கியானை;
அமையமைத் திடுதல் மூங்கில்; அம்பகம் [8]விழியெ மூச்சி. (உ0)

339 அமரரே விபுதர் தெவ்வர்; அமையஞ்சம் மதித்தல் போழ்தாம்;
குமரனே யிளையோன் செவ்வேள் [9]கூறிடுந் தோன்றல் மூப்பேர்;
தமரமே யரக்கோ சைப்பேர்; சமழ்ப்புநாண் வருத்தந் தாழ்தல்;
[10]அமர்தலே பொலிவு மாழி; [11]அமரரேபோ ரமர்த லாமே. (உக)

340 சாம்புவே பறைபொன் னின்பேர்; சமைகுணம் வருடமென்றும்;
தூம்புவேய் துளைம ரக்காற் [12]றெருகுநிதி வழித ரூம்பாம்;
தேம்பலே யிளைத்தல் சோம்போ டலையலுஞ் செப்பற் பாற்றும்;
கூம்புதேர்ச் சிகரங் கூம்பல்; கொம்பேபீள் சினையே மூட்டை. ()

341 சேம்புசா கினியே சேம்பாம்; திமிரமே [13]நிசிய றைப்பேர்;
ஆம்பிகா ளானே சத்தம்; அமோகமே மிகுதி வேட்கை;
தேம்பியே வருத்தம் யானை; சிமையந்திண் மலைவெற் புச்சி;
காம்பிரம் மூருக்கு வீரம்; கம்பமே நடுக்கம் தம்பம். (உஉ)

(பி-ம்.) [1]நாளால் கடுபொழில். [2]வோரும்பு. [3]குாத்தி செவ்வேள் சமி யனிங் நாற்பேர் செப்பும். [4]பரிக்கோல் கூடம். [5]கிடையாடை. [6]குவித. [7]பூளை சின்வீடே. [8]விழியே மூச்சி. [9]குழவியின் பேரு மாமே. [10]அமர்தலே மிகுதி நாமம் பெருமையும் பொலிவு மாகும். [11]அமரரேபோர் மதிலு ரூப்பாம். [13]றெருகுநீதி. [13]நிசிபறைப்பேர்.

342 குமரமே கொம்பி லாத மிருகமுங் குழவுங் கூறும்;
இமைமயூ ரம்நி மைப்பே ரெண்குட னற்பம் நாற்பேர்;
அமரநோய் பொருட்சொ லோர்நூல்; அம்பிகை யுமைகா ளிப்பேர்;
கமரெனு நாம வெள்ளில் காய்நில வெடிப்பு மாமே. (உச)

343 ஆமல கந்தா னெல்லி யவிரொளிப் படிக மும்பேர்;
ஈமமே மயானங் காட்டம்; ஏமாப்பே யிறுமாப் பேமால்;
ஊமையே கிரி மூகை; உம்மைமுன் பின்பி றத்தல்;
மாமையே நிறம்வ னப்பு மாழ்கிரக் கத்தி றப்பாம். (உரு)

344 கூம்பலே குமிழ்கூம் பற்பேர்; கோமள மிளமை பாலாம்;
சோம்புசோ பம்ம றுங்கல்; [1]தமிதுளி யுடன்று ணித்தல்;
பாம்புபாந் தள்ள ணைப்பேர்; [2]பம்புடுக் குத்தி ரப்பேர்;
நாம்பல்சொற் பேரி ளைத்தல் நலிற் றுடன் மெலிநோ யாமே. (உசு)

345 விமானமே யூர்தி வெய்ய விண்ணவ ருலகெ னும்பேர்;
தமாலமே பசும்பி டிப்பேர் தழைத்த[3]பச் சிலையி ரண்டாம்;
இமாசலம் பனிநீர் மேரு; இமமெதண் பனிபொன் னின்பேர்;
சமாதியே விளிவு யோகம்; சம்பையோர் தாளம் மின்னல். (உஎ)

346 குமரியே கௌரி கன்னி கொற்றவை யாற்றி னென்றோ
டமர்வரி கற்று ழைப்பேர் அழிவின்மை [4]யுடனே ழேபேர்;
சுமடுசும் மாடு மூடம்; தோமரம் படையோர் வாச்சியம்;
கமலநீர் செம்ப டாமுங் கடிகமழ் முளரிக் கும்பேர். (உஅ)

347 ஆம்பல்நீங் கள்ளே கவ்வை யல்லியங் கயம்வேய் திங்கள்
தூம்புசே ருதுங் கொப்பே சொற்றவெண் பண்ணென் பான்பேர்;
காம்புவேய் மலர்த்தாள் பட்டுக் கடிமலர்க் கொம்பே நாற்பேர்;
சாம்பலே பழம்பூக் கூம்பல்; தமிழ்[5]தமி ழினிமை நீர்மை. ( )

---

(பி-ம்.) [1]தமிதுணிவுடன். [2]பம்பென்ப நெருக்கம் வின்மீன் பயி[illegible] றாமும் பன்னும். [3]பா சிலைபுஞ் சாற்றும். [4]காளை யேழ்பேர். [5]அமிழ் தினிமை.

348 செம்மலா தவன்ப ழம்பூச் சிவன்வாரி சிறந்தோன் மைந்தன்
[1]பொம்மல்வா டாப்பூ வீரர் பொழிற்றலை மைப்பேர் பத்தாம்;
[2]கைம்மமே கடனீர் நன்னீர் [3]காணிய கைம்மை முப்பேர்;
விம்மலேங் குதலொ லித்தல் விளங்கிய நிறைவு மாமே. (௩0)

349 ஏமமே சேமங் காவல் ஏமாப்பின் பம்பொன் மையல்
நாமமார் கலையோ டாற்றல் நள்ளிர வொன்பான் பேரே;
ஓமெனு நாமந் தானே ஓங்காரஞ் சம்ம தித்தல்;
ஆமென்ன விடைச்சொல் இன்றோ டன்றெனல் [4]ஈர நீர்மை. (௩௧)

350 அம்பட லந்தா ளேடம் வெளிவெள்ளி மாக்கா லம்பி
செம்பொன்[5]செய் யிரத மீபம் செப்பும்பே ரேழென் றுரும்;
அம்பணந் துலாக்கோல் வாயு வம்பிதுப் பாமை வாழை;
அம்புயப் பேரே புட்டில் [6]அலர்ந்ததா மரைக்கும் பேரே. (௩௨)

351 தாமமே யெழில்பூ மாலை தயங்கலூர் கடுக்கை [7]யானை
வாமநீண் முடியங் கப்பேர் வரையமர்க் களமொ ழுங்கோ
டேமமார் மணியின் கோவை யிடங்கயி [8]றீரே ழேபேர்;
யாமமே யிரவுந் தெற்கும் சாமமு மியம்ப லாமே. (௩௩)

352 முரண்டொகு மெழின்ம கார வெதுகையிற் செய்யுள் முப்பான்
[9]இரண்டென வுலகிற் போற்றி யிசைத்தனன் திட்ட மாகிக்
காண்டகங் கவிழ்த்த வேழத் திளவலாங் கடவுட் போற்றும்
அரண்டொருஞ் செந்தின் மேவு மருமருந் தையன் றனே. (௩௪)

[மிகை.] 1ஓமமோர் மருந்தே வேள்வி; உமட்டியுப் பளர்ந்த ஊச்சி. 2ஞமலிநாய் மயில்க ளென்ப. 3இமனமே யிசையின் பப்பேர். 4சாம்புதல் கூம்பல் சாய்தல்; சமரஞ்சா மரம்வெம் போராம்.

மகரவெதுகை முற்றும்.

---

(பி-ம்.) [1]பம்மொலி வனம்வா டாப்பூத் தலைமைவீ ரர்ப்பேர் பத்தாம். [2]கைம்மையே. [3]கலன்கழி மடந்தை யாமே. [4]வீர நீராம். [5]சே யிரவி யீயஞ். [6]அலர்ந்ததா மரைப்பொ திப்பேர். [7]யானி. [8]றிபமூ வைம்பேர் [9]இரண்டுடன் மூன்றி சைத்தா னியற்றமிழ் முனிவன் செங்கைக்—காண்டக மரிட்ட மாகிக் கவிழ்களிற் றிளவற்போற்றும்.

# யகரவெதுகை.

353 [1]மணிதிகழ் தரங்க வாரி சுவறிட வயங்கு செம்பொற்
றிணிதிகழ் மேருக் குன்றங் குலுங்கிடச் சிறக டிக்கொள்
தணிதிகழ் மயூர மூருஞ் சண்முகன் றுளேப் போற்றி
யணிதிகழ் யகார மாய வெதுகைப்பா வறைய லுற்றும். (க)

354 ஆய்தமே நீளம் புள்ளி யக்கா மிவையி ரண்டாம்;
காய்தலே புலர்வு வேட்டல் கடுங்கோப மிம்மூப் பேரே;
வெய்தலே சூடல் மூடல் வீடுகோ யிற்பொன் [2]றீட்டல்;
பாய்தலே பரப்புப் பாய்தல்; பயினேபொய் யிசின் [3]பயிற்சி. (உ)

355 [4]இயமமே வார்த்தை யோசை யீயேவாச் சியமே நாற்பேர்
பயன்மிகு மறிவி லாபம்; பயிர்ப்புக்குச் சிதம்ப யிற்றல்;
அயர்தலே [5]அயர்ச்சி செய்தல்; [6]ஆய்வேறுட் பம்வ ருத்தம்;
வயவனோர் புள்ளே வீரன் வயங்கு கா தலற்கும் பேரே. (ங)

356 [7]வயாவென்ப கருப்பங் காதல் மாழ்கிய பிணியே மூப்பேர்;
பெயரென்ப பெருமை நாம மபிதானப் பேரும் போற்றும்;
வியரென்ப தறிஞர் வேர்வை; வீக்கம் பூப்புட் சாவாம்;
அயர்வுசோம் புடன்வ ருத்தந் தெளிவின்மை [8]யிடமென் றுமே. ()

357 வியலென்ப வசலங் கானம் மேம்பாடே பெருமை நாற்பேர்;
மயலென்ப மயக்கஞ் [9]செத்தை மருட்டுபேய் நெருப்பென் றுகும்;
செயலென்ப வினையே காவல் சேறுட னொழுக்க மென்றும்;
முயலென்ப சசமு யற்சி; மொய்ம்புதோள் வலியெ ழிற்பேர். (ரு)

---

(பி-ம்.) [1]மணிதிகழ் தரங்க வாரி சுவறிட வடிவே ரொட்ட—திணிதிகழ் சிகரத் திண்டோட் சேவலங் கொடியோற் போற்றிப்—பணிதிகழ் றணங்கி யோர் சொற் பண்புயர் மெல்லி னத்தி—னணிதிகழ் யகார மாய வெதுகையின் கவி யைச் சொல்வாம். [2]வேட்டல். [3]கூ டற்பேர். [4]இயமமீ வார்த்தை யோசை யியவர் வாச் சாவா வன்பாம். [5]குயிற்ற லாய்வாம். [6]ஆய்வென்ப வருத்த நூட்ப மாய்தலென் றேதற் கும்பேர். [7]வயரென்ப. [8]பகல நாற்பேர். [9]செற்றை.

358 அயிலெனப நாஞ்சில் கோரை [1]யழகுடன் கூர்மை வேலாம்;
கயிலெனப பிடர்த்த லைப்பேர் கலன்கடைப் புணர்ப்பு மாகும்;
குயிலென்ப தூளமு கிற்பேர் கோகில மிம்முப் பேரே;
எயிலென்ப [2]மதிள்பு ரப்பேர்; இயைபெபா வுறுப்பி சைப்பாம். ()

359 அயிரேசர்க் கரைநுண் மைப்பே ரன்றநுண் மணற்கும் வைக்கும்;
செயிரேகுற் றஞ்சி னத்நல்; தேபம்நா டைல்[3]தி ருட்டாம்;
வயிரேகூர் மைப்பே ரூதூங் கொம்பென வழுத்தற் பாற்றே;
துயிலேதூங் கற்பேர் மாளல்; தோயுறல் புணர்தல் மூழ்கல். (ள)

360 மயிலேயே மீனி ராசி மலர்ந்திடு மிருவாட் சிப்பேர்;
கயினியே யத்த நாளுங் கைம்மையு மிருபேர் காட்டும்;
குயிறலே [4]குதித்தல் செய்தல் கூவல்நீர் குடைதல் நாற்பேர்;
வயிலிடப் பேர்வ ரம்பே வயிறுடன் பிணையென் றுமே. (அ)

361 [5]வையம்யா மூரோணி பண்டி வயங்கலா னேறே பூமி;
சையகஞ் சயனம் வெற்பு; சையோசக் கரமி கழ்ச்சி;
நையரி வாளே தூக்கம் நைதலே மிகுதி நாற்பேர்;
தெய்வமூழ் கடவு ளின்பேர்; தீயோர்வே தியரே தீம்பர். (கூ)

362 தையேபோர் மதிநூல் நீவல் தாளச்சிர் தைத்த லைம்பேர்;
மெய்யேயொற் றுடல்மெய் கூட்டம்; [6]வியஞ்சாதல் வில்ம மூப்பேர்;
பையேமெத் [7]தென்றல் பைம்மை பணிப்பட மழகே [8]நாற்பேர்;
[9]ஐயேயே கிருமல் சுவாமி யசைச்சொல்மந் தாரம் பொள்ளாம். ()

363 உய்யலே பிழைத்த லூஞ்சல்; உயிரென்ப காற்றே சீவன்;
ஐயேபெண் ஞர்க்கை காளி யம்பிகை [10]யுடனு சாள்பேர்;
[11]தொய்யலே பெழுதல் சேறு துயரெழில் மகிழ்வோர் பூடாம்;
பையுள்நோய் சிறுமை யின்பேர்; பையங்கோ ரைப்பேர் கூடை. ()

---

(பி-ம்,) [1]அழகிரும் பேமேவல் கூர்மை. [2]திரிபு ரப்பே ரிலங்குறு மதிலு மாமே. [3]விண் சோரம். [4]செறிதல் செய்தல் குதித்தல்கூ வல்நீர் தோய்தல். [5]வையமா னேறு ரோஹணி மாநிலம் விளக்க மூர்த்தி—வெய்யயாழ் மாகம் பண்டி விளங்குதே ரெண்பேர் வைக்கும். [6]வியமழு வேசி லைப்பேர் மேவலுங் கொள ஓம் வைக்கும். [7]மெத் தெனல்பை. [8]மையம்பேர். [9]ஐயேயோ. [10]யாச்சி யாசான். [11]தொய்யலோர் பூடே சேறே துயருழ வெழின்மி கிழ்ச்சி—தையலார் முலைமீற் றீட்டல் குழைவெனச் சாற்றென் பேரே.

364 வாயிலேம் புலன்றி றங்கா ரணந்துதே மனைக்க டைப்பேர் ;
ஆயுதம் படையே [1]கூத்துப் பயிலிட மிரண்டு மாகும் ;
[2]தீயரு நரகே தீங்காம் தித்திப்புந் தழலுஞ் செப்பும் ;
[3]மாய்தலே மறைவே சாவாம் ; வாய்க்காலே மகநாள் நீர்க்கால். (கஉ)

365 பாயசம் படரோர் பூடு மட்டபாற் சோறும் பண்ணும் ;
[4]வாயிடம் வாய்மை யூறுங் குழல்வரு வாய்வாய் வாக்காம் ;
சாயலென் பதுவ னப்புச் சமம்நுண்மை மேம்பா டென்றும் ;
மாய்மே யுயர்தல் நீளம் வஞ்சம்பொய் [5]தொகையைம் பேரே. (கங)

366 நாயென்ப சுனகஞ் சாரி ; [6]நயம்நன்மை மகிழ்ச்சி மேதை ;
தாயமே யுரிமை யாடுங் கவற்றுருள் தமரோ மூப்பேர் ;
தோயமே புவனம் நீராம் ; சுயம்பேதா னுதல் முந்தை ;
ஞாயமே வழக்கம் நன்மை ; நாயகம் தலைமை மைபம். (கச)

367 வேயேயாழ் கவனம் மூங்கில் வேய்தலொற் றுத்து ளைப்பேர் ;
சாயேகோ ரைசா யற்பேர் ; தையல்பெண் ணழகே காந்தி ;
ஆயேதாய் வருத்த மாய்தல் ; ஆயுள்வா ணுள்நோய் தீர்ப்போன் ;
சேயேவே ளிளமை தூரஞ் சிவப்புச்செவ் வாய்ம கட்பேர். (கரு)

368 நெய்தலே வேலை சாரும் நிலமோர்பூச் சாப்ப றைப்பேர் ;
பொய்தலே மாதர்கூட்ட மவ்ராடல் மீள்தல் [7]போற்றும் ;
பைதலே [8]சிறுமை பைம்மை ; பயோதரம் [9]புயல்பா ரப்பேர் ;
கைதையே பழனந் தாழை ; [10]கயவுகீழ் பெருமை கள்ளம். (கசா)

369 [11]ஐய்யனே மூத்தோன் சாத்தன் அப்பனிம் மூப்பேர் செப்பும் ;
வெய்யவன் கொடியோன் பானு விரும்பினன் பேரும் வைக்கும் ;
கையனே கொடுக்கும் பாரி [12]கருநிறக்கீழ் மகற்குங் காட்டும் ;
எய்கணை யெய்தல் பன்றி ; [13]இயாமந்தெற் கிரவே சாமம். (கஎ)

(பி-ம்.) [1]கூற்றுப். [2]தீயழல் தேந்தீங் கூழ்த்தல். [3]மாய்வென்ப. [4]வாயிடை. [5]தோகை யைம்பேர். [6]நயமறி வின்ப நியாய நன்றியுங் களிப்பு மாமே. [7]பொய்ம்மை. [8]சிறுமை யின்பேர் புற்கென்ற லதுவும் பண்ணும். [9]மூலைகார் பாரம். [10]கயவுகீழ் பெருமை மேன்மை கள்ளமென் றோத லாமே. [11]ஐயனே. [12]காவலன் கீழ்மக் கட்பேர். [13]யாமர்.

370 ஐயமே பிச்சை யேற்கு மோடனு மானம் பிச்சை ;
மொய்செருக் களந்[1]தி ரட்சி மூசுவண் டியானை தாயம் ;
மையமே நடுவெண் ணெய்ப்பேர் ; வயமாச்சிங் கந்தோல் வேங்கை;
குய்யெனும் [2]பேருள் வைப்புங் கொழுமணப் புகையு மாமே. (கஅ)

371 அய்யரே முனிவர் தேவர் ; அயிறலே செய்த லுண்டல் ;
மெய்யர்வே தியர்தி டத்தோர் ; வியாதனோர் முனிவே டன்பேர் ;
நெய்யவி யாடை நெய்தல் நிகழ்த்துசித் திரைநாள் முப்பேர் ;
ஐவிர லத்த நாட்பே ரங்குலி யைந்து மாமே. (கசு)

372 இயக்கனே நாயே யக்கன் ; ஈயேயோர் பறவை யீதல் ;
உயிர்த்தல்மூச் சுடன்வ ருத்தம் ; [3]உய்த்தலோட் டுதல்பி ழைத்தல் ;
பயத்தலே யொன்றைத் தன்கைக் கிடைத்தலு மொளியும் பண்ணும் ;
மயக்கமே தெளிவி லாமை விரகநோ யதற்கு மாமே. (உ0)

373 சயிந்தவந் தலைபிந் துப்புத் தலைமைவா சிக்கும் பேரே ;
[4]வியங்கோள்மா வியானை மேவல் ; வியாளமே புலிபாம் பின்பேர் ;
பயம்பென்ப பள்ளம் யானைப் படுகுழி யிரண்டும் பண்ணும் ;
இயங்கலே நடத்தல் காந்தி ; இயம்பல்சொல் [5]பழிமொ ழிப்பேர்.

374 இயவுகா நேர்வ ழிப்பேர் ; இயல்பேநற் குணமொ ழுக்கம் ;
வயல்வெளி வினையு நஞ்செய் ; மயிடமே பெருமை மேதி ;
[6]இயல்நடை யகலஞ் சாய லிசைத்திடுந் தமிழே நாற்பேர் ;
[7]வயறுரை கயிறே குக்கி ; வாய்த்தலோ ரசைநு ணுக்கம். (உஉ)

375 அயமென்ப தடாகம் நீரே யாடுவெம் பரியி ரும்பு
முயல்நிலம் விழவு சேறு மொழிந்த[8]சூ தனப்பேர் பத்தாம் ;
நியமமா லயமூர் வீதி நிச்சயம் நியதி யீமம் ;
[9]அயனமே யாண்டிற் பாதி நடவையென் றிரண்டு மாமே. (உங)

---

(பி-ம்.) [1]தெருட்சி. [2]பேர்ம றைப்புங். [3]உய்த்தலோ. [4]வியங்கோ ளென் பதுவே யானை மேவலுங் கோளலும் வைக்கும். [5]வழிமொ ழிப்பேர். [6]இயலிசை யகலஞ் சாய னடைகுண மியற்றமிழ்ப்பேர். [7]வயறுநாண் கட்டி ஞமம் ; வாய்த்தல்வாய்த் தசைநு ணுக்கம். [8]சூ தனர்பேர். [9]வியமிடு தலமங் காடி விகங்கமொன் பானபே ராமே.

376 கயமென்ப குளநோ யாழங் களிறுகீழ் பெருமை [1]பூது
முயர்சின்ன மிளமை தேய்தல் [2]ஓதுமொன் பான்பே ரேயாம்;
பயமென்ப சுதைநீ ரச்சம் பால்புயல் [3]குணம்வி தாதா;
புயமென்ப மூலையுந் தோளும்; பொய்யே[4] பொத் துப்பொக் கும்பேர்.

377 ஆயமே கவற்றி லாயம் ஆதாய மகளிர் கூட்டம்
தாயொடு நீளஞ் [5]சுங்கஞ் சாற்றுமல் லரியே யேழ்பேர்;
[6]காயமே விண்வெங் காயம் பெருங்காய முடல்பண் கார்த்தல்;
தேயம்நெய் வெண்ணெய் யன்பே நிகழ்ந்தநன் மைநாற் பேரே. ()

378 வயம்வலி தொர்ந்த மேடம் வாசிபுட் பொதுமரு நப்பு
முயலுட னிரும்பே [7]நீரே மொழியுமொன் பான்பேரே;
சயமுயர் வெற்றி மாலை சருக்கரை யிரவி யல்வி;
குயமுலை யரிவா ளின்பேர் கொழுமைசே ரிளமை யாமே. (உசு)

379 பயிரொலி பயிலே பைங்கூழ் பறக்கும்புள் மிருகங் கூடிப்
பயில்குர லோர்வி தங்கட் டுறும்வழக் கைப்பேர் பன்னும்;
வயிரமே இம்பு ரிப்பூண் வச்சிர மணியே செற்றம்
அயிலொடு குலிசம் வன்மை யான்றதூ ரியமேழ் பேரே. (உஎ)

380 ஏய்ந்தசீர் பெறும்ய கார வெதுகைபி னிசைக்குஞ் செய்யுள்
[8]வாய்ந்தவொன் றொழிமூ வொன்பா னென்னவே வழங்கச் செய்தான்
காய்ந்தகூ ரறமு ருக்குங் கந்தவேள் பாதம் போற்றும்
ஆய்ந்தசீர்ச் செந்தின் மேவு மருமருந் தையன் றானே. (உஅ)

[மிகை.] 1. மயன்மயல் வினைஞன் றச்சன். 2. நோய்வென்ப வருத்தம் நோயே நொசிவெனு முப்பேர் செப்பும். 3. தோய்வென்ப பிறைசேர் வெண்பால் புணர்தனீர் தோய்தற் கும்பேர். 4 வாயரே வுழைய ராயர். 5. மயிர்வினை மஞ்சி கன்பேர் மயிர்குறை கருவிக் கும்பேர். 6. இயறலே முத்திபோதல். 7. பெய்தலே கொடுத்தல் தூவல்; பேய்மண்ணை யில்லை யென்றும். 8. மொய்தலை யிமுத்த லீதல் மூநித லதுவு மாமே. 9. வெயிலொளி யென்றாழின்பேர். 10. செய்வயல் வினைசெய் தற்பேர். 11 செய்யலே யொழுக்கஞ்சேறு செய்வினை காவ லாற்பேர் 12. காவதங் காக்கை காதம். 13. வியற்பிமா செறித லின்பேர் வெருவுதற் கும்வி ளம்பும்.

யகரவெதுகை முற்றும்.

(பி-ம்.) [1]மென்மை. [2]ஓதபி தானம் பத்தாம். [3]குளம்? [4]போதல். [5]சங்கம். [6]காயம் விண் கறிவெண். [7]நீள. [8]வாய்ந்தவை யாறென் றோத மகிழ்செய்தான்.

# ரகரவெதுகை.

381 செகமுழு திறைஞ்சுந் தொல்லைச் சிகரவெற் பரசன் றந்த
மகவுமை பயந்த செவ்வேள் [1]வள்ளிநா யகிதன் கேள்வன்
குகனெடு வடிவேற் றுங்குங் கொற்றவன் [2]மலர்த்தாள் போற்றித்
[3]துகளறு ரகார மாய வெதுகையின் றொடையைச் சொல்வாம். ()

382 சுரதமே மதநீர் சூதஞ் சொன்மருந் திழிசா ரப்பேர் ;
[4]இரதநீ ளம்பு ணர்ச்சி சுவைசூத மிரதம் வீணை ;
பரதமோர் சாத்தி ரப்பேர் [5]பாரதப் பேரோர் கண்டம் ;
விரதம்நீர் தவம்வட் டித்தல் ; வீரட்டா னங்கூத் தோரூர். (௨)

383 சரகென்ப தேவர் தம்மூன் தருவுதிர் சரகே சோறும் ;
சிரகமே கரகந் தூறல் சென்னியிற் கோடுக் கும்பேர் ;
கரகமே துளிநீர் கங்கை கமண்டல மாலாங் கட்டி ;
துரகமூர் திப்ப ரிப்பேர் ; சூரணம் பொடியே கந்தம். (௩)

384 மரபென்ப முறைமை தொன்மை மருவுநற் குணங்கு டிப்பேர் ;
சரபமெண் காற்புள் ளொட்டை வரையாடு தானே மூப்பேர் ;
பரதரே திமிலர் நாய்கர் குருகுலத் தோர்க்கும் பண்ணும் ;
வரதநற் றுகில்க டாக்கம் ; மருமானே மருகன் சேயாம். (௪)

385 முரண்வலி பகைபோர் தூக்கின் மொழியுறுப் பொன்றே நாற்பேர் ;
கரணமே [6]கல்வி கூத்தோ டகந் துணை கார ணப்பேர் ;
அரணெயில் கவசங் காடே யடிதொடுங் கழலே மஞ்சம் ;
சரணமே மறைபு கற்றோ னைப்பிலி தாளே மூப்பேர். (௫)

386 [7]அரிதல்பிற் கிடலே கொய்தல் ; அரிட்டங்கள் காக்கை கேடாம் ;
பரிதலே யறுத்த லன்பு பகர்குற்ற மிரங்க னாற்பேர் ;

---

(பி-ம்.) [1]மருவுயர் கடம்பின் றிண்டோட். [2]றிருத்தாள். [3]துகளற விரிரகார. [4]இரதமே புணர்வியாழ் சூத மினிமைதே ரனைநா ணீளம். [5]பார்தபு. [6]கணிதங் கூத்து மனமாதி கலவி செய்கை—திரணல கலைத்துணைக்கா ரணமெனத் திகழா றேபேர். [7]அரிதலே பிறகி டற்பேர் கொய்தற்கு முறையாற் பாலாம்.

வரிதலே வரித்த லூர்தல்; வரைதலே கொளனீத் தற்பேர்;
இரிதலே கெடுத லின்பேர் எற்றுறு பயமு மாமே. (௬)

387 [1]பரிமுத ஞள்சேண் சும்மை பருத்திமாப் பெருமை வேகம்;
அரிதமே பசுமை திக்காம்; ஆர்கலி புயல்க டற்பேர்;
சொரிதலே பொழித லீட்டல் சுழன்றிடல் முப்பேர் செப்பும்;
[2]நெரிதால் பிறகி டற்பேர் நெருங்குற முருங்க லாமே. (௭)

388 திரிபுரி சார டைப்பேர் சிறந்தமுப் புரமுஞ் செப்பும்;
பரிபவ மதிக வீரம் பழித்திடு மிகழ்ச்சி யும்பேர்;
[3]சரிதையே பூசை பிச்சை சாத்திர மிம்மூப் பேராம்;
[4]தெரிசனை முகூரங் காணல்; தெரித்தலே சொற்றீட் டற்பேர். (௮)

389 அரிசனந் திருமாற் றெண்டு மழகெறி மஞ்சட் கும்பேர்;
திரிசாம் பகழி யானைப் பிறப்பெனச் செப்பற் பாற்றே;
பரிசன மேவல் செய்வோர் பற்றினர் ஞவள ஞம்பேர்;
சரிசமங் காவ லோப்பேர் சாற்றுறு வழியு மாமே. (௯)

390 உரையேபொன் கிளவி நாமம் ஓரசை உரிஞ்சு தற்பேர்;
புரையேயில் லுயர்வு குற்றம் புழைபுட லுவமை யும்பேர்;
சுரையேகள் புழையம் பின்கூர் சுரையாவோ டதன்மு லைப்பேர்;
நரையேயே றிவுளி வெள்ளை நாட்டிய கவரி நாற்பேர். (௧௦)

391 மரையேகான் குதிரை தேரை வனசமென் றேதல் முப்பேர்;
விரைவேபீர் வேண்டல் வேகம் விளங்குப சாரம் நாற்பேர்;
சிரையேவா னரமு சுப்பேர் [4]செப்பிய நரம்புஞ் சொல்லும்;
வரையே[5]கை வரைநெல் வெற்பு மட்டிறை கடனீர்த் தீரம். (௧௧)

392 காமேகை கிரண நஞ்சம் கழுதைகார்க் கிளியி றுத்தல்;
சிரமேசென் னிப்பே ரோடே செப்புறு நெடுங்கா லப்பேர்;

---

(பி-ம்.) [1]பரியேசேண் முதனுள் சும்மை பருத்தியே விரைவு செல்வம்... விரிகூர்தன் மாவ ருத்த மிகுதிகாழ்த் தல்க லூர்தல்—பிரியேவயில் பெருமை பழை காத்தல்பேர் இகழ்பன் மூன்றும். [2]நெரிதல்மிற் விடல்நெருங்கல்; நெரு... குற்றம் போழ்தாம். [3]443-ம் செய்யுளில் இரண்டாமடியைக் காண்க. [4]... திடனாம்பே யென்றும். [5]கை வரைவெற் பாழி மட்டிறை நெல்லேயம் ...

புரமேமெய் புரிமுந் நூற்பேர் ; புரவலன் வள்ளல் வேந்தன் ;
உரமேமார் பூக்கம் ஞான மோதுறும் வலிநாற் பேரே. (கஉ)

393 பரமென்ப கவசஞ் செய்தி பழமையே மெய் கலனே யத்தி ;
குரமென்ப பரிக்கு ளம்பும் கோணலு மெனவி ரண்டாம் ;
சரமம்பு மணியின் கோவை [1]தாமமோர் நூறு ணற்பேர் ;
சுரமென்ப தடவி மார்க்கஞ் சொர்றநோ யிசைநாற் பேரே. (கங)

394 அரவநூ புரம்பாம் போசை யரயில்நுங் குமவி ருக்கம் ;
குரவமே குதிரை மேல்வாய் கோவிதா ரங்கோட் டப்பேர் ;
சரவண மறுமு கத்தோன் சனனங்கா யாநா ணற்பேர் ;
பரவலே தொழல்ப ரத்தல் ; பரித்தலே பொறுத்த லன்பாம். (கச)

395 இரவென்ப திரவி ரத்தல் ; இராசிய மறைவே யோனி ;
பரவைவா ருதிப ரப்பே பங்கய மாதின் கூத்தாம் ;
குரவையே கடலோர் கூத்து ; குரங்கியே சிவன்வெண் டிங்கள் ;
தரவேயோர் பாவு றுப்புத் தலைவனுத் தரவே மூப்பேர். (கரு)

396 புரசுவாம் பரிக்க ழுத்திற் புரிகபி றெருும ரப்பேர் ;
அரசுமன் னிராச்சி யப்பேர் ; அரசன்பூ பதிவி யாழம் ;
பிரசமே யளியுங் கள்ளும் பேசுதேன் றேனீ யும்பேர் ;
முரசமுத் திட்டா திப்பேர் முழக்குறும் முரசு மாமே. (கசு)

397 அரம்பையே கதலி தெய்வ வாயிழை யவர்க்கு மேற்கும் ;
[2]குரம்பைமெய் சிறுகு டிற்பேர் ; குருளையே மழவு குட்டி ;
நூரம்புமே டொடுகற் பாறை மூதிர்பால் கழிநி லப்பேர் ;
பிரம்புவேத் திரம்நெய் மூங்கிற் பெருங்கட லரிசி யைம்பேர். (களா)

398 முருந்திற கடிக்கு ருத்தே முறியே மூத் தேகு ருந்தாம் ;
குருந்தொரு தருவே [3]தொத்தே குருக்குமென் றறைதல் மூப்பேர் ;
விருந்தினி யுவர்வ ரத்தும் புதுமையும் விளம்பற் பாற்றே ;
[4]மருந்தமு தநம ருந்தாம் ; வசிக்கடை மின்மினி வண்டாம். ( )

---

(பி-ம்) [1]சமரோர்நூல் கணைநா. [2]குரம்பையே யுடலி சைப்பேர் சிறு குடிற் பேருங் கூறும். [3]கொத்தே. [4]மருந்துபுற் புதர்வா னேரு ணிரதமும் வகுக்க லாமே.

399 கரும்பென்ப சுரும்பே கன்னல்; கரடகங் கபடங் தூசாம்;
குரும்பையே தென்னம் பாளை புற்றுஞ் சோ றெனவுங் கூறும்;
நரந்தமென் பதுநா ரத்தை நாறுங்கத் தூரி காக்கை;
சுருங்கையே [1]கரந்து பண்ணுங் கற்படை நுழைவாய் தற்பேர். ()

400 பூரமே பொன்கற் பூரம் புகலோர்நாள் [2]பூரா ளுற்பேர்;
வாரம்நீர்க் கரையோ டன்பே மலைச்சாரல் கிழமை பங்காம்;
சாரமே கிரக சாரஞ் சாற்றுறு மினிமை மேடாம்;
கீரமே காழ்த்தல் பொன்னும்; கருமான்மான் மஹப்பன் றிப்பேர்.

401 ஈரமே குளிர்ச்சி யன்பாம்; இரதனே கிள்ளை கண்ணும்;
கீரமே [3]தீய வெண்பால் கிள்ளைகா ரிப்புள் [4]முப்பேர்;
பீரமே பீர்க்கும் [5]வாகைப் பேரும்பூ வாசு மென்றும்;
தீரமே புனற்க ரைப்பேர் [6]திட்பமென் றிரண்டு மாமே. (௨௧)

402 வராகனே யருகன் மாயன் வயங்குபொற் காசே முப்பேர்;
பாரகமே பொன்னி ரேணுப் பரிமள மலர்த்தூட் கும்பேர்;
அராகமே நிறம்பொன் பண்ணே [7]யகங்கார மூடுகி யற்பேர்;
இராகமே கீதஞ் செம்மை யிச்சையே நிறமு மேற்கும். (௨௨)

403 அராமமே நறும்பொ ழிற்கூழ்; அரைநூல்மே கலைச தங்கை;
உரோமமே மயிர்வெம் பாணம்; உருளேரோ கிணிநாள் பாண்டில்;
[8]இராமமே யழகோர் வேந்த னிளமையென் றிசைக்கு மப்பேர்;
துரோணமே [9]பதக்குக் காக்கை தும்பையில் சிம்புளெம்பேர். (௨௩)

404 அரிவையோர் பருவ மாதர்; ஆரிசோ முன்பேர் மேன்மை;
கரியவன் சனியே சோரன் கண்ணனிந் திரனே நாற்பேர்;
சுரியல்நீர்ச் சுழிசு ரித்தல் தோகையர் கருங்கூந் தற்பேர்;
கிரிபருப் பதம்வ ராகம்; [10]கிரிட்டியோ ரீற்றுப் பன்றி. (௨௪)

405 துருவமோ ரிடத்தி லக்கஞ் சலிவின்றி நிற்றல் சொல்லும்;
பருவமா மியங்கா ராதிக் காலம்பெண் பருவ முப்பேர்;

---

(பி-ம்.) [1]கரந்தற். [2]பூர நாற்பேர். [3]தீபம். [4]நாற்பேர். [5]வாகை. [6]செறிவரம் புடனுற் றற்பேர். [7]யடங்காமை. [8]இராயமே பழவெ ழிற்பேர்; இருவியே யருவி கொய்தாள். [9]பதக்கல். [10]கிரிட்டியாப் பேரன்டை கேழல்.

தருவென்ப மரங்க ரும்பு; தராசுக்கோல் பாணி நாளாம்;
[1]உருவென்ப நிறமே யட்டை; உரியர்மு தறிந்தோர் சுற்றம். (உரு)

406 அருகனே யமணர் தேவும் நிலையாமை யதுவுங் காட்டும்;
விருகென்ப மிருகம் பூனை; [2]விருடகம் எலிமார்ச் சாலம்;
முருகன்பா லைக்கு வேந்தன் முருகவே டேவ ராளன்;
மருகனென் பதுவே தோன்றல் மருமானென் பதுவு மாமே. (உசா)

407 ஊரென்ப நகரே யூர்த லோதுறுங் கவானே முப்பேர்;
பாரென்ப தேர்ப்ப ரப்புப் படி[3]பொன்ற லுடன்கற் பாறை;
வாரென்ப கவசம் நேர்மை மங்குல்நீர் நெடுமை கச்சாம்;
சூரென்ப நோயஞ் சாமை யணங்கச்சஞ் சூரன் வஞ்சம். (உஎ)

408 பரிசென்ப குணங்கொ டைப்பேர்; பருவர லருவல் துன்பம்;
குரிசிலே பெருமை பெற்றோன் கோதில்வேந் தற்குங் கூறும்;
இருசுபண் டியுளி ரும்பு செவ்வையென் றிருபேர் வைக்கும்;
துருசொரு மருந்தே வேகம்; துருஞ்சில்சீக் கிரிவவ் வாற்பேர். ()

409 இருமையே பெருமை துக்க மிம்மையு மறுமை யும்பேர்;
தருமையே மிகுதி மேன்மை; சாரசங் குருகு நாரை;
கருமையே பெருமை நஞ்சங் கறுப்புடன் வலியே நாற்பேர்;
தெருமால் [4]வெருவ லோடே சுழற்சியுஞ் செப்ப லாமே. (உகூ)

410 அருத்தியே பாதங் கள்கூத் தாசையூ ணூட்ட லைம்பேர்;
விருத்திபொன் றொழிலிலாப முறைப்பொருள்[5]விளர்ச்சிதொண் டாம்;
கிருத்திமம் விட்ட பூதங் கெட்டபொய் தோலே பண்ணல்;
துருத்திதோற் சிவிறி யேயாற் றிடைக்குறை சொன்முப் பேரே. ()

411 மருத்தென்ப மருந்தே காற்றே மால்யானைப் பிறப்பே முப்பேர்;
குருத்தமோர் மரமே கோபங் குருக்குத லெனவுங் கூறும்;
பொருத்தென்ப தூல்கி ளிஞ்சல்; [6]ஈரேபங் கியினி ரத்தல்;
[7]ஒருத்தல்வில் விலங்கே றியானை பொண்பரி [8]புலிநாற் பேரே. ()

(பி-ம்.) [1]உருவென்ப வடிவே யட்டை யுற்றநோய் நிறமே யுள்ளாம். [2]விடருகம். [3]வீய்வந் தணர்கற் பாறை. [4]பயஞ்சு ழற்சி; தோர்சாக் கியர்தெளிந்தோர். [5]வளர்ச்சி. [6]ஈரென்ப திரண்டே யீர்ம ணீரேதுப் பெனுநாற் பேரே. [7]ஒருத்தலே. [8]புலிமா னென்ப.

412 விருத்தமே மனைவி செய்யுள் மிருகக்கூட் டம்வட் டப்பேர் ;
திருத்தலே [1]திருந்தல் தாங்கல் ; [2]திருவேபொன் றெய்வ வுத்தி ;
அருத்தஞ்சொற் பொருள்பொன் னின்பேர்; ஆர்த்தலே யருந்தல் கட்டல்;
உருத்தலே முளைத்தல் கோப மிருதியென் றேதன் முப்பேர். ()

413 அருப்பமூர் நோய்கான் றுக்கம் அயின்றமோர் பிட்டாறே பேர் ;
[3]கருப்பென்ப விளைபல் பண்டக் குறுவிலைக் காலஞ் சோறும் ;
உருப்பமே வெப்பக் தூர்க்க முயருமா லையம்ப வப்பேர் ;
மருப்பென்ப சிருங்க மிஞ்சி ; மருட்கள மடமை யாமே. (௩௩)

414 எருக்கலே பரித்தல் கோற லெறிவெட்டுக் கட்டை முப்பேர் ;
துருக்கமே விடா ரண்கத் தூரிகுங் குமங்க லக்கம் ;
முருக்கென்ப கவிர்கொ லைப்பேர்; [4]முரித்தலே நகைபி லங்கல் ;
பருக்கையே பாலக் காகும் ; பாரகம் புவிதி ரைப்பேர். (௩௪)

415 ஆர்தலே குடித்த லுண்டல் நிறைதலென் றறைதன் முப்பேர் ;
ஊர்தலே [5]பரத்த லுண்டல் சிந்தலூற் றெழுத லும்பேர் ;
வார்தலே யுயர்ச்சி நீளம் ; வரித்தல்பூ சுதல்பொ றித்தல் ;
தீர்தலே நிவிர்த்தி நீளம் ; திரையல்வெற் றிலைதி ரைத்தல். (௩௫)

416 வாரியே யிளமை மேகம் ஒளிரும்வெண் சங்கே முப்பேர் ;
மூரியே றெருமை யாற்றல் ; மூரிவேயூழ் பெருமை சோம்பாம் ;
சாரியே கவற்றின் சாரி சடுதியி னோடல் சாற்றும் ;
மாரிநோய் [6]வடுகி கள்ளை மங்குல்சீ மூதம் நீராம். (௩௬)

417 ஆரை[7]புற் பாய்ம திற்பேர் ; அருந்தலே யருமை துய்த்தல் ;
தாரைகண் [8]ணுடுநே ரோட்டந் தரைகூர்மை மழைமார்க் கப்பேர்;
[9]தோரையே நெல்வி கற்பம் சுடர்த்தபொன் னூல்கை ரேகை ;
ஓரைபெண் குழுவி ராசி யவராடற் கலமோ துப்பேர். (௩௭)

---

(பி-ம்.) [1]திருத்தல். [2]திருவென்ப பாம்பொன் சீர்தோள் செல்வமே தெய்வ வுத்தி. [3]கருப்புவே ழம்பல். [4]முரித்தல்மின் னகையொ ரித்தல். [5]யெழுதல் சிந்தல் தடவலூர் தீதூண் டற்பேர். [6]வீளிவே மேகம் வடுகிகள் ளேதெண் ணீராம். [7]திண் மதில்புற் பாயே யாமொரு பூடுஞ் சொல்லும். [8]மணிநே ரோட்டந் தரைகூர்மை யுமோ கங்கார். [9]தோரைநெல் விகற்ப மூங்கி லரிசிபொற் றாய்நூ லிரேகை.

418 குருதியே சிவப்புச் செவ்வாய் சோணித மூப்பேர் கூறும்;
பருதியே யூர்கோள் வட்டம் பகலவன் [1]றிகிரி நாற்பேர்;
சுருதியே யொலிவே தப்பேர் சொற்றன செவியுங் கூறும்;
திருதியே திரும்பல் மூன்றும்; செருந்தியோர் மரம்வாட் கோரை.

419 உருக்கமே குழைவே யூந்; ஓர்வுன்னல் குறிக்கொ ளற்பேர்;
திருக்குக மூற்றந் தூசு திருட்டியிம் மூப்பேர் செப்பும்;
சுருக்கென்ப நெப்த்து டுப்புச் சுரித்திட லிரண்டுஞ் சொல்லும்;
பெருக்கமே செல்வ மாற்றுப் பெருக்கொடு பெருமை யாமே. (௩௯)

420 எருவையே கழுகு கோரை யிரத்தம் நற் கொறுக்கை [2]செம்பாம்;
புருவை[3]யெவ் வனமே மேடம்; புரத்தலே காத்தலீகை;
கருவைகோத் திரத்தின் வைக்கோல் கருப்பமுட் கருத்தே மூப்பேர்
தெரிவையோர் பருவம் பெண்பேர்; திரைதிரை தாங்கம் பூமி. ()

421 மருதமோர் மரம்வ யற்பேர் மருதநன் னிலப்பாட் டேயாம்;
பொருதலே நிகர்ப்புப் பூசல்; பூரிப்பே மிகல்க ளிப்பாம்;
இருதுவே பருவ மாத ரிருதுகா ராதிக் காலம்;
மிருதுவே மென்மை சாவாம்; விரையேசாந் தங்க மழ்த்தல். ()

422 வேரலே வேர்த்தல் மூங்கில்; விரோதமல் வேறு பாடாம்;
கூரலே மாத ரோதி குருகின்வன் சிறகி ரண்டாம்;
தோரலே யணங்கு [4]தோர்வை; சுரியென்ப நரிசு ரிப்பேர்;
[5]நேர்தலே யெதிர்த லீகை நேருதல் வேண்ட லும்பேர். (௪௨)

423 போரே நென் முதலாஞ் சும்மை சதையநாட் பொருதல் மூப்பேர்;
ஏரே சொன் மாலை செவ்வி யுழுபெற்ற மிவைசெப் பும்பேர்;
தூரே தூர்த் தல்வே ரின்பேர்; சுரித்தல்சேர்ச் சுழியே தாங்கல்;
[6]கூரேகூர் மைப்பெ ரோடே மிகுதியுங் கூற லாமே. (௪௩)

424 சூரனே [7]பிரவி நீயே சொற்றநாய் மீளி நாற்பேர்;
சாரணர் சித்தர் தூதர்; சரித்திர மொழுக்கங் காதை;

---

(பி-ம்.) [1]ஒளிபொன் னேமி. [2]செம்பாம். [3]டவ் வனமே. [4]தோரை. [5]நேரலே யுடன்ப டுத்த லனுகூத லென்று மாமே. [6]கூரென்ப மிகுதி கூர்த்தல் கூர்மைக்குங் குறிக்கற் பாலாம். [7]யசுரன் வெந்தீ சுடர்க்கதிர் சுணங்கன் மீளி.

[1]ஞரொலி விரைவி ரண்டாம்; நீர்வாரங் குளநெல் வெள்ளி;
மார்கழி யோர்ம திப்பேர் மான்றலை நாட்கு மாமே. (சச)

425 பூருவங் கிழக்கே முன்பே போற்றுமு முதுமை மும்பேர்;
பீருவே புருவ மச்சம்; பிரமாண மளவே சூளாம்;
காருகந் தானே நெய்தல் கருங்குராங் கிவையி ரண்டாம்;
[2]தூர்வக மறுகோ டேறும்; சுரிகையே கவசம் [3]பத்திரம். (சரு)

426 இருளென்ப கருமை [4]யல்லா டிசைக்குறு நாகே முப்பேர்;
[5]அருளென்ப தகைவி ளுமை மரும்பொரு டனக்குஞ் சொல்லும்;
சுருளென்ப சொருகுங் கூந்தல் துவர்த்தல்பா கிலைச்சு ருட்பேர்;
[6]முருடென்ப ஞெகிழி யோடு முதிர்பெருங் குறடு மாமே. (சசா)

427 வருணநீர் குலமோர் திக்கே மறிதிரைக் கடலே நாற்பேர்;
பொருநர்போர்த் தலைவர் கூத்தர் புரப்போர்கா னவரே வீரர்;
இருபிறப் பெயிறே [7]பார்ப்போ டிருஞ்சிறைப் பறவை முப்பேர்;
அருணநற் சிவப்பே நவ்வி யாடெனு மிச்சை நாற்பேர். (சஎ)

428 ஊர்திசெங் கதிர்வி மான மூவாப்பரி சிவிகை பாண்டில்;
பார்வைதீ வகம திப்பு [8]பார்த்திடும் விழியே முப்பேர்;
போர்வைதோ லொடுமுட் டாக்குப் புகன்றமீக் கோளெ னும்பேர்;
ஆர்வம்வில் நரகங் காத லன்பெனு நாற்பே ராமே. (சஅ)

429 ஆரிடம் வதுவை முன்னூ லருந்தவர் பூசைக் கும்பேர்;
[9]சார்பிட மொற்றுப் பற்றுந் தணப்பிலாப் புணர்ப்பே நாற்பேர்;
பாரிடம் புடவி பூதம்; பாரதி வாணி நாவாய்;
நார்வட மன்பி ஞமம் நவிற்றுநா யதற்கு மாமே. (சகூ)

430 [10]கரியென்ப திருந்தை சான்றே களிற்றொடு தவங்க ரித்தல்;
பரிசமே கிடங்கு மேடை பகர்மதி [11]லரணம் நாற்பேர்;

---

(பி-ம்.) [1] ஞாலே விரைவொ லிப்பேர், [2] தூரங்க. [3] கைவேல், [4] [illegible] யானையல் நாகே யைம்பேர். [5] அருளென்ப சிவசத் திப்பே ரனுக்கிர கப்பேர் வைக்கும். [6] முருடுவன் கட்டை யின்பேர் முரவம். [7] பார்ப்பா டிருஞ்சிறைப் பறவை பார்ப்பாம். [8] ப் பகர்விழியவேயே பாரம். [9] சாரிட [10] கரிகளி றிருந்தை சாட்சி கதிரவன் கரிந்தல் தாளம். [11] லரண்க ணைப்பேர்.

உரிமைநற் குணமே யாட்சி யோது று மனைவி மூப்பேர் ;
பரிபுர மெனும்பேர் பாத கிண்கிணி மணிப்பேர் பன்னும். (௫0)

431 அரசியல் வெற்றி தோற்றம் வரைவின்மா தர்க்கு மாகும் ;
காடம்வா யுசங்க ளிற்றின் மதம்பொழி கவுட்குங் கூறும் ;
பிரமரி சுழல லோடே பேச்சுகூத் தொன்றெ னும்பேர் ;
தாளநித் திலமு ருட்சி சஞ்சல மூப்பே ராமே. (௫க)

432 [1]மருவேயோ ரிடத்தூண் வாசம் ; வ நடமே சமைம னைப்பேர் ;
தருமரா சன்[2]பேர் புத்தன் சினவரன் சமனே மூப்பேர் ;
கருவுரை நடுமேட் டின்பேர் கருப்பொருள் கருப்பம் நாற்பேர் ;
இருடியே முனிவ னுந்தை ; இரும்பேசெம் பொன்[3]க ரும்பொன்.

433 சரீரமே மிடாவ கத்தி களிற்றின்பல் லடியெ னும்பேர் ;
மரீசியே புலவ ரம்பின் வழிமிள கொருமு னிப்பேர் ;
விராடமோர் தேயங் கூவும் வேசரி யதற் குஞ் செப்பும் ;
கரோடியே பெருஞ்சூட் டுஞ்சொற் கவின்முடி மாலைக் கும்பேர். ()

434 ஆரியம் விளையோர் பண்ட மறைந்திடுந் தேச மொன்றும் ;
பூரியம் வேந்தர் வீதி போற்றுமு நகரி ரண்டாம் ;
[4]தாரியே வழியு தாரி ; தருப்பணம் பிண்ணாக் காடி ;
வேரிகள் ளிருவே லிப்பேர் ; விரியல்பாய் விரிவு மாமே. (௫ச)

435 சாரதி [5]கவிஞர் சூதர் ; தரித்தலே நடத்தல் வேய்தல் ;
சோரனே கள்வ னுட்டின் சொற்பற மிரண்டுஞ் சொல்லும் ;
காரகம் நாகோர் நூற்சொல் ; கரேணுவே பிடிதந் திட்பேர் ;
மாருதி யனுமன் வேழ மிடும்பிகேள் வங்பேர் வைக்கும். (௫௫)

436 அருணனே புந்தி வெய்யோ னவன்றேரூர் பாகற் கும்பேர் ;
தருணியே யிளமை நாரி ; சார்தல்பொய் பிறவி யொத்தல் ;
கருணியே மூழையும் வெற்பும் களிற்றொடும் பிடியெ னும்பேர் ;
விரணமே விழலே யாக்கரு மேவுமு மிரண மும்பேர். (௫சு)

---

(பி-ம்.) [1]மருவென்ப வோரி டத்தூண் மகிணர்தோண் மருவல் வாசம். [2]சினேந்திரன் சமன்புத்த னுதிட்டி ரன்பேர். [3]னுலோகம். [4]தாரிவண் கொடைவழிப்பேர். [5]கவிஞர்.

437 மாரமா மாசே யாச்சா வளர்சீப மும்பேர் செப்பும்;
குரால்கபி லைநி றப்பேர் கூறும்பாற் பசுவும் வைக்கும்;
தராலயங் கயிலை மேரு; சருமமே தோல்க ளிப்பாம்;
[1]மாராளமே யுரக மன்னம்; [2]மாரடமோர் தேசங் கூந்தல். (௩௭)

438 அரக்கென்ப சிவப்ப ரக்காம்; ஆர்கலர் கொழுந ரன்போர்;
நிரப்பைய மிடியே [3]தேய்தல் நிரம்பலென் றேதல் நாற்பேர்;
மரக்காலா யிலியஞ் சோதி வருதுர்க்கை யாடல் மும்பேர்;
பருப்புச்சூ பகமின் னாற்பேர்; [4]பாரடியே யானை பன்றி. (௩௮)

439 சீர்மையே விழுமங் கண்ணே செறிவென் பஞ்சி றப்பாம்;
நீர்மையே தெளிவு நேயம் நிகழ்குண மிகவுமுப் பேரே;
ஆர்மையே மதில்கூர் மைப்பேர்; அரோணகம் வாள்ம ருந்தாம்;
வார்மைய யொழுக்கம் நேர்மை; [5]வருடையே சிம்புட் டூன்றும். (௩௯)

440 பேரேசொற் பெருமை நாம மதிஞானப் பேரும் பேசும்;
[6]சீரேநற் குணம்பூ ராடம்; நிரியாணம் வீய்வா னைக்கண்;
பாராவா ரங்க டற்பேர் பகர்கடற் கரைக்கும் பண்ணும்;
ஆரோக ணந்தாழ் வரா மகன்றகற் படையு மாமே. (௪0)

441 அரங்கமாற் றிடைக்கு றைக்கூத் தாடிட மமர்க்க ளப்பேர்;
தாங்கநீர்த் திரைதி ரைப்பேர்; சராவமே யகல்ச லாகை;
துரங்கமே பரியே நாவாய் சொற்றவாய் தல்முப் பேரே;
குரங்குதல் குனித்த லாட லுறங்குதல் நமிக்கங் கூறும். (௪௧)

442 அரணிதீக் கடையு முங்கோ லணிமதிள் கவச மும்பேர்;
இரணியம் பொரல்மா ணிக்க மீர்ங்கட லாகேவ பொன்னும்;
காணியே கணிக்கும் வல்லோசை காட்டுநாற் காணிக் கும்பேர்;
தாணியே பிரவி பூமி சயிலமென் றறைய லாமே. (௪௨)

443 இரிசியே வழக்கு நாவாய்; இரட்டிரட் டித்தல் சாதி;
சரிதையே பூசை பிச்சை சாற்றுறுங் காதை மும்பேர்;
திரிதலே யுலாவல் கேடாம்; சிருளி யுஞ்செம் பாகும்;
மருவித மேடே முழை படலான தெவைக்கு மாமே. (௪௩)

(பி-ம்.) [1]மாராளமோ ருமபாம் பினபேர் மாதளை யருவு மாமே. [2]மாராடமோர். [3]தேர்தல். [4]பராட்டியே. [5]வருடைசிம் புள்ஞென் றாடாம். [6]சீரோர்...

444 நுரைநவ நீதம் நீரி னுரைதிரை யெனவும் பாற்றே;
கரைகுளக் கரைக ரைத்தல்; காவிர மலரி தேசம்;
நிரையொழுங் கசைச்சொ லானே நிரைக்கூட்ட மிவைநாற் பேரே;
குரைமிகு மொலியி னாமம் நிறைவென்றுங் கூற லாமே. (௬௪)

445 விரையே துயரம் வேலை விருக்கமொன் றின்பே ராகும்;
சிரையே சிறுக்கொ டிப்பேர் திகழ்ந்தநற் றுகிலுங் கூறும்;
கிரைபா சடகே வைக்குங் கிளத்துசா கினிக்கு மென்ப;
பாரதம் [1]பொது வி னாமம் பரம்பர மதுவு மாமே. (௬௫)

446 அருவியே மலையின் சார லரிபுனங் கழிமு கப்பேர்;
[2]பரிகாரம் பலிபண் டப்பேர் படர்மெலி வகற்றல் செய்யும்;
உரியேதோல் கணித்த தொன்று முரித்தலும் விரித்த நாமம்;
அருவேறுண் பழம்பொ ருட்பே ரணுநுணுக் கறிவு மாமே. (௬௬)

447 கரண்டகங் கமண்ட லப்பேர் கருதுநீர்க் காக்கைக் கும்பேர்;
தெருண்டலே யறிவு தேற்றம்; சீர்மானே நெடுமால் செய்யோள்;
பருந்துமா டப்பு றுப்பேர் பகர்சேன மிவையி ரண்டாம்;
கரண்டையே முனிவர் வாசங் கற்பாழி யிரண்டு மாமே. (௬௭)

448 இரதிபித் தளையே காந்தள் எழின்மாரன் றேவி யாசை
விரதநற் சிவன்வாழ் வெள்ளி வேதண்டம் பிடியா னைப்பேர்;
இரதனப் பேரே யோசை கிண்கிணி யரைஞா ணென்றும்;
சரசமொப் பில்வி னைதஞ் சாற்றுறுங் கணையு மாமே. (௬௮)

449 குரலென்ப மிடறெ ழுத்துக் கூந்தலோ டலகே தூவி
முரலின்பண் ணரம்பே யேனல் மொழிந்தபா திரியே யெண்பேர்;
அரலைதிண் கடலே கன்னி யையெனு நோய்காழ் நாற்பேர்;
இரலைமான் [3]கலையூ துங்கொம் பிரண்டுடன் முதனா ளாமே. (௬௯)

450 அரில் பகை பிணக்குக் குற்ற [4]மாசிலரி பாயல் சந்தி
புரிகுழல் சிறிய தூறு பொருந்திய குரலோன் பாண்பேர்;
கரிலுயர் குற்றங் காழ்த்தல்; கரைத்தலே விளித்த லோசை;
[5]பரிவுமெய் விரும்பல் வேறு படலுடன் செயலு மாமே. (௭0)

---

(பி-ம்.) [1]பொதுவே யோர்நூல். [2]பரிகார மேவல் செய்வோர் பல்பண்டம் பெண்ணின் கூந்தல்-ஒருவர்நோ யகற்றுஞ் செய்கை யபிதான மோர்நான் காமே. [3]கலையூ. [4]மாலினி. [5]பரிவுமெய் யாரா வன்பும் வினைமுகத் துன்பும் மன்னும்.

451 கோரமே வெருவல் வெப்பங் கொடுமைபூ மூகையே வட்டில்
வீரமே வுவதிண் வாசி விரைவினிற் குறிப்பே யேழ்பேர்;
ஆரமே பதக்க மாலை யாத்திசந் தனமே முத்தம்;
நாரமே தெண்ணீர் பாசி நாரத்தைப் பேரு மாமே. (எக)

452 பாரம்நீர்க் கரையே நாவாய் பல்லணம் பெருமை பூமி
யேர்பொறை கவச மாட லீராறெண் ணிறையொன் பான்பேர்;
தாரம்வல் லிசைநா வெள்ளி தலைவியா ழிசைநற் பண்டம்;
ஓரமே சூகாய மோரம்; உருசியே சுவையின் னற்பேர். (எஉ)

453 சாரல்தண் மருத யாழிற் றிறத்தோசை சயிலப் பக்கம்
வேரலார் சயிலங் கிட்டல் விளங்கு மிந் நாற்பேர் வைக்கும்;
ஆரல்கார்த் திகைநாட் செவ்வா யாரணமோ டொருமீ னூற்பேர்;
மூரல்சொல் பல்லே சோறே முதிர்சிரிப் பெனும்பே ராமே. (எங)

454 வரிநிற மெழுத்துப் பாட்டு வடிவம்நெல் லிறைபி ராகம்
[1]சரியறி வொழுக்கம் நீளக் தழல்வேலை சுணங்கீ ரேழ்பேர்;
புரியளி விரும்பல் சேறல் புரஞ்சங்கு கயிறே [2]கட்டாம்;
துரியமோ ரவத்தை தேடல் சொற்பொதி யெருது மாமே. (எச)

455 [3]பொருளென்ப சொற்பொ ருட்பல் பண்டம்பொன் புதல்வ னீதி
யருள்பண்பே தலைமை யொண்மை யனமெனும் பேரீ ரைந்தாம்;
குருளென்ப குட்டி யோதி; கூர்ப்பிடங் கூர்மை கார்த்தல்;
மருள்வெம்பேய் மயல்கு றிஞ்சி மருவும்யாழ்த் திறமி ருட்டாம். ()

456 குருவென்ப பெருமை பாரங் குரவன்மாத் திரையி ரண்டோ
டுருவநன் னிறம்வி யாழ மோதுமா சானே யெண்பேர்;
பருவென்ப வுருக்கு ருப்புப் பகருறும் பெருமை மூப்பேர்;
[4]செருவென்ப வடிசி லேரி செங்களப் போரு மாமே. (எரு)

457 தூரிய [5]முரச வீட்டந் துகிலிகை யிடபம் வெற்றி
சூரிய படைக்க லங்கள் கோசிக மீய மேழ்பேர்;

(பி-ம்.) [1]சரியற. [2]காட்டாம். [3]பொருளேசொற் பொருள்பல் பண்டம் பொன்பண்பே பிள்ளை வாய்மை—யருணிதி தலைமை யொண்மை யனமொன் றே டைரைந் தேபேர். [4]செருவேயூண் மழைபோ ரேரி. [5]முரசம் விட்டந்.

ஓரியாண் மயிரோரர் வள்ள லுபர்முக மூகூர நிப்பேர் ;
நாரியே பெண்பன் றூடை நறவுவின் றூணி நாற்பேர். (எஎ)

458 தருமமா நிலவ மூக்கந் தட்பம்நல் லறங்க ளீதல்
கருமமோ டியல்பே வீதி யருடவம் பேரோன் பானும் ;
பருமமே கலையு யர்ச்சி கவசந்தூ சிளமை பண்ணும் ;
தூருமமே மான மோக்கம் ; கருங்கலே தூக்கந் தேய்தல். (எஅ)

459 ஆரத்தமே யிரத்தஞ் செம்பொன் னரக்கொமிற் பலங்குடும்போ ;
டிரத்தசெம் பூரத்தஞ் செம்மை யொளிருஞ் செந் தூறிரெண் பேரே;
இரத்தமே பவளம் நெய்த்தோ ரிலங்குறுஞ் சிவப்பே மூப்பேர் ;
காத்தலே மறைவு [1]கள்ளம் ; கருணைகூ ரணமஞ் பாமே. (எகூ)

460 பாரியோர் வள்ளல் கட்டில் பாரகங் கள்ளே கூந்தல்
வாரியார் கடலே யில்லாள் வத்திரங் கனமெண் பேரே ;
சூரி[2]சண் டிகையிற் பன்னர் சுரிகையோர் பூச்சி வெய்யோன் ;
ஆரிய னையன் மேலோன் ஆதித்தன் மூப்பே ராமே. (அ௦)

461 ஆர்கூர்மை சோதி பாகோ டாத்திய நிறைவே பூமி
தேர்சேரைந் தூருவா ணிப்பேர் செப்பிய வேழு மாகும் ;
பீர்சூர்வெம் முருண்மூ லைப்பால் பீர்க்கொடி பசலை நாற்பேர் ;
கார்நீர்நெல் லாடு மேகங் கருங்கள் கழப்போர் காலம். (அக)

462 சாரிகை சுங்கம் பூவை சார்சுழற் காற்ற சைச்சொல்
வரிசை கொட்புற் றோட லெழுத்தின்சா ரிகையா றேபேர் ;
பூரிகை யூது காளம் உக்காரி பூர கப்பேர் ;
காரிகை யோர்நூல் மாதர் கலித்துறை யழகே நாற்பேர். (அஉ)

463 [3]அருச்சுன மென்ப வெள்ளை யரிசியோ டறுகு கூட்டி
விரித்தணிந் திடுத லின்பேர் வெண்மையு [4]மருது மேற்கும் ;
குரத்தியே நுளைச்சி யோடு தலைவிக்குங் கூறற் பாலாம் ;
இரத்தியே யிறலி வள்ளி ; இருத்தையே திதிகண் ணற்பேர். (அங)

464 பிரமமே தூருத மாடு பிறழ்பொருள் நடுக்க லக்கம்
அரியயன் கிரதி [5]வேதம் அறவர்முச் சுடர்பன் மூப்பேர் ;

(பி-ம்) [1]கள்ளல். [2]மா லினியே சங்கர். [3]அரிச்சுன. [4]மருத்து. [5]பேதம்.

இரவியே மலையே வெய்யோன் ; இரங்கலே யழுங்க லார்வம் ;
பிரமசா ரியந்த வப்பேர் பெருமறை யவற்கு மாமே. (அ௪)

465 வாரணஞ் சங்கு கோழி மலிகடற் றடைமா வியானை
காரிணங் குழுவ ராகங் கவசமுன் மத்த மங்கி
பேரிணங் குறுநற் றூனம் [1]பிறழ்ப்பிடை யீரைந் தேபேர் ;
சீரணங் குணமின் மைப்பேர் செம்புபித் தளையு மாமே. (அ௫)

466 [2]வாரியே யானைக் கூடம் வாய்தல்நீர் மதினூல் வட்டை
பாரிய மடைக பாடம் பாவைநற் றகைமை வெள்ளம்
ஏரியை வருவா யற்பேர் மிகுதி யொன் றொழியீ ரேழ்பேர் ;
பூரியே பொன்வில் நாணி ; புராணமே தொன்மை முன்னூல். ()

467 குருகேகை வளைபுள் நாரை குக்குட மிளைவெண் மைகொல்
இருகுலை மூக்கே மூல நாளேமா தவியொன் பான்பேர் ;
முருகேகள் ளிளமை நாற்ற முருகவேள் விழாவ னப்புப்
பெருககி [3]லெழுச்சி யீரம் பேசுமொன் பான்பே ராமே. (அஎ)

468 [4]சீர்துணி சதியி னைத்துச் சீர்த்திகாத் தண்டே செல்வ
மோர்பொறை யொல்கல் பாரம் யாப்புறுப் பீரைம் பேரே ;
தார்கொடிப் படைப்பூந் தாமஞ் சத்திரம் பரிமாக் கூட்ட
மோர்வில்கிண் கிணியின் கோவை யொழுங்கெனு மிருமூன் றேபேர்.

469 காரியோர் வள்ளல் காக்கை கடிச்சனி வடுகன் சாத்தன்
றேரிலாக் கீழ்மை போர்புள் முழு நிலங் கருமஞ் செய்தல்
நேரிலாக் களர்க முப்பு நிகழ்த்திய பேரீ ராறும் ;
சோரியே விடாமை ப்பே ரோணஞ்சோ ணிதமுப் பேரே. (அசு)

470 நேரெண்ப சமமே யீதல் நெடிதுடம் பாடே பாதி
தேர்மஞ்ச ருட்பஞ் செப்புத் திகழ்தனிப் பாட்டி னோடே
ஓருஞ்செம் பத்தி யென்றே யொன்றொழி யீரா றே பேர் ;
சாரங்கம் வில்மான் வண்டு சாதகப் புள்நாற் பேரே. (சு0)

(பி-ம்.) [1]பிறழ்புடை. [2]வாரியே யானைக் கூட்ட மதிலிட மிகுதி வாய்தல் — தாரிநீர் மடைக பாடந் தங்கடல் தகைமை வெள்ளம் — எரியே வருவா யில்நூ லீரேழென் றிசைந்த நாமம். [3]லெழுச்சி யேசம் பிரமெனு மொன்பான் பேரே. [4]சீர்துணி.

471 [1]கருவியே தொடர்பே மேகங் கவசம்பல் லியம்போ ரீட்டம்
புரிதுணைக் கார ணங்கள் படைக்கலங் கலனை பூணோ
டருவினை பலவே [2]யாழென் றாகப்பே ரீரா றாகும்;
குருவிபுள் மூல நாளாம்; குருடனந் தகனே வெள்ளி. (௬௭௧)

472 அரியேவிண் மணிமூ ராரி யரிதல்பொன் காற்றுச் சீயம்
பரிதேரை கிள்ளை காந்தி பகைசெங்நெற் கதிர்கு ரங்கு
கிரிதேரை மைவ லாரி கிளர்நிறங் கூற்றுக் கண்ணார்
வரிசோலை பாயல் பன்றி மரீசிவேய் வண்டு சேகு. (௬௭௨)

473 விறல் கூர்மை திகிரி யீர்வாள் விசிதகர் புகரே பெற்றும்
பறைபோகி சிலம்பிற் பெய்த பால்கடல் புரையே பச்சை
பொறிவார்தீ படைக்க லங்கள் பொறியிலோன் றரிசி தூமம்
அறைவார்கள் ளுடனிந் நாம மையொன்ப தொன்று மாமே. (௬௭௩)

474 தெருண்டிளோ ருரைர கார வெதுகையிற் சிறந்த செய்பு
[3]ளிரண்டோடொன் பதுபத் தென்ன விருநிலம் புகழச் செய்தான்
காண்டைவா ளிலங்கை வாட்டிய கருமுகில் மருகற் போற்று
மாண்டிரு விளங்குஞ் செந்தி லநுமநந் தையன் றானே. (௬௭௪)

[மிகை.] 1. அரங்கிடம் வட்டா டில்லம். 2. உருத்திரோ கம்வ ளர்ச்சி யுரியதாற் பொருண்மு யற்சி. 3. தெருளென்ப வுணர்ச்சி தேர்தல்; செருக்கு ளக் களிப்பே கன்னல். 4 பரணியோர் நாள்செப் பின்பேர்; பாராட்ட லுலா வல் மெச்சல். 5. கிரணமா தவன்க திர்ப்பேர் கிளர்சோதி யுடனோர் காலம். 6. சாரென்ப திடத்தி னுமஞ் சார்தலு மெயிறு மாமே. 7. வாராகங் கடலே பன்றி. 8. ஆரூப மமையா மைப்பேர் நீங்காமை யதுவு மாமே. 9. பரியந்தண் டுலம்பெண் பாற்சொல். 10. சாடமே வயிறோந் திப்பேர்; சரித்தலே நடைச ரிக்கை. 11. பிரிவுநீர்த் திவலை நாமம் வெருகுடன் பிரிவும் வைக்கும். 12. புரிவு செய் திடல்வி ரும்பல் வேறுபட் டிடலன் பும்பேர். 13. அரணமே மதில்கான் மஞ்ச மடிக்கழல் கவசம் வேலி. 14. கிரணமா பதியே வாழை திண்பனை யதுவுஞ் செப்பும். 15. வீரிய மதநீர் வீரம். 16. நாலெனு நாமஞ் செற்றை நளிர்திரைக் கடலு மாமே. 17. அரிணமான் சிவப்பே வெள்ளை யாடக மாலியா னைப்பேர்.

ரகரவெதுகை முற்றும்

---

(பி-ம்.) [1]கருவியாழ்த். [2]யாழே யான்றிடுங் கசைபன் மூப்பேர். [3]ளிரண்டு நான் கொடுதொண் ணூறெ றன் றிருநிலம் புகழச் செய்தான். [இதற்கேற்பச் செய்யுட்டொகையுங் காணப்படுகின்றது].

# லகரவெதுகை.

475 அளந்திட வரிய வேத புராணவா கமங்க ளாலும்
உளந்தெற விசைத்துப் போற்று மொருவனாய் நின்ற சோதி
வளங்கிளர் வடிவேற் றாங்கும் வள்ளல்சீர் பாதம் போற்றிக்
களங்கற வரும்ல கார வெதுகையின் கவிதை சொல்வாம். (௧)

476 ஆலமே வடவி ருக்க மப்புக்கூ டலர்நீர் நஞ்சம் ;
[1]மூலமே பேது வோர்நோய் முதல்கிழங் கொருநாள் தாரு ;
சீலமே குணந்தண் டித்தல் திகழ்சரித் திரமு ணர்ச்சி ;
தூலமே [2]பருமை பஞ்சாம் ; துல்லியந் தூவொப் பாமே. (௨)

477 அலவன்ஞெண் டொடுபூ ளைப்பே ரலர்மதி தனக்கும் வைக்கும் ;
வலவனே வெற்றி யாளன் மருவுந்தேர்ப் பாக னும்பேர் ;
இலவமோர் தருவே பூசை ; இலக்கமி லெழுத்துக் கேண்மை ;
நிலவொளி மதிநி லைப்பேர் ; நிலைபேறே மான முத்தி. (௩)

478 புலவர்பா டுநர்கண் ணாளர் புதனும்பர் கவிவேள் கூத்தர் ;
கலவலே துழாவ லின்பேர் கலத்தலென் றறைதற் பாலாம் ;
புலவுசெம் புலால்மு டைப்பேர் ; புலிசாந்தம் வயமாச் சீயம் ;
மலைவுபோர் புரித லொப்பாம் ; வல்லரி தளிர்பூங் கொத்தாம். (௪)

479 அலங்கலே தளிர்பூ மாலை யசைவுட [3]னகவி ரங்கல் ;
பலங்கனி பயன்காய் பள்ளம் ; [4]பல்லவர் விடர்கீழ் மக்கள் ;
கலங்கலன் அலம்யாழ் தட்டங் கச்சமொன் றம்பி பாண்டம் ;
இலங்கையாற் றிடைக்கு றைப்பே ரீரைந்து களன்வைப் பும்பேர்.

480 வலம்புரி நந்தியா வர்த்தம் வால்வளை வலஞ்[5]சூ ழிப்பேர் ;
புலம்பலுன் பொலித்தன் டாமை புயற்றுளி தனிமை யச்சம் ;
சிலம்புவே தண்ட மோசை செப்பிய பரிபு ரப்பேர் ;
இலம்பக மத்தி யாயம் நுதற்சூட் டென்றிருபே ராமே. (௬)

---

(பி-ம்.) [1]மூலமோர் நாள்வே ரோது முதல்கிழங் கரிநோய் தாரு. [2]பெருமை பஞ்சி துலாமெனு முப்பேர் செப்பும். [3]ன் கலுழ்வி ரங்கல். [4]நிறையொன்றே பலமு மாமே. [5]சு ழற்பேர்.

481 கலிங்கமே வானம் பாடிப் புட்சேர் தேயங் காட்டும் ;
குலிங்கமே யூர்சி வப்புக் குலிகமூர்க் குருவி வாசி ;
[1]புலிங்கமோ ரெழுத்த முற்சேர் பொறியேயூர்க் குருவி முப்பெர் ;
விலங்குகாண் மிருகங் காலின் வீழ்தலை [2]குன்று மாமே. (எ)

482 அலியென்ப நமனே பேடி படிசில்தீ நறுவி லிப்பேர் ;
[3]பலியென்ப பூசை பிச்சை பகர்பேடி வெண்ணீற் றின்பேர் ;
ஒலியென்ப திடியே காற்றே யோசையென் றோதல் முப்பேர் ;
கிலியென்ப வெருவல் பேடி ; கீல்சந்தே பிசினு ணிப்பேர். (அ)

483 ஒலியல்வெண் டோல்நீ ராறே யுடையேபூந் தொடையே யைம்பேர் ;
பொலிவென்ப பொற்பெ ழுச்சி யகலஞ்சேம் பொன்னே நாற்பேர் ;
வலியென்ப கந்து பாயல் மதுகையும் வலித்த லும்பேர் ;
சுலியென்ப வலியே யோசை கடையுகம் [4]வஞ்ச னைப்பேர். (கூ)

484 தலையாதி யிடமே சென்னி ; சால்புமாட் சிமைசான் றாண்மை ;
சிலையேவில் கல்லே மூல நாள்மரந் திண்மலைப்பேர் ;
அலைவேதான் மிகுதி யச்சம் ; ஆலாலம் விடமே வவ்வால் ;
உலைவேயி றுடன்றீ யற்பேர் ; உலூகமே யூரல்கோட் டான்பேர். ()

485 வலையமே வாவி யோர்பூண் வட்டம்வா யினிலொன் றேயாம் ;
இலையமே கூத்துக் கூத்தின் விகற்பமு மிசைக்கு நாமம் ;
மலையனே யுதவும் வள்ளல் வானேகா னகநா டன்பேர் ;
தலைவனே கொழுநன் னீசன் றராபதி முருக வேளாம். (கக)

486 வாலிவா சவன்சேய் தூறல் மதிதெளி கலைபி ராவாம் ;
காலியான் கூட்டங் காற்று ; கலாமென்ப கொடுமை கோபம் ;
பாலியே வடவி ருக்கம் பகுவளித் தலங்கள் நாற்பேர் ;
நீலியே கருமை துர்க்கை நிகழ்த்துமோர் பூடு மாமே. (கஉ)

487 ஆலியே யாலாங் கட்டித் துளிகாற் றோடமுத நீராம் ;
பாலிகை யுதடே வட்டம் பட்டவாள் மூட்டி யும்பேர் ;
சாலியே வடமீன் னெல்லுஞ் சாற்றருங் கவசம் நெற்பேர் ;
மோலியே சடைகோ டீர மணிமுடி முருகார் மாலை. (கங)

(பி-ம்.) [1]புலிங்கமே யெழுத்த முற். [2]குறுக்கங் குன்றும். [3]பலிவிழா வையம்பூசை பாதகுநீ றலியோர் தாரு. [4]கடல்வஞ்சப்பேர்.

488 மாலையே குணமொ ழுக்கே மாலிகை யிரவந் திப்போர்;
சாலையே புரவிப் பந்தி யறப்புறந் [1]தருவின் சோலை;
வேலையே தொழில ளக்கர் வேலையின் கரையோர் காலம்;
சேலையே யசோகு தூசாம்; சில்லிகை யாடை சிள்ளான். (௧௪)

489 [2]செல்விடி சிதலை யேவல் செழுமுகில் ககன மைம்பேர்;
[3]அல்லிரா விருளே யென்ப; அலர்மலர் புனல்ப ழிச்சொல்;
பல்லியம் புரவிப் பந்தி பாணிவாச் சியமே தொங்கல்;
வல்லியங் கொடிபு லிப்பேர்; மலைப்பெயர கவமோர் கூத்தாம். (௧௫)

490 எல்லையே யிரவி யீறோ டிடம்பகல் குரோச நீளம்;
ஒல்லைமாத் திரையே தொல்லை [4]கடுப்புட னிருந்தி யோதும்;
சில்லையே பிரண்டை [5]யென்ப சிள்வீடு தூர்த்தை முப்பேர்;
[6]வல்லைகாண் விரைவே யோர்நாள் நோய்கால வரவும் பற்பேர். (௧௬)

491 முல்லையோர் நிலமே கற்பே முதிர்வென்றி யிசையே யவ்வல்;
குல்லையே துளவங் கஞ்சாக் கோந்தடர் சிந்து வும்பேர்;
தொல்லையே முன்ப முந்தை; [7]சொலோம்பியே வுலோபங் கள்ளாம்;
சொல்லையே புனப்பூந் தோட்டம்; கோலங்கோற் பழமே ழிற்பேர். ( )

492 [8]வல்வலி விரைவே சூதாம்; மலர்தலே யெதிர்தல் தோன்றல்;
[9]கல்லொலி யருவி வெற்பாம்; கலகமே கலக்க மோசை;
[10]எல்லொளி பகலி கழ்ச்சி யிரவியா தெனல்கங் குற்பேர்;
நெல்லுபர் வாகை சாலி; நீலகாற் றோர்நி றப்பேர். (௧௮)

493 வில்லென்ப மூல நாளே வெஞ்சிலை யொளியே [11]முப்பேர்;
சொல்லென்ப புகழ்நெல் கள்ளே சொல்லுட கெழுச்சி மல்கல்;
ஒல்லென்ப விரைவொ லிப்பேர்; ஒலித்தல்நீட் டித்த லோசை;
கொல்லென்ப தசைச்சொல் லையக் கொலையேவல் வருத்த மைம்பேர்.

---

**(பி-ம்.)** [1]தளிர்க்குஞ். [2]செல்லுரு மேறே யேவல் சிதலைகார் ககனஞ் செவ்வேல். [3]அல்லிரு ளிரவி கங்கு லாணமென் றோதற் கும்பேர். [4]கடு [illegible] வரவே யோதும், [5]தேற்று சின்வீடு, [6]வல்லையே விரைவு நோய்காண் வலி [illegible] வரைவும் பற்பேர். [7]சொலோம்பியே. [8]வல்லென்ப விரைவே சூதே வலி [illegible] கச்சே நாற்பேர். [9]கல்லென்ப வொலிகல் வெற்பே கதித்தெழு மருவி [illegible] பேர். [10]எல்லரி யிரவிகண்ணாடி. [11]மூழி.

494 அல்லிதா தாம்பல் கயர வகவித மூலியே யைம்பேர் ;
சில்லியே வட்டங் கீரை தேருருள் சிள்வீ டேபேர் ;
கொல்லியோர் நோயே வெற்பே குலவுமோ ரிசையே முப்பேர் ;
வல்லிநீக் கம்பெண் பாடி [1]கொடிபுணை வரைவு வள்ளி. (௨௦)

495 மல்லென்ப வலியே கூத்தின் வகுத்ததொன் [2]றேவ ளப்பேர் ;
பல்சந்தி வேய்க ரும்பே பரிபதி வாழ்த ரைப்பேர் ;
இல்லென்ப தில்லை யேவீ டிராசிசா விடவில் லாள்பேர் ;
புல்சங்கம் புலிசொம் போர்புள் [3]புதல்பனை யனுடம் புன்மை. (௨௧)

496 அலமேசஞ் சலக்க லப்பை [4]யமைவெனு மூப்பேர் செப்பும் ;
சலமேநீர் வயிரம் பொய்ம்மை [5]சாற்றுமட் பன்றி முப்பேர் ;
திலமேயெள் [6]ளுடனற் பப்பேர் திகழுமஞ் சாடி முப்பேர் ;
பிலமேபா தலம்வ விப்பேர் [7] பீலிக மதுவு மாமே. (௨௨)

497 வலமேயூற் றம்பி டம்பார் வலம்வாகை திரண்ட [8]கற்பே ;
குலமேயில் சாதி கூட்டம் குடிமைரே வதிநா ளாம்பேர் ;
நிலமேபொன் [9]னிலைமை பூமி; [10]நிலைகுணம் பொழுது நேயம் ;
தலமேபா சடைநி லப்பேர்; [11]சலதரம் புயல்வா விப்பேர். (௨௩)

498 [12]கலாவமே மஞ்ஞைப் பீலி கலிகைமே கலையே முப்பேர் ;
உலாவென்ப பவனி போத லுரைக்குமோர் பனுவற் கும்பேர் ;
[13]பலாசமோர் மரம்பை வண்ணம் பாசடை யெனவும் போற்றும் ;
விலாசமே நீபம் வாழை; [14]வேலன்சேய் வெறியாட் டாளன். (௨௪)

499 சலாகைகவ் மணிநா ராசம் சவளமிம் முப்பேர் காட்டும் ;
இலாடமோர் தேயம் நெற்றி ; எலியாகு பூர நாளாம் ;
சலாவல்சே ருதல ளாவல் ; கலங்கலே யிரங்கல் சோம்பாம் ;
சிலீமுக முலைக்கண் [15]ணின்பேர் சிறையுளர் சுரும்பு மாமே. (௨௫)

---

(பி-ம்.) [1]கொடி தளை. [2]றெழில்வ ளப்பேர். [3]புதன். [4]யமைவுட லலம்வ ரற்பேர். [5]மூட்பன்றி கடுக்கஞ் சாற்றும் [6]மெயள் ளுடன்ற வப்பேர். [7]பிபீலிக. [8]கற்பேர். [9]னிலமைம் பூமி. [10]நிலையெனிதான் முறையே போழ்து நேயநற் குணமு மாமே. [11]சற்குறந் தலமும் போற்றும். [12]கலாவமே கலையே பீலி கலிகையே யரைப்பட் டிப்பேர். [13]பலாசமே நிறம்பை. [14]விளக்கிட மதுவு மாமே. [15]ணாம்பே.

500 மாலதி சாதி முல்லை மல்லிகை சொல்லு மூப்பேர் ;
[1]சோலைய ரென்னு நாமம் சோனகர் பூரி யர்க்காம் ;
மாலரே புலையர் வேடர் வழுத்துறு கவச முப்பேர் ;
காலச மால வட்டங் காற்றுடன் வட்ட முப்பேர். (௨௬)

501 அல்கல்நாள் சுருக்கல் தங்கல் அல்மதி னாகி யைம்பேர் ;
மல்கலே நெருக்கல் பொற்பே ஒளிதலே மிகுதி வைக்கும் ;
கல்வியே கலைப யிற்சி கருதுறு மறிவே முப்பேர் ;
செல்வமே சுவர்க்கங் கல்வி சீரெனும் பேரு மாமே. (௨௭)

502 மல்லலே பொலிவு வட்டம் வளம்வலி பெருமை யைம்பேர் ;
பல்லமே காடி யோரெண் பகழிமாக் கலனை நாற்பேர் ;
புல்லமே கண்ணேறுப் சேவாம் ; பொலஞ்செம்பொன் னழகு மாகும் ;
சல்லமே பன்றி முள்ளுஞ் சாற்றுசீ தளமு மாமே. (௨௮)

503 ஆலோலம் புள்ளோச் சுறபே ராற்றுஞ் ரோசைக் கும்பேர் ;
சேலேகஞ் சந்த னஞ்செஞ் சிந்தூர மிரண்டிஞ் செப்பும் ;
கீலால முதிரங் காடி கிளத்திய நீரே முப்பேர் ;
காலேயங் களபத் தோடே கறக்குமான குழவுக் கும்பேர். (௨௯)

504 கலித்தலே பொலிவை மூச்சி தழைக்குதல் [2]முப்பேர் காட்டும் ;
வலித்தலே கட்டல் கோணல் மலர்ச்சியோ டென்ப டற்பேர் ;
இலிர்த்தலே சிலிர்த்த லொன்றல் ; வல்வையே பொழ்தே பொய்கை ;
மலர்ச்சியே யிறுமாப் பின்பேர் மலர்வுடன் பொலிவு மாமே. (௩0)

505 [3]சல்லாப முட்பு றம்பொத் துளபொரு டலைமைக் கும்பேர் ;
உல்லாச மந்த வாள முள்ளத்தின் களிப்பி ரண்டாம் ;
கல்லாரம் [4]குளிரி மஞ்சள் கடிகமழ் கழுநீர் முப்பேர் ;
நல்லார்மெய்த் தவர்கற் றோராம் நவ்விவாள் விழியார்க் கும்பேர். ()

506 உலகென்ப வளவே பூமி ; ஒல்கலே [5]குழைவு தேய்தல் ;
பலவென்ப [6]மிகுதி பாகல் ; பலகாப மிலக டர்முன் ;
பிலவங்கங் குரங்கே தேரை பேகமா னொன்றே முப்பேர் ;
செலவென்ப வழியி னுமங் கழிதற்குஞ் செப்ப லாமே. (௩௨)

---

(பி-ம்.) [1]சோலைய. [2]ஒல்லுவ. [3]சல்லாபம் பொருணமை தொலைவு. [4]குளிரு. [5]குலைறவு. [6]பலாய் குழ்தல்.

507 [1]இலஞ்சியே மகிழ்ம ரப்பேர் ஏரிகொப் பூழ மாகும்;
கலம்பகந் துழாவ வின்பே ரொருபனு வற்றுங் காட்டும்;
துலங்கலே விளங்கல் தூய்மை; [2]சூலியே சிவன்கா ளிப்பேர்;
இலம்பாடே வறுமை துக்கம்; இல்லமே வீடு தேற்று. (௫௩)

508 ஓலமே கட்டல்பாம் பேரிசை; உலமர [3]லருக்கல் துக்கம்;
[4]இயாலமே யாச்சாத் தாரோ டிருங்கரு நிசியி ரண்டாம்;
ஏலமே மயிர்ச்சாந் தேலம்; இலிங்கமாண் குறிகு ளிகைம்;
[5]சூலலனும் பேர்பிள் சூலே; [6]தோலிதூ சழிவி லாமை: (௫௪)

509 உலைதலே யுருங்க லுமை மழிதற் குரைக்கற் பாற்றே;
புலையர்பூ ரியரே மற்றச் சண்டாளர் தமக்கும் போற்றும்;
[7]தொலைதாக் கோலே பெற்றந் தோற்றமுந் துலையு மேற்கும்;
கலுழியே கான்யாற் றின்பேர் கலங்கிய நீரு மாமே. (௫௫)

510 மல்லிகை விளக்குத் தண்டே மாலதி யிரண்டே யாகும்;
கல்லோல மீத்த ரங்கம் கடுகிய வொலியுங் காட்டும்;
சொல்லேரி னுழவர் தாமே துலங்குமந் திரிகற் றோர்கள்;
வில்லேரி னுழவர் பேரே வீரர்க்கும் வேந்தர்க் கும்பேர். (௫௬)

511 மலைத்தலே பொருதல் கூடல் மறுத்திட லொலிந்த தூற்பேர்;
உலக்கையே [8]யோண முரோங்கல் ஊடற்றி ருதலே நிந்தை;
கலக்கமே கதனத் தோடே புரோதனம் கழறற் பாற்றே;
இலக்கமோ ரெண்ணு றிப்பேர்; இலாஞ்சனம் பேரே புள்ளி. (௫௭)

512 நாலமே கூந்தற் பூகந் தாதலம் பனையே நாவே
சீலமார் பண்பே நாப்ப ணுண்கலஞ் செப்பு மேழ்பேர்;
பாலமே நெற்றி பூமி மழுப்படை நடக்கும் பாலம்;
நீலமே பனைகால் நெய்தல் நிறத்திலோன் றிருண்ம ணிப்பேர். ()

---

(பி-ம்.) [1]இலஞ்சிபுன லேரி கொப்பூ ழெயில் குணம் வகுள மாவாம். [2]சூலியே சிவன்கா ளிப்பேர் சோற்கருப் பிணியேயென்ப [3]லழுக்கல். [4]இலாலமே. [5]சூலெனு நாமஞ் சூழ்தல் சூலைநோய் பீலு மாமே. [6]தோலியே யழிவு தூசு. [7]துலையேகோ லேற்றந் தூரந் தோற்றமே துலாரா சிப்பேர். [8]வுரோண யோங்கல் லொருகரு விக்கும் பேரே.

513 சாலமாக் குழுவ ரக்கா மர்மரம் வலைசா லேக
மேலெயில் கூட்டந் தாரு விச்சைபூ முகைபத் தேபேர் ;
[1]கோலநீ ரோட்டம் பாகொப் பனைபன்றி குழவு பீர்க்காம் ;
காலழுக் காலம் வைகல் கடிமதி டனக்கு மாமே. (௩௯)

514 கூலநீர்க் கரைவா லாண்மாக் குழுப்பாகல் முசுப்பல் பண்டம்
யேனுமா வணம்வ ரம்பே முழு ரையென் றீரைந் தேபேர் ;
சாலகங் கால தப்பேர் சாற்றுபூ முகைவ லைப்பேர் ;
ஆலலை யொலியா டற்பேர் ; அலந்தைநீர் நிலையே துன்பம். (௪0)

515 [2]உலவையே யொட்டை கொம்போ ரோர்குடி குலமே காற்றே
நிலவுபா சடையே வள்ளி நிகழ்நாம மிருநான் காகும் ;
வலவைவஞ் சப்பெண் வல்லோன் ; மலைமேழும் மலமா சின்பேர் ;
கலவைசே றுதல்சாந் திப்பேர் காலாழ்சே றதுவு மாமே. (௪௧)

516 அலகுநெற் கதிரே யாதி யாரஞ்சோ றிணிபுன் மூக்குப்
பலகறை யெண்ணு ளம்பு மகிழின்பா லெண்பேர் பன்னும் ;
திலகமஞ் சாடி சுட்டி சிறுநுதற் குறியே மூப்பேர் ;
உலகமே திசைவிண் பூமி யுயர்குணஞ் சனமு யர்ந்தோர். (௪௨)

517 கலையேமீ னிரலை காஞ்சி கல்விகால் கால நுட்பம்
நிலையார்காழ் முசுநூல் தூசு நிலாவுகிர் பன்னொன் றேபேர் ;
குலையேவிற் குதைந டுக்கங் குலைதல்நீர்க் கரைதா றேபேர் ;
மலையேமால் வரைமீன் யானை வம்புய நிருவாட் சிப்பேர். (௪௩)

518 பீலிவெண் கவிகை சின்னம் பெருவரை கலாபி தோகை
காலியங் கால வட்டங் கனகம்வாச் சியமெண் பேரே ;
தோலிப மழகே தோல்வி துருத்திதோல் பலகை யாறும் ;
[3]மாலிவெண் கள்ளே வெய்யோன் வழுதருமோர் நிருத னான்பேர்.

519 காலிடற் றறிம ரக்கால் காற்றுத்தே ருருடாள் மூங்கிற்
பாலனங் குரங்கூற் [4]றாற்றம் பகர்வாய்க்கா லீரா றேபேர் ;

(பி-ம்.) [1]கோலநீர்க் கொழுந்தே பாகு குழவீர்க் கழகே பனை—வேறு மொப் பனைபல் கோலமிலந்தையின கனியீ ரைம்பேர். [2]உலவையே யிலைகாற் றொட்டை யூர்குடி குலமே வள்ளி—நிலகுவா ரிலங்கின் கொம்பே யிபன்மாக் கொம்பி லாம்பேர். [3]மாலிகெங். [4]றாறறம் பழுவம்வாய்க் கால்பன் மூப்பேர்,

[1]வேலியூர் நிலங்காற் றேனைத்த ; விலோதமே பதாகை கூந்தல் ;
காலிலி பகலோன் றேரு ரருணன்காற் றப்பாந் தட்பேர். (சரு)

520 பால்வெண்மை திசைவ குத்தல் பயங்குணம் பக்க மாட்சி
சால்வெண்பால் விதையி டப்பேர் சாற்றுமீ ரைந்தென் றேயாம் ;
[2]ஆல்தெண்ணீ ரசைச்சொல் நாம மாமல வெனவே நாற்பேர் ;
வால்வெண்மை மிகுதி போட்ட மழவுதூய் மைவா லிப்பேர். (சகூ)

521 கோல்துலாங் கணைசம் மட்டி [3]தூகிலிகை குறியாழ்த் தந்தி
யேஎலங் கைதமை தீட்டு மெழிற்கோல்வேந் தன்கோ லெண்பேர் ;
நூல்கொடி யெல்லை வள்ளி நுணங்குசாத் திரந்தந் தெண்ணம் ;
வேல்கையா யுதப்பொ துப்பேர் [4]வேறலும் பகையு மாமே. (சஎ)

522 அலரிகண் வரியே நீவி யருக்கனீ ராளி பூவோ
டிலகெழின் மரமே தேனீ யிரும்பூறு நாம மெட்டாம் ;
கலனையே கலப்பை வாசிக் கலனையென் றிருபேர் காட்டும் ;
மலர் [5]தேனீர் பூவ சைச்சொல் ; [6]வல்லிகை குழைவீ ணைப்பேர். ()

523 பாலையேர் மரம்பா டற்றீஞ் சுவைநில மந்நி லத்தின்
மாலையார் பாடல் பொன்மேற் பிரிதல்வாய்ந் துடனே போதல்
வேலைபாற் பிரிவு ரைத்தல் [7]வெம்மையென் றெண்பேர் வைக்கும் ;
காலையே கால நாளாம் ; கல்வியாணஞ் சுபஞ்செம் பொன்பேர். (சகூ)

524 மால்வலி பொலிவே சோழன் மறத்தலை பெருமை மேகங்
கால்நெடி யோன்ம யக்கங் கருமைகண் ணேணி தொன்மை
யேல்புதன் வேட்கை யேயென் றியம்புநா மம்மீ ரேழாம் ;
போல் [8]விறல் கேசரே யேதி பொப்புடன் படைய சைப்பேர். (ருo)

525 உலமெனீர் காற்றுத் துன்ப நூயிர்நீப்போ டிரச லூற்றம்
பிலமார்வால் திரண்ட கற்பேர் பட்டடைப் பேரோன் பானும் ;

---

(பி-ம்.) [1]வேலியே மதில்காற் றின்பேர் விளங்குமூர் நிலமே யென்ப. [2]ஆல்தெண்ணீர் வடம சைச்சொ லாமல வெனவே யைம்பேர். [3]வதரிதூ ரிகைக்கோற் றந்திரி—யேழுமெந் சனக்கோல் செங்கோ லளவுகோ லேர்க் கோல் பத்தாம். [4]வோறலும். [5]தெண்ணீர். [6]வல்லிகை காத ணிப்பேர் மாசுணம் யாழே யாகும். [7]வெண்மை. [8]விரல்.

[1]புலமேசெம் பொன்ன ரிக்கம் புந்தியைம் புலம் விளைந்த
நிலமேதிக் குடனி டப்பேர் நிகழ்த்திய தனிமை யென்பேர். (௫௧)

526 பண்டை[2]யோ ரிசைல கார வெதுகையிற் பகருஞ் செய்யுள்
[3]மண்டல மதனி லைம்பா னென்னவே வகுத்தல் செய்தான்
நிண்டிறற் கொடிசெஞ் சேவற் றிகழ்ந்தசெவ் வேளைப் போற்று
மண்டர்கள் [4]விளங்குஞ் செந்தி லருமருந் தையன் றானே. (௫௨)

[மிகை.] 1. நிலமகனரசன் செவ்வாய். 2. உல்லியே மதிள்வெண் பூடாம்; உலோகமே யுலகி ரும்பாம். 3. தில்லமே காடோர் தாரு. 4. இலையேபா சடையு லோபம்; இல்லமே வீடு தெற்கு. 5. சொலவென்ப நெல்கள் வார்த்தை சொற்புக ழுதவு மாமே. 6. பல்லென்ப பலவே தந்தம். 7. உலகர்பாண் டியரு லோகர். 8. பில்கலே துளித்தல் சோர்தல்; பீலித்தண் டெஃகம் வாலம். 9. பல்லவந் தளிரே தேசம். 10. மிலைச்சல்சூ டுதல்மி குத்தல்; வேலாவ லயங்கூ வேலை. 11. புலர்த்தலே யுலர்த்தல் பூசல். 12. தலைப்பெயல் மழைவி டுத்தல் புதுப்புனல் வரத்துஞ் சாற்றும். 13. நால்வாயன் சுஞசி யானோன். 14. துலக்கமே விளக்கந் தூய்மை சொற்புகழுதவுஞ் சொல்லும். 15. சிலதரா ரியரே நண்பர். 16. விலங்குத லெதிர்த்தல் சேறல் விரிதலே விலங்கு தற்பேர். 17. நிலயமே நடம்ந டத்தின் விகற்பமு நிற்றற் கும்பேர். 18. வாலமே படைகொக் கின்பேர்; வாலுவர் சிறுவர் மூடர். 19. வாலுகம் வெண்ம ணற்பேர் வழுத்துறு மிளாமைக் கும்பேர். 20. வாலியே வலிவெண் மைப்பேர். 21. சாலினி தேவ ராட்டி சாற்றுங்கள் வாணிச் சிப்பேர். 22. பலவமே பழுங்காய் பள்ளம்; பல்லிகோ கிலமோர் பூடாம்.

லகரவேதுகை முற்றும்.

---

(பி-ம்.) [1]பொலமே [2]றூற் றிகழ்ல. [3]எண்டிசை தனிலைம் பானு மிருமூன்று மென்னச் செய்தான் - திண்டிறல் மயிலூர் செவ்வேற் சேவகன் றனைப் போற்றும்.—[இதற்கேற்பச் செய்யுட்டொகை காணப்படுகின்றது] [4]புகழுஞ்

# வகரவெதுகை.

527 நாட்டுமெண் பதைகட் கெல்லா நாதனாய் நவிவி லானாய்க்
கோட்டமில் குணத்து ஞானக் கொழுஞ்சுட ராங் குகேசன்
பாட்டளி ஊதையுஞ் செங்கேழ்ப் பங்கயப் பாதம் போற்றி
[1]யீட்டமார் நலவ கார வெதுகையின் றொடையி சைப்பாம். (க)

528 அவனிபா ரகரே வேந்தர் அம்புவி மூப்பேர் போற்றும் ;
புவனநீர் புவிபி ரண்டாம் ; பூவம்ப [2]னடல்வேள் வீரன் ;
[3]பவனமே நாக லோகம் படிகாற்றே மனையி ராசி ;
நுவணை நூல் பிண்டி நுட்பம் ; நாவோரக் கரமெள் ளியானை. (உ)

529 உவணமே வயினதேய னுயர்ச்சியெங் கழுகே மூப்பேர் ;
சிவணலே யெழுச்சி கூடல் ; செவ்வீரம் பாசி தேயம் ;
சுவணமே பொன்னெ றிற்பேர் ; சுவர்க்கம்விண் ணுலகங் கொங்கை ;
யவனர்தோற் கருவி யாளர் தபதிசோ னகரென் றாமே. (௩)

530 திவவென்ப இழிவே யாழின் வலிக்கட்டி னரம்பே செப்பும் ;
குவவென்ப திரட்சி மேடு [4]குவிதல்சொற் பெருமை கூட்டம் ;
தவவென்ப மிகுதி குன்றற் றயவுடன் றவமே நாற்பேர் ;
சுவவென்ப சுவர்க்கஞ் சுண்டன் றெருத்தபுண் மூக்கு மாமே. (௪)

531 அவிநயம் பனுவல் நாட காங்கமென் றிருபே ராகும் ;
சவிமணிக் கோவை யந்தஞ் சாருவே யிரதங் காந்தி ;
[5]கவிதொடை வெள்ளி யேநீர்க் கரக்கைவாக் குள்ளோன் மந்தி ;
நவிலல்சொல் லோதலே பண்ணல் ; நவிரேயாண் மயிர்பண் வாளாம்.

532 சிவமேநன் மைபஞ் சாக்கினி திகழ்முத்தி குறுணி நாற்பேர் ;
பவமேயுற் பவம்பா வப்பேர் ; பாவனா சனம்[6]பாம் போர்நீர் ;
நவமேகார் காலங் கேண்மை புதுமையொன் பான்பேர் நாட்டும் ;
[7]கவனங்கான் கலக்கம் வாசிக் கதியெனு மூப்பே ராமே. (௬)

---

(பி-ம்.) [1]யீட்டமாய் வரும்வ. [2]ன் மதவேள். [3]பவனநாக லோகம் படிகால்போழ் திராசி யில்லம். [4]குவித்தல். [5]கவிதொடர். [6]தூசுப் பாம்பாம். [7]கவனமே கலக்கம் வாசிக் கதிபோகான் வெம்மை நாற்பேர்.

533 நவிரமே குடுமி புன்மை [1]நற்பசுந் தோகை வெற்பாம் ;
அவிரதம் நோற்றி லாமை யனவ ரதமுமே யென்றும் ;
கவிகையே குடைகொ டைப்பேர் ; கவந்தந் தெண்ணீர்மட் டைப்பேர் ;
தவிசணை தடுக்கே மெத்தை யிலகட நாற்பேர் சாற்றும். (௭)

534 அவையென்ப சவையே கற்றோர் ; [2]அவிர்தலே யொளிவீ றற்பேர் ;
சிவையென்ப துமையே கொல்ல னுலை [3]மாவேர் செப்பும் ;
கவையென்ப காடா யில்லிபங் கவர்வழி யெள்ளி ளங்காய் ;
நவையென் றிகழ்ச்சி குற்றம் ; நவியமே மழுக்கோ டாலி. (௮)

535 கவுரவ மிளமை வெள்ளை ; கவிப்பேமு டுதல்கு டைப்பேர் ;
சவுரியே திருமால் கள்ளன் சனியமன் கலுழ னைம்பேர் ;
கௌரியே யுமைகா ளிப்பேர் ; கேவலந் தனிமை முத்தி ;
மவுலிதார் முடிகோ டீரம் ; மவ்வல்மல் லிகைமுல் லைப்பேர். (௯)

536 கவுசியே குழைவு துன்பம் ; [4]கவுத்துவமோர் மணியத் தப்பேர் ;
சவுரியங் களவே மேதி சாற்றிடு மாற்றல் முப்பேர் ;
கவுசிகன் விசுவா மித்திர [5]னூற்றுப்பத் துக்க ணன்பேர் ;
[6]கவுசிகம் விளக்குத் தண்டே யோர்பண்கோட் டானோர் பாட்டாம்.

537 அவலேநீர் நிலைவ யற்பேர் ; ஆவம்வின் னாணி தூணி ;
குவலயம் நெய்தல் பூமி குளிர்கருங் குவளைக் கும்பேர் ;
கவலைசெந் தினைபோர் வல்லி கவர்வழி வெருவல் துன்பம் ;
சுவல்பிடர் புயமேல் மேடே சொற்கொல்லை யைம்பே ராமே. (௧௧)

538 நாவகம் நடுவே நாவாம் ; நவ்வோரக் கரநா வாயாம் ;
சாவக ரொருதே யத்தோர் சமணரி லிருத்தி பெற்றோர் ;
சேவகம் வீரம் யானை துயிலிட [7]மிருபேர் செப்பும் ;
தீவகம் [8]பிழியே பார்வை செழுஞ்சுடர் விளக்கெ னும்பேர். (௧௨)

539 ஆவலர் கொண்கர் நாம மாற்றுகா தலர்க்கு மேற்கும் ;
சீவனி யோர்ம ருந்தே செவ்வழித் திறத்தோ ரோசை ;

---

(பி-ம்.) [1]நகமஞ்ஞை மருத யாழாம். [2]அதுவென மொழியு மாறும். [3]மாவே ரோரி. [4]கருதுமோர் பாட்டென் றேயாம். [5]ன் கண்ணனிந் திரனே யென்ப. [6]கவுசிக மிசைபட் டாடை கடுங்கோட்டான் விளக்கின் றண்டாம். [7]ஞ் சேவித் தற்பேர். [8]வழியே.

கோவனே வசிட்ட னீசன் குயவனென் றிம்முப் பேரே ;
மேவலே சேறல் வேட்கை ; வேவமே தனிமை துன்பம். (௧௩)

540 ஆவலே வளையா சைப்பேர்; அவதிமட் டிடாமை காலம் ;
தாவலே திவலை யார்ப்பாம் ; துவக்கேதோல் பிணக் கிரண்டாம்;
காவலே சிறைநீர் தாருக் [1]கதைத்ததம் பட்ட நாற்பேர் ;
வாவலே தாவல் கூத்து வ்பாவுடன் வவ்வாற் கும்பேர். (௧௪)

541 கவடென்ப தியானை கட்டுங் கயிறுகப் புடன்[2]ப ணைப்பேர் ;
குவடென்ப மலையி னுச்சி கொழுங்குவ டெனவுங் கூறும் ;
சுவடென்ப கணிதத் தோன்றுமொழுங்கற்குஞ் சொல்லற் பாற்றே;
[3]கெவுடஞ்சொற் பேரே கோடி கேடிலோர் தேய மும்பேர். (௧௫)

542 உவாவென்ப திளையோன் பவ்வ மும்பல்தெண் கடலே நாற்பேர் ;
திவாகர னனந்தன் வெய்யோன் ; செவியென்ப காதே கேள்வி ;
சவாதுபூ சும்பூச் சின்பேர் தக்கவோ ரிடத்தோ லைப்பேர் ;
சுவாகாமந் திரமே யங்கித் துணைவியென் றிருபே ராமே. (௧௬)

543 அவாவென்ப தாசை சோம்பாம் ; அவதார மிறங்கல் தோற்றம் ;
சுவேதமே வேர்வு வெண்மை சொன்மாலை முப்பேர் செப்பும் ;
விவாவென்ப பெருமை யின்பேர் [4]விளங்குறு மிரவும் போற்றும் ;
*சுவாமிசெவ் வேள்வி யாழ முனைவரு மரன்பேர் சொல்லும். (௧௭)

544 ஆவியே நாற்ற மூச்சோ டாருயிர் வாவி தூமம் ;
கூவிரந் தேரே தேரின் [5]கொடிஞ்சியென் றிருபேர் கூறும் ;
காவிதன் பூர நாளே ஞதியோ டெரிநாள் முப்பேர் ;
[6]காவியென் பதுகள் ளின்பேர் கருங்குவ ளைக்கு மாமே. (௧௮)

545 சிவப்பென்ப சினக்கு றிப்பேர் செம்மைபாங் கறுப்பு மற்றே ;
உவப்பென்ப பொலிவி னுமை மோகையென் றிருபேர் கூறும் ;
நிவப்புயர் வுடன்ப ரத்தல் ; நிவறலே துளக்க மொய்த்தல் ;
தெவிட்டல்கான் றலொலி த்தல் நிறைத்தல்[7]சொம் படைத்தி டற்பேர். ()

(பி-ம்.) [1]கறங்கிய துடிப றைப்பேர். [2]ப ணைப்பேர். [3]கெவுடென்ப கொடியின் பேரும். [4]விரைவுறு மிரவு மாமே. [5]கொடிஞ்சியுங் குவளைக் கும்பேர், [6]காவியே யோர்சி றங்கள், [7]செம் படைத்தி

546 பாவென்ப பாப்புப் பாவல் பனுவனூல் பாத்தேர்த் தட்டாம்;
தாவென்ப பகைவ ருத்தம் தாண்டுதல் வலியே கேடாம்;
தூவென்ப பகைவால் தூய்மை தூவியூன் பற்றுக் கோடாம்;
ஓவென்ப பிறங்க லோடே கொடுமையோங் கார மாமே. (உ௦)

547 கவ்வையெள் ளிளங்காய் துன்பம் கட்டுரும் பழிச்சொல் கள்ளாம்;
துவ்வையே பருக ஞமம் சொற்றபின் னுக்கி றைச்சி;
தவ்வைமூத் தாளே யீன்றாள் சாற்றுமூ தேவி முப்பேர்;
செவ்வுதண் பழனஞ் செவ்வை; [1]தெவ்வுகொள் சமர்ப கைப்பேர்.

548 அவ்வியு மழுக்காற் றின்பேர் ஆன்றபொய் யுட்னி ரண்டாம்;
துவ்வுத லுண்ட லோடே ஆப்பத மிரண்டுஞ் சொல்லும்;
பவ்வமே கடலு வாப்புற் புதமரக் கணுவு ருப்பேர்;
எவ்வமே தனிமை துன்பம்; ஏவலே யானை யேவல். (உஉ)

549 ஆவிய ரிப்பர் வேடர்; ஐவராங் [2]களர்வி யாழும்;
தீவியே புலிவி ளக்கம்; தீவிரங் கிரணம் வல்லே;
தூவிபுள் ளிறகே தூவல்; துவ்வனு பவமே சுத்தம்;
நீவியே துடைத்த லாடை நெருங்குகொய் சகம ளித்தல். (உ௩)

550 கூவலே கிணறே யோசை; [3]கோவைதாழ் வடநூல் விம்பம்;
நாவலர் கவிஞர் கூத்தர்; நாவாய்மே வதியம் பிப்பேர்;
சேவல்புள் ளாணே காவல்; சீவனே யுயிர்வி யாழும்;
ஓவர்வந் தித்து நிற்போர் தபநிய ரிவையோ தும்பேர். (உ௪)

551 [4]பாவைபெண் பாவை யாகும்; பாவமே மறங்க ளிப்பாம்;
ஆவா ணம்ம றைப்போ டார்த்திடுக் தூசி ரண்டாம்;
பூவைநா கணவாய் காயா பொற்புகோ கிலங்கிள் ளைப்பேர்;
[5]நாவிபோர் பூடே நாவி; நவமணிப் பேர்பொன் காசாம். (உ௫)

552 கவரிசா மரைதேர் மேறு கத்தூரி மிருக நாற்பேர்;
தவறலே விடுதல் குற்றஞ் சாற்றிடுஞ் சோம்பே மூப்பேர்;

---

(பி-ம்.) [1]தெவ்வேகொள் பகைவ லிப்பேர். [2]களவி யாழும். [3]கோவை தாழ் வடம்நூல் விம்பங் கோத்திட லதுவு மாமே. [4]பாவைபெண் பாவ மாகும். [5]காவியே கொப்பூழ் பூடே.

துவரேசெம் பவளங் காட்டந் துவர்சிவப் பிகலே யாக்கம் ;
கவர்தலே பெட்பி னுமங் காந்துகோ டற்கு மாமே. (உசு)

553 சவலையோ ரினவெண் பாட்டே [1]சாற்றுமின் னற்கும் பேரே ;
திவசமே நடுப்ப கற்பேர் செப்புமோர் நாளுஞ் சொல்லும் ;
உவமைநே ரலங்கா ரப்பேர் ; உவர்ப்பிகழ்ச் சிவேண் டாமை ;
[2]துவர்தலே வகிர்த லோடு சொற்றவோர் சுவையு மாமே. (உஎ)

554 ஐவன மலைநெல் லின்பே ரான்றவோர் தாரும் வைக்கும் ;
செவ்வியே யழகு காலம் ; தீவினை வேள்வி பாவம் ;
நவ்விமா னழகே யத்த நாளுட னிளமை நாற்பேர் ;
வெவ்வினை முயலுந் தியோகம் விளங்கிரு வினைக்கும் பேரே. (உஅ)

555 ஆவணம் புணர்தம் வீதி யங்காடி யுரிமை நீளுங்
கூவிரஞ் செறியும் பீடம் சாதனங் கூறு றேபேர் ;
கோவணங் கல்ல பூத்துங் குழிவட்டங் கௌபீ னப்பேர் ;
[3]பூவணி சதுக்கந் தொங்கல் ; [4]பூவலே சிவப்புப் பூத்தல். (உகூ)

556 உவளக மதிலோர் பக்க மோதந்தப் புரமே வாவி
சவருமுப் பளமே பள்ளஞ் சாற்றுமே ழிருபேர் வைக்கும் ;
குவளைகண் காவி யின்பேர் ; குவாலெனப் மேடே கூட்டம் ;
இவறலே மறவி யாசை யென்பபே ரிசைக்கு மப்பேர். (௩௦)

557 இவர்தலே யெழுச்சி யாசை யேறுதல் சேறல் மேவல்
தவறிலா நடத்த லோடே பரத்தலுஞ் சாற்று மேழ்பேர் ;
அவைபுளிங் கறிது வைத்தல் ; துவன்றலே நெருங்க லோசை ;
தவரெனுங் கிளவி யோகர் தனுவெனு மிருபே ராமே. (௩க)

558 ஆவென்ப தாச்சாத் தாரோ ரக்கரம் பசுவி ரக்கம்
மேவுஞ்சொல் லிசையே யிச்சை வியப்புட னேழ்பேர் கூறும் ;
கோவென்ப குலிச மான்பார் குருசில்கண் கிரணந் திக்கே
யேவல்விண் சுவர்க்கம் பூமை மியம்பல்நீர் பன்மூன் றேபேர். (௩உ)

---

(பி-ம்.) [1]தரிகருப் பம்மின் னற்பேர். [2]துவர்தலே வகிர்த லுண்டல் துன்றலாற் பதந்து வர்த்தல். [3]பூவணி சதுக்க நாமம் புதுநறும் பூந்தொங் கற்பேர். [4]பூவலே தீண்டாப் பூப்பும் புரத்தலுஞ் சிவப்பு மாமே.

559 தேவென்ப தேனே நாற்றந் தித்திப்பே தெய்வத் [1]தாரே
தாவுமென் டிசையே செவ்வை தாரதல மிடமெண் பேரே;
காவென்ப துலைதண் சோலை கலைமின்றோட் சுமைப சுப்போர்
மேவுங்கற் பகம்வ ருத்த மிடல்வட [2]மொன்பான் பேரே. (௫௩)

560 மாவென்ப பெருமை வண்டு வாசிநேன் மாவ சைச்சொல்
[3]மேவொரு கணிதஞ் செல்வம் விலங்கொரு தருவெ றுப்புப்
[4]பூவுயர் திருவ மைத்தல் பொறைபொ றுத் திடுதல் [5]கான
றுவெளிர் கருமை சாயல் சாற்றுமீ ரெண்பே ராமே. (௫௪)

561 [6]மாவுய ரியவ கார வெது கையின் வழுத்துஞ் செய்யுட்
டாவுயர் மூன்றி னோடெண் ணென்கெனச் சாற்றல் செய்தான்
பாவுய ரெழில்கூர் செவ்வேள் பங்கயப் பாதம் போற்றும்
ஆவுயர் செந்தின் மேவு மருமருந் தையன் றனே. (௫௫)

[மிகை.] 1. குவையென்ப திரட்சி மேடே குவிதலே பெருமை கூட்டம். 2. தவமேயைந் தவித்தல் குன்றல் மிகுதியுஞ் சாற்றற் பாலாம். 3. சுவாவென்ப சுவைத்தல் நாயாம்; துவரித ழதரம் யானை. 4. அவ்வையே தனைப்ப யந்தா ளருந்தமி ழொருமட ந்தை. 5. பாவியே பசரி நாமம் பாவித்தல் பாவிக் கும்பேர். 6. தேவையோ ரிடச்சொ லிந்த்ரன்; சிவிகை சூட் டேர்தி யாமே. 7. பூவலர் வனப்பே கூர்மை பொலிவிண்டை பிறப்புப் பூமி. 8. சைவமே யிளமை யின்பேர் சமையமா கமநூ மாகும்—கைவலம் பனித்தல் மூத்தி கன்றிலாக் கறவைக் கும்பேர்—நைவா மென்ப தானே நடம்வீ ரிருபே ராமே. 9. தவாவினை மலையே யுச்சி. 10. காவதங் காக்கை காதம். 11. நுவ்வ லாற் பதமே யுண்டல்; சுவையினி மைசு வைத்தல். 12. நோவலே யப்பத் தின்பேர் நுவலரு நோயு மாமே. 13. மாவெலி யவுணன் யாளி.

வகரவேதுகை முற்றும்.

---

(பி-ம்.) [1]தாரு. [2]மேழ்பே ராமே. [3]மே ம வு ம் பொ ற். [4]பூவின்பங். [5]காலன். [6]மதுகையார் கேள்வி யிக்கோர் வழுத்துமெல் வினவ கார-எதுகையில் வழுத்துஞ் செய்யு ளேழுமப் பானுஞ் செய்தான்-செதுகையார் மந்தைஞ யூர்தி செய்யபொற் பாதம் போற்றும்-அதிகமார் வளமைச் செந்தி லருமருந் தையன் றனே.

# ழகர வெதுகை.

562 [1]தடையில மும்மு தற்குந் தனிமுத லாகி யென்று
முடைபயில் புவன மேத்து மொண்பொரு ளானோன் செங்கை
யடையுறு மயில்வேற் றாங்கு மண்ணல்பொற் றாளைப் போற்றி
இடையின மெனும்ழ கார வெதுகையின் றொடையி சைப்பாம். (௧)

563 நிழலரு ளொழுக்கஞ் செல்வம் நீழல்நோய் குளிர்ச்சி [2]யைம்பேர் ;
கழல்கழங் கொடுசெ ருப்புக் காலுட னறைக ழற்பேர் ;
குழல்விலோ தந்து ளைப்பேர் ; கொழுமையே வளங் கொழுப்பாம் ;
சுழல்கறங் கேகாற் றாடி ; துழாய்துன்பந் [3]துளவென் றாமே. (௨)

564 விழைவென்ப புணர்ச்சி காதல் ; மேழமே கவச மாடாம் ;
கழையென்ப புணர்த மூங்கில் கரும்பென விரும்பு மூப்பேர் ;
குழையென்ப தளிரே சேறே கொழும்பொனின் றோடுங் கூறும் ;
உழையென்ப தியாழோ ரோசை யுழையலோ டிடமா னும்பேர். (௩)

565 விழவவா மிதுன ராசி விளம்பிலுற் சவமு மாகும் ;
மழவெழி லிளமை குட்டி ; வழக்கர்நீள் வழிவ ழக்கம் ;
குழவெழில் மழவு [4]குட்டி ; கோழ்கொழுத் தல்கொ ழுப்பே ;
[5]இழவெனும் பேரி ழத்த லெழுந்திட விரண்டு மாமே. (௪)

566 அழுவல்நற் றுணம்வி சாலம் ; அழுங்கல்கே டிரங்க லோசை ;
கழுமல்பற் றோடும யக்கங் கடுந்துயர் மிகுதி மல்கல் ;
செழுமைபொற் பின்பே ரேமாட் சிமைகொழு மைவ ளப்பேர் ;
கெழுமல்கற் கல்பொ ருந்தல் ; கிழிநிதிப் பொதிப டங்கீள். (௫)

567 வழுவென்ப [6]குற்றங் கேடு வந்துறுஞ் சோர்வே மூப்பேர் ;
கழுமுள்மா தளையே சூலங் கழுக்கடை வேற்பொ துப்பேர் ;

---

(பி-ம்.) [1]வின்மய நுதற்சி றந்த மிளிர்கனி யமுத மூண்ட-பொன்மயச் செங்கேழ் வேணிப் புங்கவ னிதயம் பூத்த-சின்மயச் சோதி யான செந்தில்வே லோனைப் போற்றித்-தொல்மையோர் சொலும்ழ கார வெதுகையின் றொடையைச் சொல்வாம். [2]கோடு. [3]துளவே புல்லாம். [4]வண்ணங் குருளையென் றோதற் பாலாம். [5]இழவென்ப திழவி ழத்தல். [6]சோர்வு கேடு வழுகுற்றம் வழுவே நாற்பேர்.

எழுவென்ப பரிகந் தம்பம்; எழூச்சியோர் நோயுயர்த்தல்;
ஒழுகலென் பதுவே நீள மொழுக்கமென் றிரண்டு மாமே. (கூ)

568 பொழிதலே சொரித லீட்டல்; பூழியன் வழுதி சேரன்;
வழுதியே வங்க மாறன்; வழுத்தல்தோத் திரமேமெச்சல்;
தொழுதியே நெருக்கங் கூட்டம்; தொழும்பரே யடிமை மள்ளர்;
கொழுதியே பொலிவு நாமங் கொழுத்தற்கும் வழுத்தற் பாற்றே. ()

569 அழுங்கலே [1]பரப்பு நாடே யறைபறை நடுக்கந் துக்கம்;
கெழுவுரை தகைமை யாட்சி; கேழ்நிற மொளியொப் பாகும்;
இழுமென லினிமை யோசை; எழானரம் பிசையோர் புள்ளாம்;
விழுமமே சிறப்புச் சீர்மை விடாத்துய ரதுவு மாமே. (அ)

570 யாழ்முத ஞளே யாந்தை யறைவீணை மிதுனம் நாற்பேர்;
தாழ்தலே வணங்க லாசை குறைதல்தங் கற்பேர் நான்காம்;
கூழ்பயி ருணவே பைம்பொன்; குழாயேயுட் டுளைதண் டாகும்;
ஊழ்முறை வெயில்ப கைப்பே ருறுதெய்வம் நற்கு ணப்பேர். (கூ)

571 அழனமே பிணஞ்செந் தீயாம்; அழகே[2]சற் குணமெ ழிற்பேர்;
கிழமையே யுரிமை பண்பாம்; கேழலே யானை பன்றி;
பழமையே வேண்டற் பாடுந் தொன்மையும் [3]பாணுஞ் செப்பும்;
தழுவுதான் விரைவு தற்பேர் [4]செறுத்தல்மன் னுதலுஞ் சாற்றும்.

572 இழுதுநெய் யிழுக்க வின்பேர்; இழுக்கென்ப மறத்தல் கீழ்மை;
கழுதுபேய் பரண்வ ண்டின்பேர்; கழுந்திநித் திலங்க ழைப்பேர்;
பழுதென்ப மறைவு குற்றம் பகருறு மிடமே முப்பேர்;
வழுதலே புனத்தி டும்பொய்க் கழுவழு தலைப்பேர் வைக்கும். (௧௧)

573 உழிஞையே சிறுபூ ளைப்பே ரோதெயில் வளைத்தற் கும்பேர்;
[5]கழிவென்ப மிகுதி சாதல் கடந்திடல் வரைதல் போக்காம்;
குழியமே மருந்திற் கெல்லாம் பொதுபாரு வளையங் கோலம்;
[6]தொழிலியற் றிடுமூ ஞற்றந் தொல்லையே பெருமை சோரம். ()

---

(பி-ம்.) [1]பரப்பூர். [2]சர்க் கரையெ ழிற்பேர். [3]பாணுஞ். [4]செறுதல். [5]கழிதலே. [6]தொழில்களை வாரீரா பாரந் தொல்லையே பெருமை யூக்கம்.

574 வழியென்ப திடமே மார்க்கம் வருமக வுடன்பின் னும்பேர் ;
குழியென்ப தகழ்தல் குக்கி ; குழிசியே மிடாப்பா னைப்பேர் ;
பழியென்ப பழித்தல் குற்றம் ; பழிச்சல்தீச் சொல்வ ழுத்தல் ;
[1]ஏழிலென்ப தழகே வள்ளி ; எழிலியே வள்ளல் மேகம். (௧௩)

575 உழவையே புலிமே திப்பேர் ; உழுதலே [2]புழுத ருய்யல் ;
தொழுவென்ப தழலே தானே சேஎதி நாளுஞ் சொல்லும் ;
மூழமக னறிஞன் மூடன் ; [3]மோழையே காடி கஞ்சி ;
உழுவலே [4]யாரா வன்போ டோங்கெழில் புணர்ச்சி [5]நாற்பேர். (௧௪)

576 ஊழியே யுகாந்தம் பூமி ; [6]உழப்பென்ப வலியுச் சாகம் ;
தோழியே யரக்குப் பாங்கி ; சூழேநோய் [7]சூழ்த லாகும் ;
பூழியே புழுதி சேறும் ; பூழிலே யகில்பூ மிப்பேர் ;
காழிய [8]ரப்ப வாணி கர்க்கும்வண் ணூர்க்கும் பேரே. (௧௫)

577 வழுக்கென்ப மறத்த லின்பேர் வழும்பெனும் பேரு மாக்கும் ;
நிழற்றலே நுணுக்கம் நீழல் நிழல்செய லெனவே மூப்பேர் ;
கிழத்தியே மனைவி மூல்லை மருதப்பெண் ணெனக்கி ளத்தும் ;
பழுப்பரி தாரத் தின்பேர் முதிரிலைப் பருவ மாமே. (௧௬)

578 தாழையே தெங்கு கைதை ; தழல்கிளி கடிகோல் செந்தீ ;
ஏழைபெண் மிடியன் பேதை ; இழையேபூ ணிழைத்த னூற்பேர் ;
நூழையே வருவாய் நுட்பஞ் சாளர நுவலற் பாற்றே ;
மாழ்கலே யிரங்கல் மோகம் வழுத்துரோ தனமு மாமே. (௧௭)

579 ஈழமே சிங்க ளம்பொன் னிழுத்துறுங் கள்ளே மூப்பேர் ;
வேழமே கொறுக்கை மூங்கில் வெற்றிமால் யானை கன்னல் ;
காழகங் கருமை யாக்கை கழுதைதூ சுடன்க டாரம் ;
கீழிடங் கயமை பள்ளங் கிழக்குட னூற்பே ராமே. (௧௮)

580 நீழலே யொழுக்கம் வெள்ளி நிலவேயாற் பதமே நாற்பேர் ;
சூழலே யிடம்வி சாரஞ் சொற்கூழைப் படையே மூப்பேர் ;

(பி-ம்.) [1]எழில்மணி யிளமை நாம மியன்றநல் வள்ளிக் கும்பேர். [2]கழுத. [3]மோழையே காடி கஞ்சி மொன்றுநீர் மோழைக் கும்பேர். [4]யெழுமை பெற்றி. [5]பான்பாம். [6]யூகமென் றறைதன் மூப்பேர். [7]கீலக்கஞ் சூழ்தல். [8]ருப்பு.

ஞாழலே ¹புலினி கோங்கு நாறுங்கத் தூரிக் கும்பேர் ;
சாழலே விளையாட் டோடே சாற்றுங்கா டிக்கும் பேரே. (கக)

581 உழுந்துசொற் படிறி ஞும மோதுறு மாடத் தின்பேர் ;
கொழுங்கிரி வரையே மவ்வல் ; கோழியே யுறையூ ரோர்புள் ;
கழங்குசே யாட லிந்தி யங்கொடிக் கழலோ ராடல் ;
வழங்கலே நடத்தல் நீட்டல் வருமுறை யுலாவ லாமே. (உ0)

582 உழைக்குத ²லழுங்கல் வீழ்ந்தே யுழக்குற லுஞற்றே மூப்பேர் ;
சுழற்சியே கறங்க லாழித் தொல்படை யோர்காற் றும்பேர் ;
தெழித்தல்வா யால தட்டல் செப்புறு மோசைக் கும்பேர் ;
³ஒழுக்காறென் பதுவ ழிப்பே ரொன்றடைக் கலமு மாமே. (உக)

583 கழுறுவீ றென்னு நாமங் குழவியுந் தூம்புங் காட்டும் ;
கிழவனே யறிஞன் மூத்தோன் மருதத்தோன் றற்கி ளத்தும் ;
தழைதழைக் குறலே பீலிக் குடையெனச் சாற்றற் பாலாம் ;
நுழையெனு நாம நுண்மை நுழைவாயி றனக்கு மாமே. (உஉ)

584 காழென்ப மணியின் கோவை கற்பால் வித்துச் சேகு
நீள்கத வின்றாழ் காந்தி நிறத்தமா லை⁴கோ லெண்பேர் ;
கேழ்வியாழ் செவியே கல்வி ; கெழுவென்ப நிறங்கெ ழுஉப்பேர் ;
வேழ்வியே மகநாள் பூசை வேள்விக்குண் டங்கொ டைப்பேர். (உங)

585 ⁵பாழியே வழிவி லங்கின் படுக்கையூர் பெருமை பாயல்
வாழிய தவத்தோர் வாசம் மலைமுழை யகல மெண்பேர் ;
சூழியே சுனையே வேலை தும்பியின் முகப டாப்பேர் ;
⁶நாழிநா ழிகைய ளக்கும் நாழிவேய் பூரட் டாதி. (உச)

586 ஆழியே கரைகள் வட்டம் ஆர்கலி நேமி வீகம்
பாழிசேர் கரித்து திக்கைந் நுனியெனப் பகரற் பாற்றே ;
தாழியே பாணி நாட்பேர் சாகரங் குடங்கர் மூப்பேர் ;
⁷நூழிலே கொலைதோல் செக்கு நுவறிரை கொடிக்கோற் றுன்பேர்.

(பி-ம்.) ¹புலினி. ²லழுங்கல். ³ஒழுக்காறே வலியி ஞமம். ⁴தோ லெண்பேர். ⁵பாழியே வலிவி லங்கின் படுக்கையே பெருமை பாயல்-வாழிய தவத்தோர் வாசம் மலைமுழை யகல மேயூர்-தாழியாழ் கடலே யாழே சாற்றிடும் பாணி லாரூர்-வீழிலான் மாவின் பாடே விண்ணெனும் பன்முப்பேரே. ⁶பாழிநீர் நிலையி ஞேடு பட்டமென் றைம்பே ராமே. ⁷நூழில்தோல் வணிகன் கோற லுவல்கொற்றன் றிரைசெக் கியானை.

587 ஊழ்த்தலே தசையி னுமம் உறுபத னழிவே தீர்த்தல்
தாழ்ப்பிலா நினைத்தல் செவ்வி சாற்றிடும் பேரோ ரைந்தாம்;
வாழ்த்தலே வழுத்த லாசி; மாழ்குமான் றலைநாள் மாழ்த்தல்;
ஆழ்த்தலே மடிமை [1]செற்பேர்; அழுக்காறே பொறாமை பொய்யாம்.

